# ஞானச்சுடர்



ஐப்பசி மலர் 2008



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள்வழி



**தானம்தவம் இரண்டும் தங்கா வியன்உலகம்**
**வானம் வழங்கா தெனின்**

பொருள்: மழை பெய்யாவிட்டால் அகன்ற உலகத்திலே தருமமும் தவமும் ஆகிய இரண்டு நிகழா. (19)

**நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**
**வானின் றமையா தொழுக்கு**

பொருள்: எவ்வகை உயர்ந்தவர்க்கும் நீர் இல்லாமல் வாழ்க்கைக் கடமைகளைப் புரியமுடியாது. அதுபோல நீரின் இடையறாத ஒட்டமும் மழையில்லாமல் பொருந்தாது. (20)

# நற்சிந்தனை



ஒற்றுமை யிந்த ஊரிடை ஓங்குக

பண்– கௌசிகம் இராகம்– பைரவி

**மாதம் மும்முறை மாரிவி ளங்குக**
**மாத வர்மனம் நாளும் மகிழுக**
**பாத கம்பழி பாவம் தொலைகுக**
**தீத கல்சிவ நாமஞ் சிறக்கவே**

**ஒற்றுமை யிந்த ஊரிடை யோங்குக**
**மற்றும் நற்குணம் முற்றும் ஆகுக**
**கற்றுங் கேட்டுங் கழலடி போற்றுக**
**நற்றவம் இந்த நாட்டில் விளங்குக**

**யோக நாதன் உரைத்த விசைத்தமிழ்**
**தாக மாகவே தான்புகல் வார்தமக்(கு)**
**ஆக வேண்டிய யாவுமாம் அந்தியில்**
**யோக நாதன் அடிமலர் உய்வரே**

உ



# நாலகம் ஞானச்சுடர்



வெளியீடு – 2 சுடர் –130

## 2008 ஐப்பசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| தொண்டைமானாறு செல்வச்..... | ஆ. தில்லையம்பலம் | 1 - 5 |
| "நாலுபேர் சென்ற வழி...." | கு. சோமசுந்தரம் | 6 - 7 |
| விதியை வென்றிடுவோம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 8 - 11 |
| எலுமிச்சம் பழத்தின்.... | ப. அருந்தவம் | 12 - 14 |
| சைவக்கிரியைகள் | பொன். சுகந்தன் | 15 - 16 |
| வினைகள் தீர்க்கும்..... | கா. கணேசதாசன் | 17 - 18 |
| திருவுருவ வழிபாட்டின்...... | இ. சாந்தகுமார் | 19 - 22 |
| பன்னாலையம்பதி... | க. நித்தியதசீதரன் | 23 - 25 |
| சைவர்கள் அவசியமாகத்..... | கந்த சத்தியதாசன் | 26 - 29 |
| என்னிலும் ஈசன் எனக்கு... | சிவ. சண்முகவடிவேல் | 30 - 32 |
| இறப்பை எண்ணி... | திருமதி சி. யோகேஸ்வரி | 33 - 35 |
| நித்திய அன்னப்பணி | | 36 - 38 |
| தகப்பன் சாமி | வாரியார் சுவாமிகள் | 39 - 41 |
| ஆத்திசூடி | ஔவையார் | - 42 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 43 - 45 |
| மதுரை கள்ளழகர் கோயில் | வல்வையூர் அப்பாண்ணா | 36 - 48 |


அன்பளிப்பு:-

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்:- 021- 2263406, 060- 2219599

FAX: 021- 2263406

பதிவு இல. Q.D/60/NEWS/2008

அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.

உ

# ஞானச்சுடர்
# புரட்டாதிமாத வெளியீடு

***வெளியீட்டுரை:-***

புரட்டாதிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை ஆச்சிரம வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குபவரும், பொலிகண்டி கந்தவன ஆலய பிரதம குருவாக விளங்கும் பிரம்மஸ்ரீ ச. வைத்தியநாதக்குருக்கள் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது வெளியீட்டுரையில் சந்நிதியான் ஆச்சிரமம் எனும் இச்சிறிய ஸ்தாபனத்தின்மூலமே இவ்வளவு பெரிய சமய சமூகப் பணிகள் அனைத்தையும் மேற்கொள்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது எனக்கு வியப்பாகவே உள்ளதுடன் இச்செயல்கள் யாவற்றையும் நோக்குமிடத்து சந்நிதிவேற்பெருமானது திருவருள் ஆச்சிரமத்தைச் சூழ வியாபித்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது எனவும் மண்டபத்தில் கூடியிருந்த அடியார்களுக்கு உணர்வு ததும்ப எடுத்துக் கூறினார். அத்துடன் இம்மலர் வெளியீட்டின் மூலம் நாமும் சந்நிதியானை தரிசிக்கும் வாய்ப்பு கிடைக்கின்றது எனவும்கூறி சுருக்கமாக தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்கள்.

***மதிப்பீட்டுரை:-***

129ஆவது புரட்டாதிமாத மலருக்கான மதிப்புரையை ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்பு கொண்டவரும் சந்நிதிவேற் பெருமானின் அடியவனாகத் தன்னை ஆட்படுத்திக் கொண்டவரும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகவும் கடமையாற்றும் திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தன் மதிப்புரையின்போது ஞானச்சுடர் மலர் ஆரம்பித்த காலம்முதல் நான் ஒரு தடவையாவது மலரை மதிப்பீடு செய்வதற்கு அழைக்கப்படுவது எனக்கு மிகவும் பெருமையாயிருக்கிறது என்றும் இம்மலர் தொடர்ச்சியாக மாதாமாதம் பல்வேறு படிநிலைகளுடன் கூடிய வளர்ச்சியை கண்டுவருவது நாம் அனைவரதும் கண்கூடே. இவ்வளர்ச்சிகள் யாவும் ஆற்றங்கரையானது அற்புதச் செயல்களே எனவும் விதந்து கூறினார்.

அத்துடன் இம்மலரில் தொடர்ச்சியாகவே திருக்குறள், நற்சிந்தனை, பொன்மொழிகள், கவிதைகள், கட்டுரைகள் யாவும் வெளிவருவதும், இவ்வாக்கங்கள் யாவும் தரமாகவும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து சைவமக்கள் யாவருக்கும் மிகவும் பயனுள்ளதாகவே அமைந்துள்ளது எனக்கூறியும் ஆக்கங்களை விளக்கிக் கூறியும் தனது மதிப்பீட்டுரையினை நிறைவுசெய்தார்கள்.

உ

# சுடர் தரும் தகவல்

## அந்திமக்கிரியையும் ஆசௌச விளக்கமும்

விண்ணைத் தொடுமளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட இன்றைய காலகட்டத்தில் தொன்றுதொட்டு நிலவிவரும் மரபுகளும் சம்பிரதாயங்களும் சைவ சமயக்கோட்பாடுகளும் தேவைதானா? என்று வந்துவிட்டது. ஆகவே காலத்தின் தேவையறிந்து ஒரு நல்ல வழிகாட்டியாக வெளிவந்திருக்கும் நூல்தான் அந்திமக் கிரியையும் ஆசௌச விளக்கமும்.

கொழும்பு சைவநீதி வெளியீட்டுக் குழுவால் வெளியிடப்பட்டிருக்கும் இந்த உயரிய அரிய நூலை எமக்கு அளித்திருப்பவர் ஆன்மீக எழுத்தாளர் திரு செல்லையா நவநீதகுமார் ஆவார். அவரது அரிய படைப்பாக வெளிவந்திருக்கும் இந்நூல் எமது சமுதாயத்துக்கு நல்லதொரு கலங்கரை விளக்காக அமைந்துள்ளது என்று கூறினால் அது சாலப்பொருந்தும். சைவசமயத்தவர்கள் ஆன்மார்த்த பரார்த்த பூஜை விதிமுறைகளையும் இல்லங்களில் நிகழும் கிரியைகளையும் அறிந்திருத்தல் அவசியமாகும். தொடக்கு என்றால் என்ன? அது என்ன நிறம்? என்று கேட்கின்ற இன்றைய இளந்தலை முறையினருக்கு நல்லதொரு விளக்கந்தரும் நூல் இது. ஒருவர் இறந்தால் அவருக்குச் செய்யவேண்டிய கிரியைபற்றி எடுத்தியம்பும் இந்நூல் ஓர் அரும் பொக்கிஷமாகும். கையடக்க அளவில் அழகாக அச்சிடப்பட்டு வெளியிட்டிருக்கும் இந்நூலாக்கக் குழுவினர் பாராட்டுக்குரியவர்களே! இவர்களது இந்த அரிய உயரிய பணியால் மனிதவர்க்கம் நல்ல பயனடையும் என்பது திண்ணம்.

சைவசமயம் அந்திமக்கிரியைகள் பற்றி எளிய தமிழ்நடையில் இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் எழுதியிருக்கும் இந்நூலாசிரியரின் அரும்பணி வரவேற்கத்தக்கது. இன்ன இன்ன கிரியைகள் இன்ன இன்னவாறு செய்யப்பட வேண்டும் என்றும் அதன் பயன்கள்பற்றியும் தெளிவாக விளக்கியிருக்கின்றார். இந்தக் கிரியைகளை ஏன் செய்யவேண்டும்? எதற்காகச் செய்யவேண்டும்? இவற்றால் நாங்கள் அடையும் பயன்கள் என்ன? போன்ற வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் நன்கு முயற்சி செய்துள்ளார் நூலாசிரியர். இவரது இந்த அரிய பணியால் சைவ உலகு பெருமையடைகிறது என்று கூறினால் மிகையாகாது.

ஆகவே, ஈழத்திலுள்ள அனைத்து சைவ மன்றங்களும் நிறுவனங்களும் சபைகளும் இந்நூலை உவந்தேற்று ஆசிரியரை ஊக்குவிப்பது தலையாய கடமையே. இந்நூலை வாங்கிப்படித்து அதன்படி நடப்பதே நன்மை பயக்கக்கூடிய கைம்மாறாகும்.

## ஐயா! நியாயந் தானோ?

கந்தா,நாதா கார்த்தி கேசா
கருணைக் கடலே குமாரா
எந்தையே செல்வச் சந்நிதி
இருந்தருள் புரியும் வேலா
உந்தன் பாதம் நம்பும் எங்கள்
உணர்வலைகள் தெரியா தென்னே!
இந்த நேரம் உன்னைச் சுமந்தே
இருக்கின்றேமை ஒருக்கால் பாராய்

## திருப்புகழ்

தனியனேம் என்று உனைந் நினைந்தென்றுன்
தாள்பணிந்து நிற்கும் அடியேமை
கனி, எனா வந்து காத்து வைப்பதுன்
கடமையாயிருக்கக் கந்தா நீ
பனிமலை கள்மீது குறவள்ளி யோடு
பாடி ஆடி விளை யாடினால்
இனியனே எமக்கு ஆர்துணை நிற்பார்?
எங்கள் சந்நிதியிற் பெருமாளே.

## அருள் செல்வச் சந்நிதிப் பெருமாளே!

கலியுக முதித்த கந்தனே குகனே
கண்ணுதல் தந்த முருகனே
கடிந்து பிரணவப் பொருள் தெரியா அயனை
கணீரெனக் குட்டியவனே
வலிமையன் தாரகனைக் குன்றோ டடர்த்தவா
வாடுவோர் வாட்டம் தீர்ப்பவா
வடிவேலைத் தாங்கிய வலிமையை யுடையவா
வள்ளலே எமை யொருக்கால் பார்
நலிந்து நாம் படும்பாடு நாவாலே சொல்லவா
நாடுநடப் பெல்லாம் தெரியாதோ!
நடுநின்று எமைக்காக்க நல்லதோர் தருணமிது
நம்பனே ஓடி வாராய்
அலைந்து நாம் எங்கள் குறை
அனைத்தையும் உனக்குரைக்க அப்பனே உனையடைந்தோம்
ஆறுமுகம் பன்னிருகை யுடனே யெழுந்தருளும்
அருள் செல்வச்சந்நிதிப் பெருமாளே.

*முதுபெரும்புலவர், கலாபூஷணம், ஆசிரியர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்.*

# ஐப்பசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திரு சி. கிருபாகரன்.**
(இலண்டன்) அச்சுவேலி தெற்கு)
**திரு M. சதாசிவமூர்த்தி**
(கனடா)
**திரு A. சண்முகராஜா**
(இலண்டன்)
**திரு ஆ. யோகதாசன்**
(பூதவராயர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு)
**திரு செ. ஞானசபேசன்**
(கிராம அலுவலர், ஏழாலை)
**திரு மா. பாலேந்திரம்**
(ஆசிரியர், வைரமகால் வதிரி)
**திருமதி இராசரத்தினம் இராஜேஸ்வரி**
(சந்தைவீதி, சுண்ணாகம்)
**திரு ந. சிவகுமார்**
(ராஜன் எலக்ரோனிக், அச்சுவேலி)
**திரு சி. உதயகுமார்**
(கிராம அலுவலர் கைதடி மேற்கு)
**திரு உரிமையாளர்**
(காசிப்பிள்ளை அன்சன்ஸ், சங்கானை)
**திரு சி. மகேஸ்வரன்**
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், தீவகவலயம்)
**திரு செ. இராசநாயகம்**
(காப்பாளர்- இ.போ.ச. அல்வாய்)
**திரு ம. ஸ்ரீகாந்தன்**
(ஐங்கரன் ஸ்ரோர்ஸ், சங்கானை)
**கனம் அதிபர்**
(யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)
**திரு வே. முருகவேள்**
(நெடியகாடு, வல்வெட்டித்துறை)
**செல்வி க. சசிலேகா**
(ஆசிரியர், தோப்பு அச்சுவேலி)
**கனம் அதிபர்**
(யா/ ஞானாசாரியார் கல்லூரி, கரவெட்டி)

**கனம் தலைவர்**
(ப.நோ.கூ. சங்கம், கட்டைவேலி)
**கனம் அதிபர்**
(யா/ தேவரையாளி இந்துக் கல்லூரி, வதிரி)
**திரு ஆ. வடிவேலு**
(இளை. அதிபர், தும்பளை தெற்கு)
**திரு சி. பத்மராசா**
(நவிண்டில், கரணவாய்)
**திரு ச. நாராயணன்**
(G.S, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு)
**திரு க. சந்திரகுமார்**
(விதுஷா கிறீம் ஹவுஸ், சங்கானை)
**திரு அ. சிவனேசராசன்**
(ஆசிரியர், கந்தசாமி கோவிலடி கோப்பாய்)
**திரு ச. இராசசேகரம்**
(இளை. பொது முகாமையாளர் நீர்வேலி)
**திரு க. சத்தியதாசன்**
(வில்லிசைக் கலைஞர், சிறுப்பிட்டி)
**திரு இ. சண்முகசுந்தரம்**
(ஆசிரியர், மந்திகை)
**திரு தி. இரவீந்திரநாதன்**
(கலைமதி வீதி, கட்டைப்பராய்)
**திரு வ. இராசநாயகம்**
(கவிதா பொடிபிலோர்ஸ், கரவெட்டி)
**திரு வீ. வடிவேலு**
(தும்பளை தெற்கு, பருத்தித்துறை)
**திரு S. செல்வராசா (செல்வி)**
(சேவிஸ்ரேசன் புலோலி தெற்கு)

---

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

காசுக்கட்டளை
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
T.P.NO. 021-2263406
060-2219599
FAX.NO. 021-2263406

காசோலை
செ. மோகனதாஸ்
க. இல. 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

www. sannithiyan. org

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

### திரு ஆறுமுகம் தில்லையம்பலம் அவர்கள்

செல்வச்சந்நிதி முருக பக்தரும் அருளாளரும் ஆன தவத்திரு முருகேசு சுவாமிகளின் அடியவனும் தொண்டனும் ஆகிய இச் சிறியேன் அவர்கள் பாதம் பணிந்து சமர்ப்பணம் செய்கின்றேன்.

இக்கட்டான இக்காலப்பகுதியில் சந்நிதியான் ஆச்சிரமம் ஆலயப்பணி, அறப்பணி, அன்னப்பணி போன்றவற்றை அனைத்து பக்தர்களுக்கும், அடியவர் களுக்கும் வழங்கிவருகிறது. இப்பணி களை வழங்கிவரும் ஆச்சிரம நிர்வா கத்தை குருபணியாக ஏற்று நிர்வகித்து வரும் அருளாளரும் ஆனந்தாச்சிரம குருவான தவத்திரு மயில்வாகனம் சுவாமி களின் முதன்மைத் தொண்டனுமாகிய மோகனதாஸ் சுவாமிகளுக்கும், அவர் குடும்பத்தினருக்கும் ஆச்சிரமப்பணியில் தம்மை அர்ப்பணித்துத் தொண்டாற்றும் தொண்டர்களுக்கும் முதற்கண் இறைவன் ஆசி வேண்டுகின்றேன்.

1940ஆம் ஆண்டளவில் ஆலயத் தின் தென்பால் அமைந்துள்ள தென்னை மரத் தோப்பின் நடுவே மடம் அமைக் கப்பட்டு அடியார்களுக்கு அன்னம் வழங் கும் பணியைக் குருவானவரும் முருகனின் பக்தனுமாகிய தவத்திரு மயில்வாகனம் சுவாமிகள் சில தொண்டர்களையும் இணைத்து ஆனந்தாச்சிரமம் எனும் நாமம் சூட்டி வழிநடாத்திவந்தார் பலகாலம்.

அக்காலப்பகுதியிலே பல நூற்றுக் கணக்கான தொண்டர்களைச் செம்மைப் படுத்தும் வகையிலே கட்டுக்கோப்புடன் பணிபுரியப் பழக்கப்படுத்திவரும் சுவாமி அவர்கள் நான்கு சகாப்த வரலாற்றுப் பணிக்காலத்திலே முருகன் பாதம் சென் றடைந்தார்.

அதன்பின் சிறிது காலம் சுவாமி களின் உறவினரால் ஆனந்தாச்சிரமம் நிர் வகிக்கப்பட்டு வந்தது. அவ்வேளையிலும் பல தொண்டர்கள் ஆச்சிரமப்பணியில் செயற்பட்டார்கள். அவர்களில் மோகன தாஸ் சுவாமிகளும் ஒருவராக இருந்தார்...

ஆனந்தாச்சிரமம் தொடர்ந்தும் தனது பணியைத் தொடரமுடியாது போயிற்று. அன்றைய அசாதாரண நிலையே. ஆச்சிரமத்தின் பல பகுதிகள் சேதமடைந்தன. இச்செயலால் ஆச்சிரமச் செயற்பாட்டில் தடங்கல் ஏற்பட்டது. இவற் றைத் தீர்க்கமாகச் சிந்தித்த மோகனதாஸ் சுவாமிகள் குருபணியைத் தான் தொடர அன்னதானக் கந்தனிடம் விண்ணப்பித்து அனுமதியைப் பெற்று அரசம்மா மடத் தைக் குத்தகைக்குப்பெற்று குருபணி யைத் தொடர எண்ணி எவ்வகையான வளங்களும் அற்ற மடத்தைப் பொறுப்பேற் றுச் 1988ஆம் ஆண்டுப் பகுதியில் சந்நிதி யான் ஆச்சிரமம் எனும் நாமத்தைச் சூட்டிக் குருபணியைத் தொடர்ந்தார்.

ஒருசில ஆண்டுகளில் தனது விடாமுயற்சியாலும் குருவானவரின் ஆசி யினாலும் பணியைப் பெரும்பாலும் சீரடச் செயற்படுத்தி வளர்த்துவரும் வேளையிலே

மட உரிமையாளர்களின் தவறான அபிப் பிராயத்தினால் தமது மடத்தைப் பெற்றுக் கொள்ள அப்போதைய நிர்வாக நீதி மன்றை அணுகினார்கள்.

இச்சம்பவ காலப்பகுதியில் தவத் திரு முருகேசுசுவாமிகள் தமது அடியார் கள் சூழ அன்பர் அருணாசலம் ஐயாவின் வீட்டில் வந்து தங்கிச் செல்வது வழக்கம். (இச்சிறியேனும்) தவத்திரு முருகேசு சுவாமிகள் எங்கும் நிலைகொண்டு வாழ்ந்த தில்லை. நீர்வேலியில் அன்பர் சதாசிவம் வீடு, சிறுப்பிட்டியில் கந்தையா ஆசிரியர் வீடு, கைதடியில்ஆசிரியர் மகள் தேவி வீடு, நவிண்டிலில் திருநாவுக்கரசு வீடு, பொன்னம்பலம் வீடு, உரும்பராயில் புளியங்குளம் தர்மலிங்கம் பவானி வீடு, பருத்தித்துறையில் வைத்தியர் பத்மநாதன் வீடு, இச்சிறியேனின் வீடு, திருநெல்வேலி யில் அரசரத்தினம் வீடு, தும்பளையில் தனது உறவினர் முத்துராசா வீடு, அல் வாயில் மருமகன் பாலுவின் வீடு போன்ற தனது அன்புக்கும் பாத்திரமான சிலர் வீடுகளில் தங்கியிருந்து ஒரு வியாழன் மாலை அவர் தங்கியிருந்த வீட்டில் இருந்து தன்னை ஏற்றிச்சென்று இச்சிறி யேனின் வீட்டில் இரவுப்பொழுதைக் கழித்து மறுநாள் அதிகாலை செல்வச் சந்நிதியான் பாதம் தொழுது தான் செல்ல வேண்டிய இடத்துக்குத் தன்னை உந் துருளியில் கொண்டுசென்று விடவேண்டு மென அடியேனைப் பணித்திருந்தார். அவ் வண்ணமே அடியேனும் அத்தெய்வீகப் பணியை ஏற்றுச் செயற்பட்டேன்.

காலம் நகர்ந்தது. இக்காலப் பகுதியில் மோகனதாஸ் சுவாமிகளுக்குப் பக்கபலமாகத் தவத்திரு முருகேசு சுவாமி களும், பழைய ஒரு உந்துருளியுமே துணையாயின. நீதிமன்றின் ஆணைப்படி மடத்தை உரிமையாளர்களிடம் ஒப் படைக்க வேண்டிய காலம் நெருங்கியது. அவ்வேளையில் மிகவும் வருந்திய மோகனதாஸ் சுவாமிகளுக்கு ஆறுதல் கூறி மனத்தைத் தேற்றியவர்கள் தவத்திரு முருகேசு சுவாமிகளும் அவரின் அன்பு அடியார்களுமேயாவர். மோகனதாஸ் சுவாமிகளும் தவத்திரு முருகேசு சுவாமி களும் அன்பர்கள் பலரும் சந்நிதியானின் சுற்றாடலில் குத்தகைக்கோ அறுதி விலைக்கோ வெற்றுக்காணியோ அல்லது செயற்படாது இருந்த ஒரு மடத்தைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியில் தனித்தும் கூட்டாகவும் செயலாற்றி முயற் சிகள் பல மேற்கொண்டும் பலன் கிடைக் காமற்போகவே இறுதி முயற்சியாக வேல வனை ஆலய வாசலிலே நின்று வேண் டுகை செய்த தவத்திரு முருகேசு சுவாமி கள் மோகனதாஸ் சுவாமிகளிடம் வந்து (அரசம்மா மடத்தில்) இன்று சந்நிதியான் ஆச்சிரமம் இயங்கும் காணி யாருக்கு உரியது என விசாரித்து அறிந்து கொண் டார்....

அவ்வேளை அருகில் நின்ற அடி யேனை இக்காணிக்கு உரித்தானவரை யும் அவர்களின் வீடும் உனக்குத் தெரியுமா என வினவினார். நான் ஆம் என பதில்கூறினேன். அக்கணமே இரு வரும் அவரிடம் போய்வருவோம் என்று உந்துருளியை எடு எனக்கூறிவிட்டுப் பின்புறத்தே ஏறிக்கொண்டார். அடியேன் சுவாமிகளைக் கொண்டுசென்று உடுப்பிட்டி சந்தைவீதியில் அமைந்துள்ள தங்கராசா நகைமாடத்தில் இறக்கினேன். எம்மைக் கண்ட நகைமாட உரிமையாளர் திரு தங்கராசா அவர்கள் சுவாமிகளை இரு

கரங்கூப்பி வணங்கிவிட்டு வந்த காரணத்தை வினவினார். (எனக்கு முன்பே பழக்கமானவர்) சுவாமிகள் உங்களுடன் கதைக்க விரும்பி என்னைக் கேட்டுக் கொண்டமையால் அழைத்து வந்தேன் என்று கூறினேன். திரு தங்கராசா எங்களை வீட்டுக்குள் அழைத்துச் சென்றார். சுவாமிகளுக்குத் திரு தங்கராசாவுடன் அறிமுகமோ பழக்கமோ அதுவரை இருக்கவில்லை. இருக்கைகளில் எங்களை இருக்கச்செய்து தான் குருபக்தியுடன் காரணத்தை நின்ற வண்ணமே கேட்டார். சுவாமிகள் அவரை இருக்கையில் அமரச் செய்துவிட்டுத் தன்னிடம் இருந்த பையினில் இருந்து விபூதியைக் கையிற் கொடுத்து நெற்றியினிலும் பூசிவிட்டுக் கூறினார். நீதிமன்றின் ஆணைப்படி ஆறு மாதத்தில் மடத்தை ஒப்படைக்க வேண்டியுள்ளமையால் பிறிதொரு காணியில் ஆச்சிரமத்தை இயக்கிப் பணியைத் தொடர உங்களது காணியை நியாயமான விலை பெற்று ஆச்சிரமம் நடாத்தத் தரும்படி சுவாமிகள் கேட்டார். சில விநாடிகளில் முருகபக்தனும் அறக்கொடையாளனுமான திரு தங்கராசா அவர்கள் தான் காணியை விற்கமாட்டேன் எனக்கூறிவிட்டார். மீண்டும் சுவாமிகள் வேறு இடம் கிடைக்காமையால் இப்பணி தொடரமுடியாமையை விநயமாக எடுத்துக்கூறினார். செவியுற்ற திரு தங்கராசா சுவாமிகளை வணங்கி ஆச்சிரமம் அமைப்பதற்கு என நீங்கள் வேண்டிக் கொண்டமையினால் அந்த ஆற்றங்கரையான்தான் உங்கள் உருவில் வந்துள்ளானோ தெரியாது. நான் அக்காணியை ஆச்சிரமத்திற்குத் தருகிறேன் ஆனாலும் எனது மனைவியின் ஞாபகார்த்தமாக எமது செலவிலே ஒரு கிணறு அமைப்பதற்கு உரிய நிலையத்தை விட்டுத் தருவதுடன் தனது இறுதிக்காலத்தில் தங்குவதற்கு சிறு காணியையும் தவிர்த்துக் காலம் காலமாக ஆச்சிரமம் இயங்கும் காலம் வரை இயக்குவதற்கும் உறுதிப்பத்திரமும் வழங்குவதாக வாக்குக்கொடுத்தார்.

அந்த உறுதியுரையைப் பெற்றுக் கொண்ட நாம் ஆற்றங்கரையான் வாசலில் வந்து அவரைத் தரிசனம் செய்து காணிக்கு வந்தடைந்தோம். என்னைத் தம்பீ! என்று அவர் அழைப்பதும் நான் அவர்களை மாமா என அழைப்பதும் வழக்கம். எனது மனைவி பிள்ளைகள் சுவாமிகளை அப்பப்பா எனவும் அழைப்பதுண்டு. அவ்வளவுக்கு மிகவும் நெருக்கமாகவே பழகிக்கொண்டோம்.

காணியடிக்கு வந்துசேர்ந்ததும் திரு அருணாசலம் ஐயாவின் வீட்டில் மண்வெட்டி எடுத்துவரும்படி பணித்தார். அதன்படி நான் மண்வெட்டியுடன் வந்தேன். ஒரு இடத்தைக் காட்டி மூன்று பொழி மண்ணை வெட்டும்படி பணித்தார். அன்றிலிருந்து புதிய சந்நிதியான் ஆச்சிரமத்தின் வேலைகள் ஆரம்பமாகின. அந்தக்காலம் பொருளாதாரத்தடை காரணத்தினால் கட்டிடப் பொருட்கள் வாங்குவது இயலாத வேளை முருகப்பெருமானின் அருளாலும் முருகேசு சுவாமிகளின் பங்களிப்பினாலும் மோகனதாஸ் சுவாமிகளின் முயற்சியினாலும் பல அன்பர்களினதும் உதவிகளினாலும் சந்நிதியான் ஆச்சிரமப் பணிகள் முழுமைபெறாத நிலையில் 1995.05.05இல் நல்லை ஆதீன முதல்வர் அவர்களது ஆசியுரையுடன் புகுவிழா நடைபெற்றது. முழுமைபெறாத நிலையில் இடநெருக்கடிகள் மத்தியில் சந்நிதியான் ஆச்சிரமம் இயங்கிவரும் அந்தநாளில் நாம் உறவினர்

களைப் பார்ப்பதற்காகவும் ஆலய தரிசனம் செய்வதற்காகவும் 1996ஆம் ஆண்டு நடுப்பகுதியில் சுவாமிகளின் ஆசியுடன் வெளிநாடு சென்றோம். எம் நெஞ்சம் நிறைந்த அருளாளரும் முருக பக்தனு மாகிய தவத்திரு முருகேசு சுவாமிகள் 1997ஆம் ஆண்டு இறைவன் பாதம் அடைந்தார். அக்காலப் பகுதியில் நான் அருகில் இல்லாமை இன்றும் என்னை வாட்டியவண்ணமே இருக்கின்றது. அவரின் அரவணைப்பில் பாதுகாக்கப்பட்ட பலருள் சுவாமிகள் இறைவன் பாதம் அடைந்த வேளை அருகிலிருந்து பணிசெய்யும் பாக் கியம் திரு அருணாசலம் ஐயா அவர் கட்கே இருந்துள்ளது.

சந்நிதியான் ஆச்சிரமம் நாள் ஒரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வருவதைப் பார்த்த சில விசமி களினால் ஏற்படுத்தப்பட்ட இடையூறு களுக்கும் முகங்கொடுத்துக் கொண்டும் பெருவளர்ச்சியை அடைய வைத்து நிக ரற்ற சேவையைப் புரியச்செய்து ஆலயத் திற்கு வரும் அடியார்களின் பசியைத் தீர்த்து வைக்கும் பணியுடன், நோயாளர் களுக்கு வாரத்தில் இருநாட்கள் இலவச பொது மருத்துவ சேவையையும், வாரத் தில் ஒருநாள் மாதர்களுக்கான இலவச மருத்துவ சேவையையும், ஆலயத்தில் தங்கியிருப்பவர்களுக்கான உணவு உடைத்தேவையையும் பாலர் பாடசாலைச் சிறார்களுக்கான சத்துணவுத் தேவை யையும், மற்றும் வசதிகுறைந்த பாட சாலை மாணவர்களுக்கான கற்றல் உப கரணத் தேவைகளையும் பிரயாண வசதி குறைந்த பகுதிகளைச் சேர்ந்த ஏழை மாணவர்களுக்காக ஈருளிளி வழங்கும் சேவையையும், விதவைகளுக்கு உலர் உணவு வழங்கும் சேவையையும் பார்வை குறைவானவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் சேவையையும் வெளிமாவட்டம் சென்று வைத்தியசேவையைப் பெற வேண்டியவர்களுக்கான உதவிப் பணக் கொடுப்பனவு சேவையையும், வசதி குறைந்தோருக்கான சிறுதொழில் புரிவதற் கான உதவிக் கொடுப்பனவுச் சேவையை யும், தையற்பயிற்சி பெற்றுள்ள இள வய தினருக்காக தையல் இயந்திரம் வழங்கும் சேவையையும் போன்ற இன்றியமையாத தேவைகளுடன் வாராவாரம் வெள்ளிக் கிழமைகள் தோறும் சைவசமயப் பெரி யோரையும் கலைஞர்களையும் வரவழைத் துச் சமய வளர்ச்சிப்பணியை வழங்குவ துடன் மாதத்தில் வரும் இறுதி வெள்ளிக் கிழமைகளில் சந்நிதியான் ஆச்சிரமத்தின் கலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீ டான ஞானச்சுடர் ஏட்டின் வெளியீட்டு நிகழ்வும் இதுபோன்ற பல சமயப் பணி களையும் ஆற்றிவருகிறது.

இப்படியான வளர்ச்சிக்குத் துணையாகச் செல்வச்சந்நிதியானின் பக்தர்களான வெளிநாட்டில் வசிக்கும் உறவுகளும், கொடையாளிகளும், உள் நாட்டிலே வாழ்கின்ற கொடையாளிகளும், வர்த்தகப் பிரமுகர்களும் எம்மைவிட்டுப் பிரிந்த பாராளுமன்ற உறுப்பினரும் இந்துக் கலாச்சார அமைச்சருமான அமரர் தி. மகேஸ்வரன் போன்றவர்களும் பங் களிப்புக்களை வழங்கி இருந்தார்கள், வழங்கியும் வருகிறார்கள்.

முன்குறிப்பிட்ட பணிகள் தொடர நாமும் எம்மாலான அன்பளிப்புக்களை வழங்கிப் பல நூற்றாண்டுகள் சந்நிதியான் ஆச்சிரமப் பணி தொடர வாழ்த்துவதுடன் குருபணியைத் தொடரும் ஆச்சிரம

சுவாமிகள் திரு மோகனதாஸ் அவர்களுக்கு நீடித்த ஆயுளைச் செல்வச்சந்நிதியான் வழங்குவார் என வேண்டுகை செய்யும் வேளையில் அவர்களின் குருவானவர்களின் விசுவாசத்தை ஆச்சிரம முகப்பு மண்டபத்திலேயும் சுவாமி அறையிலேயும் வைக்கப்பட்டுள்ள சுவாமிகளின் குருவான அருட்திரு மயில்வாகனம் சுவாமிகளினது நிழற்படங்களும், சுவாமி அறையிலே வைக்கப்பட்டுள்ள தவத்திரு முருகேசு சுவாமிகளது நிழற்படமும் பிற்பக்கமாக அமைக்கப்பட்டிருக்கும் மண்டபத்திற்குத் தவத்திரு முருகேசு சுவாமிகளின் பெயரைச் சூட்டியமையையும் சுவாமிகள் தமது குருவானவர்கள்மீது வைத்துள்ள குருபக்தியைக் வெளிக்காட்டிக் கொண்டுள்ளதை நாம் உணரக்கூடியதாக உள்ளதையும் கூறி செல்வச்சந்நிதியான் பாதம் தொழுது குருவான திரு மயில்வாகனம் சுவாமிகளதும் முருகேசு சுவாமிகளினதும் பாதங்களில் சமர்ப்பணம் செய்கின்றேன்.

## விடியற்காலையில் எழுந்து நடந்துசென்று நீரில் மூழ்கிக் குளிக்க வேண்டுமென்பது ஏன்?

பண்டைக்காலத்தவர்கள் ஏதாவது நம்மை நம்பவைத்துள்ளனர் என்றால் அதற்குப் பின்னால் தெளிவான சாஸ்திரமும் அறிவுரையும் அடங்கியிருக்கும்.

காலையில் எழுந்ததும் நெடுந்தூரம் நடந்துசென்று நீரில் மூழ்கிக்குளிக்க வேண்டும் என்று நம் மூதாதையர்கள் போதித்துள்ளனர். பொதுவாக ஓடும் நதிகளிலும், கோயிற் குளங்களிலும் குளிப்பதுதானே வழக்கம். அதிகாலையில் கோயிற் குளத்தில் குளிப்பது மிகச் சிறப்பானதாகக் கருதியிருந்தனர். மூழ்கிக் குளிப்பதன் சிறப்பு அங்கீகரிக்கப்பட்ட ஒன்றுதான். ஆனால் நெடுந்தூரம் நடந்துசென்றுதான் குளிக்க வேண்டும் என்பதன் இரகசியம் என்னவென்பதே கேள்வி.

குளிப்பதற்காக சிறிது நடக்கவேண்டியிருந்தால் அது ஓர் உடற்பயிற்சியாகவே சிறப்பித்திருந்தனர். இப்படி நடக்கும்போது சுத்தவாயு சுவாசிக்க இயலும். இதனால் மனதுக்கு நிம்மதியும் உடலுக்கு சுகமும் இளைப்பாறுதலும் கிடைக்கின்றது.

கோயிற் குளத்தில் மூழ்கிக் குளிப்பதனால் நமக்குக் கிடைப்பது உடல் சுத்திமட்டுமல்ல. இது பிராணயாமத்திற்கும் பயனளிக்கும் என்று மூதாதையர் கூறியுள்ளனர்.

சுவாசத்தை ஆரோக்கியமாகக் கட்டுப்படுத்தும் பிராணயாமம் பலவகையிலுண்டு. நீண்ட சுவாசம் இழுத்து, பின் மெதுவாக விடுவதுதான் பிராணயாமத்தின் முறை. இதனால் உடலிலுள்ள கோடானுகோடி கோசங்களுக்கு சுத்தமான காற்று கிடைக்கின்றது. இதன் பயன்கள் எண்ணற்றது. புத்தி கூர்மையும் ஞாபகசக்தியும் அதிகரிக்க பிராணயாமம் உதவுகின்றது என்று நவீன சாஸ்திரம் அங்கிகரித்துள்ளது.

**உள்ளம் தூய்மையாக இல்லாத நிலையில் உண்மைத் தியானம் என்பது கைக்கூடாது.**

உ

# "நாலுபேர் சென்ற வழி..."

திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

இவ்வுலகில் கிடைத்தற்கரிய மானிடப்பிறவி எமக்குக் கிடைத்தமை பெரும்பேறு. அதிலும் சைவர்களாகப் பிறந்து சிவநெறியில் வாழ்வதற்குக் கிடைக்கப்பெற்ற அரிய வாய்ப்பு நாம் செய்து கொண்ட புண்ணியங்களின் பயனாகும்.

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்ற தேவார அடியை அடிக்கடி நினைத்துக்கொள்ள வேண்டும். மனிதர்களுக்கு மட்டுமே வாழ்க்கையைத் தெய்வீக நெறியில் அமைத்துக்கொள் வதற்கு ஏற்ற வசதிகள் இருக்கின்றன. அறிவு, மொழி, உணர்வு, சிந்திக்கும் திறன், பிரித்துணருகின்ற ஆற்றல், செயற்பாடுகளுக்கேற்ற உடலமைப்பு என்பன மனிதர்களுக்கே உரித்தானவை. எனவேதான்,

"மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்ற நிலைப்பாட்டினைச் சைவநெறி கொண்டுள்ளது. மனித வாழ்க்கையை வெறுக்காத சமயம் சைவ சமயம். நல்ல அறங்களை, நல்ல காரியங்களையெல்லாம் செய்வதற்கு எமக்கு உற்றதுணையாக விளங்குவது இந்த மனிதப்பிறவியே. நமக்கு இந்தச் சரீரம் கிடைக்கப் பெற்றமையினாலேயே இறைவனை வணங்கக் கூடியதாக உள்ளது; அவன் புகழைப் பாடிப் பரவமுடிகின்றது; உயிர்களிடத்தே அன்பினைச் சொரியக் கூடியதாக இருக்கின்றது. பிறருக்கு உதவவும், சேவை செய்யவும் முடிகின்றது. இவற்றின் விளைவாக இன்பத்தை அனுபவிக்கக்கூடியதாக உள்ளது. எனவே மனிதப்பிறவியை எமக்குத் தந்தமைக்காக இறைவனுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். அதேவேளை இறைவனின் நோக்கத்தையும் நாம் உணர்ந்து கொள்ளுதல் அவசியம். வையத்துள் வாழ்வாங்கு வாழவும், மண்ணில் நல்ல வண்ணம் வாழவும், அதன் விளைவாக இன்பத்தை அனுபவிக்கவும், இறுதியில் தெய்வ நிலையை அடையவுமே மனிதப்பிறவி எமக்குத் தரப்பட்டுள்ளது. இறைவன் எம்மீது கொண்டுள்ள அளப்பெருங் கருணையே இதற்குக் காரணம் என்பதை இந்த நேரத்தில் நாம் தெளிந்து கொள்ள வேண்டும்.

இறைவனின் இந்த உன்னத நோக்கத்தினை உணர்ந்து, கிடைத்தற்கரிய இம் மானிடப்பிறவியை எடுத்த அருமையான காலத்தை வீணாக்காது, எமது வாழ்க்கையை மனம், மொழி, மெய்யினால் தூய்மையுடையதாக அமைத்து, மன்னுயிர் ஓம்பி, இறைவனின் நோக்கத்தை அடைவதற்கு முயற்சிக்க வேண்டும். காலம் பொன்னானது. ஒவ்வொரு நிமிடத்தையும் அவமாக்காது, தவப்பொழுதாகக் கழிக்க வேண்டும். சிவநெறியில் சிந்தித்து வாழ்வதற்கும், வாழ்க்கையைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வதற்கும், வாழ்வின் உயர் குறிக்கோளை அடைவதற்கும் மனிதப்பிறவி வாய்ப்பாக அமைந்துள்ளது.

சைவமக்களுக்குச் சரியான திசையைக் காட்டும் கலங்கரை விளக்கங்களாக

அமைந்தவர்கள் சமயக் குரவர்களும் சந்தான குரவர்கள், மற்றும் காலத்திற்குக் காலம் தோன்றிய அருளாளர்கள் ஆகியோர். இவர்கள் சிவநெறியில் நின்று வாழ்ந்துகாட்டிய பெருந்தகைகள். சிவநெறி தத்துவம் மாத்திரமேயன்று; செயற்படுத்தக் கூடியதுமாகும் என்பதைச் சேக்கிழார் பெரியபுராணத்திற் கூறப்படுகின்ற அடியார் களின் வரலாறுகள் காட்டுகின்றன. எனவே, சைவசமயத்தவர்கள் ஏற்கனவே நன்கு செப்பனிடப்பெற்று, உறுதியாக அமைக் கப்பட்டுள்ள பாதையில், தடுமாற்றமின்றிச் செல்லக்கூடிய பேற்றினைப் பெற்றுள்ளனர். குறித்த இலக்கினை அடையமுடியும் என்ற துணிவும், மன உறுதியும் சைவர் களுக்கு உண்டு. சைவ நாயன்மார்கள், அருளாளர்களின் வழித்துணையும் வழி காட்டலும் பேருதவியாக உள்ளன. இவர் களின் குருபூசைத்தினங்களில் சைவமக் கள் ஒன்றுசேர்ந்து வழிபாடு செய்தலையும், நன்றி நவிலலையும் சமயக் கடமையாகக் கொள்ள வேண்டும். சைவ நாயன்மார் களின் குருபூசைகளை நடாத்துவதினால், அவர்களைப்போன்று நன்நெறியில் வாழ வேண்டும் என்ற உணர்வு இளஞ் சந்ததி யினரிடம் ஏற்படுத்தப்படுகின்றது.

பொதுவாகச் சமூகத்தில் பெரிய வர்கள் அறிவுரை வழங்கும் பொழுது, "நாலுபேரைப் போல நாமும் நடந்து கொள்ள வேண்டும்; நாலுபேர் சொன்ன தைக் கேட்டு நடக்க வேண்டும். நாலுபேர் சென்ற வழியிற் போக வேண்டும்" என்று கூறுவதை அடிக்கடி கேட்டிருக்கிறோம். நாலுபேருடன் இணைத்துப் புத்திமதி கூறும்முறை நம்மிடையே தொன்றுதொட்டு இருந்து வருகிறது. இங்கு நாலுபேர் என்று குறிப்பிடப்படுவோர் யார்? திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரையுமே இங்கு நாலுபேர் என்று குறிப்பிடுகின்றோம். இந்த நால்வரும் சிவப்பற்று ஒன்றினையே கொண்டு தற்பற்று என்பதனை விலக்கி வாழ்ந்து காட்டியவர்கள். அன்பே சிவம் என்று அன்பு நெறியில் பற்றுக் கொண்ட வர்கள். தன்னலம் மறுத்து, பிறர் நலம் பேணி, பிறர் துயர்துடைத்து, மன்னுயிர் ஓம்பி, சிவப்பணி எனும் அன்புப்பணி ஆற்றியவர்கள்.. இதனால் சைவநெறி இன்னது என்று வகுத்துத் தந்தவர்கள். சைவநெறி என்பது அன்புநெறி என்பதை உணர்த்தியவர்கள். அப்பர் தொண்டராக வும், சம்பந்தர் பிள்ளையாகவும், சுந்தரர் தோழராகவும், மாணிக்கவாசகர் சீடராகவும் இறைவனோடு உறவு கொண்டாடியவர்கள். மக்கள் பல நிலைகளில் உள்ளனர். ஒவ் வொருவரும் தமக்கு ஏற்ற முறையில் செம்மை வாழ்வு வாழ்வதற்குச் சைவ சமயக் குரவர்கள் தகுந்த வழிகளைக் காட்டியுள்ளனர். இவர்கள் சென்ற வழி களில், காட்டிய சைவ நெறியில் எமக்கு ஏற்றவாறு பின்பற்றி ஒழுகி நல்வாழ்வு வாழ்வோமாக.

---

கேட்கவேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும், அடக்கமில்லாதவனுக்கும் தீயபுத்தியுள்ளவனுக்கும் பிறர் சொல்லும் நல்லுரை காதில் ஏறாது. மேதாவியாக இருந்தாலும் அடக்கமில்லாதவனுக்கு அறத்தைத் தெரிந்துகொள்ள முடியாது. பருப்பின் சுவையைக் கரண்டி அறியாததுபோல, பண்டிதனை அடுத்து இருந்தாலும் மந்த புத்தியுள்ளவனுக்கு அறத்தின் இயல்புகளைத் தெரிந்துகொள்ளமுடியாது.

---

**இறைவனிடம் பக்தியும் பிரேமையும் பெறுவதற்காகவே மனிதப்பிறவி ஏற்படுகிறது.**

உ

(தொடர்ச்சி...

# விதியை வென்றிடுவோம்

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

நமது விதியின்படிதான் மதி வேலை செய்யும். விதியே மதியாய் விடும். விதி எப்படி உள்ளதோ அதைச் சார்ந்து தான் நமது புத்தி வேலை செய்யும். நாம் அநுபவிப்பது விதி. முன் செய்த வினை பின்பு விளையும் முறை. முற்பிறவிகளில் செய்தவினை அவ்வினை (சஞ்சிதம்). அவ்வினைப் பயன்களை இப்பிறப்பினில் அநுபவிப்பது இவ்வினை. (பிராப்தம்). இந்த ஊழ்வினையை, விதியினின்றும் விடுதலை பெற்று நலமே வாழ நாம் அறியவில்லையே!

"ஊழிற் பெருவலியாவுள" விதியை விடப்பெரிய சக்தி என்ன இருக்கிறது என்று அறத்துப்பாலில் கூறிய திருவள்ளுவர், "ஊழையும் உட்பக்கம் காண்பர்" விதியையும் வெல்லலாம் என்ற கருத்தைக் கூறியிருக்கிறார். சாவித்திரி யமனோடு போராடி சத்தியவான் உயிரை மீட்டு விதியை வென்ற கதை நாமறிவோம். பதினாறு வயதில் மரணமடைய வேண்டிய மார்க்கண்டேயர், சிவபெருமானை சரணடைந்து வழிபட்டு, சிவபெருமான் காலனைக் காலால் உதைத்து மார்க்கண்டேயரைக் காப்பாற்றிய சரித்திரம் அறிவோம்.

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தப் பெருமான் திருச்செங்குன்றூரிலே கொடுங்குளிர் நீங்க "அவ்வினைக் இவ்வினை யாமொன்று சொல்லும் அஃதறிவீர்" எனப் பாடியருளினார். நாம் விதியிலிருந்து விடுதலைபெற்று வாழ, அதற்கு உய்வைத் தேடாமல் இருக்கிறோமே. எல்லாம் விதி என்று சலிப்போடு நின்றுவிடுகிறோம். நாம் செய்த வினை நம்மைத் தீண்டாதிருக்க சரியை முதலாம் சிவப்பணி செய்து திருவடியினைப் போற்றுவோம். முன்வினை செயலற்று ஒடுங்கும். "திருநீலகண்டத்தின் மீது திருவருளால் திருவாணை" என்கிறார் ஞானசம்பந்தர்.

"சிவாயநம என்று நல்லம் மேவிய நாதன் அடி தொழ வெல்ல வந்த வினைப்பகை வீழுமே" என திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியுள்ளார். ஔவையார் பிறந்த உடனே அவரை விட்டுவிட்டுச் செல்ல வேண்டிய நிலையில் தாயார் கலங்க அந்தக் குழந்தை அந்நேரம்,

"இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றெழுதி
விட்ட சிவனும் செத்துவிட்டானோ- முட்ட
முட்டப் பஞ்சமே யானாலும் பாரம் அவனுக்கு
அன்னாய் நெஞ்சமே அஞ்சாதிரு"

எனப் பாடினார். பின்பு நமக்கு நல்வழியைச் சொல்லவந்த ஞானத் தமிழ் மூதாட்டி விதிக்குச் சதி செய்யவேண்டுமானால் புண்ணியச் செயல்களைச் செய்ய வேண்டும். பாவச் செயல்களை விலக்க வேண்டும். அதற்கு உபாயம் "சிவாயநம" எனச் சிந்திக்க வேண்டும்.

அறிவைவிட அதிக பயனுள்ள புதையல் கிடையாது.

சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளுமில்லை - உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்.

என்று நல்லறிவு புகட்டுகிறார். ஊழ்வினையால் தாழ்வடையாமல் காப்பது இறைவனின் நாமம். இறைவனிலும் பார்க்க அவரின் நாமத்திற்கு அதிக சக்தியுண்டு. கஜேந்திரன் என்ற யானையை முதலை காலிற் கவ்வி இழுத்தபோது; தும்பிக் கையையுடைய யானை நம்பிக்கையுடன் "ஆதிமூலமே" என அழைத்ததும், அந்தப் பக்தவத்ஸலன் கருட வாகனத்திலே ஓர் நொடியில் வந்து யானையைக் காத்தாரே!

திரௌபதை சபைநடுவே மானபங் கப்படுத்தப்பட்டபோது யாரும் காப்பாற்றாத நிலையில் தொண்டர்க்கு அருள் செய்யும் தூயவனே சரணம் கோபாலா, கிருஷ்ணா, ஸ்ரீஹரி அபயம் என்று அவன்நாமம் சொன்னவுடனே திரௌபதையின் மானங் காக்கப்பட்டது. எம்பெருமான் நாமம் சொன்னவுடனே எல்லாத் துன்பங்களும், ஊழ்வினையும் அழிந்துவிடும். தூய மனதுடன், நம்பிக்கையோடு அவன் நாமம் சொல்லி அழைத்தால் அவன்புகழ் பாடி னால் மோட்சத்தை எளிதில் அடையலாம்.

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிவகதிதானே

என்பது திருமந்திரம். பாவங்களை ஒரே கணத்தில் துவம்சம் பண்ணுவது சிவநாமம்.

விதியை வெல்லமுடியும் என முருகன் அருளினால் சந்தத் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் சவால் விடுகிறார். முருகா! எனக்கு முன்னால் உன்னுடைய இரு பாதங்களும், சிலம்பும், சதங்கையும், தண்டையும், சண்முகமும், தோளும், கடம்பும் தோன்றினால் நாள் என்ன செய்யமுடியும்? வினை என்ன செய்ய முடியும்? எனை நாடிவந்த கிரகம் என்ன செய்யமுடியும்? கொடிய காலன் என்ன செய்ய முடியும்?

நாள் என்செயும் வினைதான் என் செயும் எனை நாடிவந்த
கோள் என் செயும் கொடுங் கூற்று என் செயும் குமரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே.

அருணகிரிநாதர் வினையாலும், அந்த வினையின் விளைவைத் தருவன வாகிய நாளினாலும், கோளினாலும் வரு கின்ற துன்பங்களுக்கு மருந்து சொல் கிறார். இறைவனுடைய திருவருளால் நம்முடைய வாழ்வில் நன்மை உண்டாகும் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். அந்த நம்பிக்கையுடன் வாழ்ந்தால் நாளும், கோளும் நமக்கு ஒன்றுமே செய்யமாட்டா. எல்லாம் நமக்கு அனுகூலமாகவே

இருக்கும். சம்பந்தரும் இதனையே சொல்கிறார். எம்பெருமான் என் உளமே புகுந்த அதனால், ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே ஆசறு நல்லநல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே. இறைவனை நாங்கள் சிக்கெனப் பிடித்துக்கொண்டால் நம்விதியை, வினையை மாற்றலாம்.

மனிதா! நீ முருகனை நம்பு. அவனிடம் அன்னை கொடுத்த சக்திவேல் இருக்கிறது. அந்த வேல் பட்டதனால் சூரனும் மலையும் அழிந்து போயின. அந்த மாமயிலோன் கால் பட்டதனால் அந்தப் பிரமன் என் தலைமேல் எழுதிய எழுத்தும் அழிந்து போயிற்று. உன் தலை எழுத்தையும் நிச்சயம் மாற்றலாம். வா, முருகனிடத்து என்று எம்மையும் அழைக்கிறார் அருணகிரிநாதர். எமது வாழ்வின் நிகழ்ச்சி நிரலைப் பிரமன் தலையிலே எழுதிவிட்டான். அந்த எழுத்தை மாற்ற இயலாது. அது அழியாத எழுத்தாக நின்று எத்தனை வேலைகளைச் செய்கிறது. அந்த எழுத்தையும் அழிக்கத் தானே வேண்டும். அந்த எழுத்தை அழிக்கும் ஆற்றல் பெற்றவன் செந்தில் முருகன். பிரமன் கையால் எழுதிய தலை எழுத்தை வேலன் தன் காலால் அழிக்கிறான். திருச்செந்தூர்ச் செல்வனின் திருவடியில் தலை தாழ்த்தி வணங்கும்போது, பிறவித்துன்பம் ஒழிந்து மரணமில்லாப் பெருவாழ்வு கிட்டுகிறது. பிரமன் எழுதிய தலைவிதி தவிடு பொடியாகிறது. பிரமன் எழுதிய தலை விதியை அழிக்கும் கருவி கந்த வேளுடைய கமலமலர்த் திருவடியாகும்.

சேல்பட்டு அழிந்தது செந்தூர்வயல் பொழில் தேங்கடம்பின்
மால்பட்டு அழிந்தது பூங்கொடியார் மனம் மாமயிலோன்
வேல்பட்டு அழிந்தது வேலையும் சூரனும் வெற்பும் அவன்
கால்பட்டு அழிந்தது இங்கு என்தலைமேல் அயன் கையெழுத்தே.

வாழ்க்கை நமக்கு நன்றாக வாய்க்கவில்லையென்றால் அது விதியின் பிழை. மறுக்கமுடியாது. கம்பளிச்சட்டை அணிந்தால் குளிர் தேசத்திலும் குளிரினால் நடுங்கமாட்டோம். கம்பளிச் சட்டையினால் குளிரின் தாக்கம் இல்லாமற் போகும். திருவெண்ணீறு அணிந்தாரை மாயச் செயல்கள் தாக்காது. அதேபோல முருகன் திருவருளாகிய கம்பளிச்சட்டை இருந்தால் விதியின் வலிமை நம்மைத் தாக்கமாட்டாது. நம்முடைய குறிக்கோள் முருகன் திருவடி பற்றி வாழுதலாக இருக்கவேண்டும். சதங்கையணிந்த அழகிய செந்தாமரை போன்ற முருகனுடைய திருவடிகளைச் சேர்வதற்குத் தடையாக இருக்கும் வினைகள் எப்போது நீங்கும்? பிற ஒன்றையும் குறியாது இறைவனுடைய திருவடியை மட்டும் குறித்து நிஷ்டை கூடுதல் வேண்டும். கூர்மையும் வலிமையும் கொண்ட ஞானசக்தியாகி வேலை ஏந்திய ஞானபண்டிதனாகிய முருகனுடைய திருவடியைத் தியானிக்கும் திருவருளைத் தந்தருள வேண்டும் என பிரார்த்தனை செய்யவேண்டும். பிறவி அறுவதற்கு வழி மனதில் இடையறாது இறையருளைச் சிந்திக்க வேண்டும். வந்த வினையும் வருகின்ற வல்வினையும் கந்தன் என்று சொல்லக் கலங்குமே. செந்தில்நகர்ச் சேவகா என நீறணிவோர்க்கு மேவவாராதே வினை.

**சினத்தைவிட கேவலமான வமிசம் கிடையாது.**

முருகனடியார்களே! எங்கள் செல்வச்சந்நிதி முருகனிடம் வாருங்கள் அவனைத் தரிசனம் செய்யுங்கள் வினையை வெல்லலாம். நாளை வெல்லலாம், கிரகத்தை வெல்லலாம், யமனை வெல்லலாம், விதியையும் வெல்லலாம்.

செல்வச்சந்நிதியிலே மருந்தொன்றிருக்குது
கண்டாலே போதும் உளம் கொண்டாலே போதும்
மதியணி சங்கரன் தந்தமருந்து
மங்கை மனோன் மணி ஈன்றமருந்து
துதி செய்யும் அன்பரைக் காக்கும் மருந்து
துஷ்டர்களுக்கு எட்டாத மருந்து
விதியை விலக்கி வைக்கும் மருந்து
வல்வினையை வேரறுக்கும் மருந்து
மூலமும் முடிவு மில்லா மருந்து
முத்தியின்பம் அருளும் மருந்து
அருமருந்து, திருமருந்து, ஆனந்த மருந்து.

கதிநீ மதிநீ கதிர்வேல் முருகா
துதிசெய் அடியார் துணைநீ அரசே
விதி செய் வினையும் விலகப் புரிவாய்
புதி தாகிய வாழ்வருள் புங்கவனே

(முற்றும்)

---

## வாசகர் உள்ளத்திலிருந்து

**அன்புள்ள ஞானச்சுடர் வெளியீட்டாளருக்கு!**

க,ச,த,ப மிகுந்து வருவதைக் கவனிக்காமற் பிழை பிழையாக விசயதாரிகள் எழுதுகின்றனர். இதற்கான இலக்கண விதி வருமாறு

யரழ முன்னர்க் கசதப வல்வழி
இயல்பு மிகலு மாகும் வேற்றுமை
மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்

நன்னூற் சூத்திரம் 224

இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்
கசதப மிகும்வித வாதன மன்னே

மேலது 165

ஞானச்சுடர் சரியெனின் ஆச்சிரமச் சைவக்கலைப் பண்பாட்டுப் பேரவையென்றே வரவேண்டும். முதனிலை இறுதிநிலை எழுத்தும் முக்கியம். அதன்படி ரதம், றாத்தல் என வராது இரதம் இறாத்தலென வரும். இறுதியில் விஜய், கார்த்திக், ஆனந்த் என எழுதுவதும் பிழை.
எங்கள் சமயம் இந்துவன்று சைவமே. இதை இலக்கிய கலாநிதி மு. கந்தையா பல கட்டுரைகளில் வெளியிட்டுள்ளார்.

*முருகவே பரமநாதன் (கனடா)*

**நற்செயலைவிட அழகான நண்பன் கிடையாது.**

உ

# எலுமிச்சம் பழத்தின் சிறப்பறிந்து அம்மரத்தைநாட்டி அகமகிழ்வோம்

**திரு ப. அருந்தவம் அவர்கள்**

மரங்களைப் புனிதமானவையாகவும், அவற்றின் விளைவுகளான பூ, இலை, காய், கனி என்பவற்றை மாண்புக்குரியவையாகப் பேணுவதில் முன்னிற்கும் மதமாக சைவமதம் காணப்படுகிறது. அந்தவகையில் எலுமிச்சமரத்தையும் அதன் விளைவான எலுமிச்சம் காய் கனியையும் பேணுவதிலும் எம்மதம் பின்னிற்கவில்லை.

**இறைவழிபாட்டில் எலுமிச்சை:**

இறைவழிபாட்டில் எலுமிச்சம்பழம் முக்கிய இடம் வகிக்கிறது. அம்பாளிற்கு எலுமிச்சம் பழமாலை அணிவிக்கலாம். அம்மனிற்குச் சூட்டிய எலுமிச்சம் பழ மாலையிலிருந்து பிரித்தெடுத்த பழங்களின் சாற்றைப் பருகினால் பல்வேறு நோய்களும் அணுகாது என்பது சைவர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

இதேபோல் எலுமிச்சம் பழச்சாற்றினால் இறைவனை அபிஷேகிப்பதனால் மரணபயம் போக்கப்படுவதாகவும் ஒரு கருத்துண்டு.

துர்க்கையம்மனுக்கு எலுமிச்சம் பழத்தோலில் நெய்யிட்டு விளக்கேற்றும் மரபும் எம்மவரால் பேணப்பட்டு வருகிறது.

**தலவிருட்ஷம்:**

சைவ ஆலயங்களில் தலவிருட்ஷம் வைத்துப்பேணுவது ஆகமவிதியாகும். இந்தவகையில் எலுமிச்சை தென்னிந்தியாவின் திருஅன்னியூர்த் திருத்தலத்தின் தலவிருட்ஷமாகப் போற்றிப் பேணப்பட்டுவருகிறது.

**திருமணப்பேற்றிற்கு எலுமிச்சை:**

திருமணப்பேறு நீண்டநாள் கைவரப் பெறாதவர்கள், துர்க்கையம்மனிற்கு இராகுகாலப் பூஜையின்போது எலுமிச்சம்பழத் தோலில் நெய்விட்டு திரிபோட்டு சுடரேற்றி வழிபட்டுவர திருமணம் விரைவில் கைகூடும்.

இதேபோல் அம்பாளிற்கு செவ்வாய்க்கிழமை தோறும் எலுமிச்சமாலை அணிவித்து வந்தால் நல்ல மணமகன் கைவரப் பெறுவார் என்றும், பிள்ளைப் பேறற்ற தம்பதியர் இம்மாலையை அம்பாளிறகுச் சாற்றிவரின் மகப்பேறும் ஏற்படும் என்ற நம்பிக்கையுமுண்டு.

**தத்துவமுணர்த்தும் எலுமிச்சை:**

எலுமிச்சை பூவாகி, பிஞ்சாகி, காயாகி, கனியாகி ஈற்றில் அழுகியும் விடுகிறது. அது என்னிலையில் இருந்தாலும் புளிப்புச் சுவையையே தரும். இதில் எவ்வித மாற்றமும் இல்லை. இது மனிதன் வாழ்விலும், தாழ்விலும் ஒரேமாதிரியாக இருக்க வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்தி நிற்கிறது.

மடமையைவிடக் கேவலமான கெட்ட நண்பன் கிடையாது.

**பண்பாட்டில் எலுமிச்சை:**

நமது பண்பாட்டுடன் இறுகப்பிணைந்த பழங்களில் எலுமிச்சையும் ஒன்று. மஞ்சள் நிறமான இப்பழம் மங்களத்தைக் குறிக்கிறது. இதனால் சகல மங்களகரமான நிகழ்வுகட்கும் இது ஒரு பயன்படுபொருளாக உள்ளது.

சுபகாரியங்களின்போதும், பண்டிகை நாட்களிலும் பெரியோர்களைச் சந்தித்து ஆசீர்வாதம் பெறுவதற்கும் எலுமிச்சம்பழம் உதவுகிறது. பெரியோரிடத்து எலுமிச்சம் பழத்தைக் கொடுத்து மரியாதையையும், வணக்கத்தையும் தெரிவிப்பது நமது பண்பாடாகும். எலுமிச்சம் பழத்தைப் பெற்றவர் தனது இரு கண்களிலும் இப்பழத்தை ஒற்றி இன்பமும், எழுச்சியும், நிறைவும் பெறுவார்.

**திருஷ்டிப் பரிகாரப் பொருள்:**

எலுமிச்சம் பழத்தை வீடுகளிலும் கடைகளிலும் திருஷ்டி படாமல் இருக்க வாசலின்மேல் கட்டும் மரபு உண்டு. வாகனங்கள் விபத்தில் சிக்காது சென்று வருவதற்கும் எலுமிச்சம் பழங்களை அறுத்து திருஷ்டிப் பரிகாரம் செய்யும் செயலையும் எம்மவர்கள் பின்பற்றுகின்றனர். பில்லி, சூனியம் போன்ற மந்திர தந்திர செயற்பாடுகளிற்கும் இது உதவுகிறது. இவற்றிற்கெல்லாம் எலுமிச்சம் பழத்தினுள்ளே ஒரு கூறாக உள்ள செப்புச் சத்தே காரணம் என்று இன்றைய அறிவியல்வாதிகள் குறிப்பிடுகின்றனர்.

**மருத்துவமன்னன் எலுமிச்சை:**

நோய்வராமல் தடுப்பதிலும், நோய்வந்தபின் அதனை அகற்றுவதிலும் உடல்நலம் பேணுவதிலும் முதன்மைப் பொருளாக எலுமிச்சம் பழம் விளங்குகிறது. இதனால் இப்பழத்தை மருத்துவத்தின் மன்னன் என அழைக்கலாம் தானே!

இதன் மருத்துவப் பயன்கள் எண்ணிலடங்காதவை. வெப்பத்தைத் தணித்தல், புளிப்பைப் போக்கல், உடலைத் தூய்மைப்படுத்தல், உடல் உறுப்புக்கள் இயல்பாக இயங்குவதற்குத் தூண்டலும், துணைபுரிதலும், கூர்மதியைக் கூட்டுதல், கசப்பைப் போக்குதல், கபத்தை எடுத்தல், வாதத்தை நீக்குதல், இருமல், தொண்டைநோய், மூலவியாதி, அஜீரணம் சம்பந்தமான வியாதி, சிறுநீர் வழியுடன் தொடர்புடைய வியாதிகள் போன்றவற்றை நீக்குதல் விசத்தை முறித்தல் போன்றன இம் மருத்துவ மன்னன் தாவரத்தின் மருத்துவ நிவாரணப் பணிகளில் சிலவாகும்.

எலுமிச்சம் பழத்தில் "சித்ரிக் அமிலம்" எனும் பொருள் இருப்பதாகவும், இது எளிதில் கிருமிகளைக் கொல்லும் வல்லமையுடையது எனவும் விஞ்ஞானம் தெரிவிக்கிறது. இக்கருத்தைப் பண்டைக்காலம் முதல் சைவர்கள் தமது வாழ்வில் பயன்படுத்தி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. அதாவது தொற்றுநோய்க் கிருமிகளை விரட்ட எலுமிச்சம் சாற்றைப் பயன்படுத்தி வருகின்றனர் அல்லவா.

**எலுமிச்சை நாட்டுவோம்:**

பல்வேறு விதத்திலும் எலுமிச்சம்பழம் பயன்படுவதை நாம் அவதானித்தோம். எனவே சைவர்களாகிய நாம் சமயரீதியிலும், பண்பாட்டு ரீதியிலும், மருத்துவ ரீதியிலும் சிறப்புமிக்க இத்தாவரத்தை வீடுதோறும் நாட்டி நமது பொருளாதார வளத்தை

அதிகம் சொல்ல விரும்புபவன் குறைவான வார்த்தைகளையே பயன்படுத்துவான்.

மேம்படுத்திக் கொள்வோம்.

தோட்டத்தின் கிழக்கே கறிவேப்பிலை மரமும் தெற்கே கருங்காலியும், மேற்கே நெல்லியும், வடக்கே எலுமிச்சையும் வைத்துப் பராமரித்தால் பண்ணையாளன் சுபபலனை அனுபவிப்பான் என்கிறது தாவரவிருத்தி நூலொன்று.

பூத்துப் பழுத்துக் குலுங்கும் மரங்களை வைத்து வளர்ப்பவன் நவமணிகளால் அலங்கரிக்கப்பட்ட ஆயிரம் பசுக்களைத் தானம்செய்த புண்ணியத்தை அடைவான் என்கிறது விருட்ஷாயுர்வேதம் எனும் நூல். எனவே வருடத்தின் அனேக காலப்பகுதியில் பூவையோ அன்றில் காய் கனியையோ தன்னகத்தே கொண்டு பூத்துக் குலுங்கும் பழங்களைத் தரவல்ல எலுமிச்சையையும் எமது வீடுதோறும் பயிரிட்டு எமது வாழ்வை வளப்படுத்திக் கொள்வோமாக.

## உனக்குள் தேங்காய்

ஆலயத்திற்குச் செல்லும்போது பூஜைத் தட்டில் தேங்காய் முக்கிய இடம் பெறுகிறது. தேங்காயைப் பார். மேலே பளபளப்பான பச்சை மட்டை. பச்சை மட்டையை உரித்து அகற்றியதும் சிக்கல் நிறைந்த நார்கள். நாரை இழுத்துப் பிடித்து வைத்துக்கொண்டு இருக்கும் ஓடு ஓட்டுக்குள்ளே வெண்மை நிறத்தில் தேங்காய்ப் பருப்பு. அதனுள்ளே இன்சுவையான இளநீர்.

பளபளப்பைக் கண்டு மயங்கிவிடாதீர். உள்ளே பெரும் சிக்கல் காத்திருக்கிறது. சிக்கலைத் தூக்கிவீசி எறி. உள்ளே உறுதியான உள்ளம் காத்திருக்கிறது. உனக்குள்ளே உன் அறிவை வளர்க்க உணவு காத்திருக்கிறது. உணவுக்குள்ளேயும் உனக்காக ஞானத்தாகத்தைத் தீர்க்க தண்ணீர் காத்திருக்கிறது.

உன்னையே ஒருமுறை திரும்பிப்பார். உன்மேற்றோலில் பளபளப்பு. உள்ளே உணர்வுகளைத் தட்டிவிடும் நரம்புகள். சதைக்கோளங்கள் இவைகளைத் தாங்கி நடக்க உறுதியான எலும்பு. உள்ளே மென்மையான உள்ளம். அதற்குள் கருணை வெள்ளம்.

உனக்குள் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் உண்டு. தேங்காயின் பச்சை மட்டை மாயாமலம். உரித்து எடுக்கின்ற நார் கன்மமலம். உடைத்து அகற்றுகின்ற ஓடு ஆணவமலம். இந்த மும்மலங்களும் அகன்றால் சித்த சக்தி என்னும் தேங்காயின் வெண்பருப்புத் தோன்றும். இறைவா எனது மும்மலங்களையும் அகற்றிப் பூரணமான ஒளியைக்காட்டி அதனருளால் பரமானந்த அமிர்தத்தை நுகரச் செய்வாயாக என்பதனை உணர்த்துவதே ஆலயங்களில் தேங்காய் உடைப்பதன் தத்துவமாகும்.

---

உங்கள் மனம் பரிசுத்தமாக இருக்கிறது என்று கற்பனை செய்யாதீர்கள். அப்படிக் கருதினால் பயிற்சியில் கவனக்குறைவு ஏற்படும். "ஏதோ நற்செயல்கள் செய்துவிட்டோம்!" என்று மகிழ்ச்சியடையாதீர்கள். விவேகத்துடன் எப்போதும் கவனமாக இருங்கள்.

சிந்தனையைவிட சிறந்த செயல் கிடையாது,

உ

(தொடர்ச்சி...

# சைவக்கிரியைகள்

தமிழ்ஞான வித்தகர் பொன். சுகந்தன் அவர்கள்

**சந்தியாவந்தனம்**

பகலும் இரவுமென இரு காலப் பகுதிகள் சந்தித்தல் பற்றிச் சந்த்யா என்ற பெயர் ஏற்பட்டது. சூரியன் வரச் சந்திரன் விலகும் உதய காலமும், சந்திரன் வரச் சூரியன் விலகும் அஸ்தமன காலமும் சந்தியா காலம் எனப்படும். தீட்சை பெற்ற வர்கள் சந்தியா வந்தன காலங்களில் வழிபாடு செய்ய வேண்டும்.

சூத்திரங்கள் என்ற நூலிற் கூறப் பட்டுள்ள சந்தியா வந்தன விதி வைதிக சந்தியா வந்தனம் என்றும், பத்ததிகளிற் கூறப்பட்டுள்ள சந்தியா வந்தன விதி சைவ சந்தியா வந்தனம் என்றும் அழைக்கப்படும். இதில் வேதத்தினை மூலமாகக் கொண் டது வைதிகம். அதேபோன்று ஆக மத்தை மூலமாகக் கொண்டது சைவமு மாகும். இவற்றுள் வைதிகர்கள் வைதிக சந்தியா வந்தனத்தினையும் சைவர்கள் சைவ சந்தியா வந்தனத்தினையும் அநுட் டிக்க வேண்டும். ஆனால் சிவாசாரியார் இரண்டையுமே அநுட்டிக்க வேண்டும்.

சைவர்கள் கடைப்பிடிப்பது சைவ சந்தியா வந்தனம் இவற்றுள் பின்வருகின்ற சில அம்சங்கள் அடங்குகின்றன. அவை யாவன தானசுத்தி, கணபதி குரு வணக் கம், சலசுத்தி, ஆசமனம், தொடுமிடந் தொடுதல், விபூதி சுத்தி, முக்குறி தரித்தல், பிராணாயாமம் மார்ச்சனம், அகமர்ஷணம், தருப்பணம், சகளீகரணம், மூலமந்திர ஜபம், தோத்திரம், திக் வந்தனம், சிவசூர்ய தரிசனம், என்பனவாகும்.

இன்றைய காலங்களைப் பொறுத்தமட்டிலே தீட்சை பெற்றவர்கள் எல்லோரும் சந்தியா வந்தனம் முறைப்படி முறையாகச் செய்கின்றவர்களாக இல்லை. இருந்தபோதும் சந்தியாவந் தனத்தை முறைப்படி முறையாகச் செய் கின்றவர்கள் இவ்வுலகில் மட்டுமன்றி மறுமையிலும் சௌபாக்கியம் பெறு வார்கள்.

**சிவபூசை**

சைவசமயிகளைப் பொறுத்த மட்டில் சிவபூசை என்பது முக்கியமான தொரு விடயமாகவே அமைகின்றது. இந்தச் சிவபூசையானது சந்தியா வந்தனம் செய்துகொண்ட உடனே உடனடியாகச் செய்வது நன்று. இது அதிக பலனையும் தரக்கூடியது.

சிவபூசையென்பது யாவர்க்கும் முக்கியமானதொன்றாகவே அமைகின்றது. ஆதலால்தான் 'சிவபூசை செய்யாதொழி யிற் சிவஞானம் விளங்காது' எனக் கூறப் பட்டது. எனவே சிவபூசையானது மகத் துவம் பெற்றது. புராண இதிகாசங்களிலே சிவபூசையின் மகத்துவத்தினைப் பற்றி யெல்லாம் அறிந்திருக்கின்றோம். சிவபூசை யின் காரணமாக அவர்கள் அடைந்த பெரிய பலாபலன்களையும் பார்த்திருக்கின் றோம். இராவணனே பெரியதொரு சிவபக்த னாகவும், சிவபூசைகள் செய்து வரங்கள் பலவற்றையும் பெற்றிருந்தவன் என்பதனை யும் இதிகாசங்கள் வாயிலாக நாம் அறிந் துள்ளோம். எனவேதான் இவ்வாறான நிகழ்வுகளில் இருந்து சிவபூசையின் சிறப்

பானது செவ்வனே துலங்கி நிற்கின்றது.

பூர்வக் கிரியைகள் யாவற்றுக்கும் பெரும்பேற்றினை அருளுவது இந்தச் சிவபூசையாகும். சிவபூசைக்காக சமய தீட்சையோடு விசேட தீட்சையும் பெற்றுக கொள்ளல் வேண்டும். இறுதிவரை சிவபூசையினைச் செய்தல் வேண்டும். அது எமக்கு இம்மையிலும் மறுமையிலும் பயன்தரக்கூடியதாம்.

***சிவாச்சிரமம்***

சைவ சமயத்திலே ஆன்மீக விடு தலைக்கான மார்க்கங்களாக நான்கு கூறப்பட்டுள்ளன. அவையாவன சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும். இந்த நாற்பாதங்களும் படிமுறை வளர்ச்சி முறைப்படியாகவே வருதல் வேண்டும். நமது சமயக் குரவர்கள் நால்வர் இடத்திலும் இவை ஒவ்வொன்றும் தனித்தனியே தனித்துவமாக இருந்ததனை அவர்களின் வரலாறு ஊடாக அறியமுடிகின்றது. இவ்வாறாகவே இவை படிமுறையின் தன்மையால் அடையப்படுவதனை அரும்பு, மலர், காய், கனி என்கின்ற உதாரணத்தின் ஊடாகத் தாயுமானவர் பின்வருமாறு விளக்குகின்றார்.

"விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றே பராபரமே"

எனப்பாடியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். இவை நாற்பாதங்களை விளக்கவந்த சிறந்த உவமைகளாக மிளிர்கின்றன. இந்த நாற்பாதங்களுக்கும் அடி நாதமாக விளங்குவது சிவதீட்சையாகும். எனவேதான் சிவதீட்சையோடு முறையாகச் சந்தியா வந்தனம் செய்து கொள்ளாதுவிடின் நாற்பாதங்கள் எதுவுமே சித்திக்காது போய்விடும். எனவே ஆன்மா ஞான நிலையினை அடையவேண்டுமாக இருந்தால் இவையெலாம் தேவையாகவுள்ளன.

(தொடரும்....

## கர்மயோகம் ஞானயோகம்

உறவுதன்னில் நான்னின்று - நான்
நானாகயில்லாமல் கர்மயோகத்தினின்றேன்
இறைவனுடன் பிணைந்துள்ள அருளால்
ஞானயோகியாக நானுயர்ந்தேன்
மறைபுகழ்பாடிய நாயன்மாரின் உயர்
தத்துவத்தைப் புகழ்ந்து போற்றினேன்
கறைபானுக் கிளையோனின் பொற்
பாதகமலப் பேற்றை வேண்டி நின்றேன்
நிறைபருள்புரி சந்நிதியானிடம் சரண்
புகுந்தேன் சரணம் சரணம் ஐயா!

*திரு இ. பஞ்சாமிர்தபாலன் அவர்கள்.*

**பொறுமையைவிட உயர்ந்த நற்காரியம் கிடையாது.**

உ

# வினைகள் தீர்க்கும் வைரவர் வழிபாடு

**சமூகஜோதி கா. கணேசதாசன் அவர்கள்**

வைரவர், காவற்தெய்வமாகப் போற்றப்பெறும் சிறப்பிற்குரியவர். வைரவப் பெருமானைப் போற்றும் விரதங்கள் சித்திரைப்பரணி, ஐப்பசிப்பரணி, காலாஷ்டமி (கார்த்திகைமாத தேய்பிறை அட்டமி) மற்றும் மங்கலவார (செவ்வாய்க்கிழமை) விரதம் என்பன முக்கியமானவை. வைரவர் என்ற சொல் "பைரவர்" என்ற சொல்லில் இருந்து மருவிய வடிவழ் ஆகும். பைரவர் என்ற வடமொழிச் சொல்லுக்கு அச்சம் தருபவர் எனப்பொருள் கொள்வர். எதிரிகளுக்கு அச்சத்தைக் கொடுத்து தன்னை நம்பியவர்களை வைரத்தைப் போன்ற உறுதியுடன் காத்துநிற்கிறார்.

யாழ் குடாநாட்டில் வைரவர் வழிபாடு இடம்பெறாத கிராமங்களே இல்லை எனும் அளவிற்கு வைரவர் வழிபாடு சிறப்புற்று விளங்குகின்றது. கிராமிய வழிபாடு என்ற நிலையில் ஆகமம் சாராத வழிபாடாகவும் ஆகமம் சார்ந்து மகோற்ஷவம் இடம்பெறும் வழிபாடாகவும் வைரவர் வழிபாடு பரந்து காணப்படுகின்றது.

சிவகுமாரர்களாக நால்வர் போற்றப்படுகின்றனர். விநாயகர், முருகன், வைரவர், வீரபத்திரர் எனப்போற்றப்படும் இவர்களுள் வைரவப்பெருமான் ஷேத்திர பாலனாக போற்றப்படுகிறார். ஷேத்திர பாலன் என்பதற்கு கோயிலைக் காப்பவர் என்பது பொருள். உலகில் அநீதி மேலோங்கும்போது இறைவனின் அம்சமாக வெளிப்படுபவர். அநீதியை ஒடுக்கி தருமத்தை நிலைநாட்டும் காவலனாகச் செயற்படுவார்.

சிவபிரானே முருகனாகி சூரசம்காரம் செய்தமையும், விநாயகராகி கஜமுகாசுரனின் அகங்காரத்தை அடக்கியமையும், வீரபத்திர வடிவம் தாங்கித் தக்கனின் செருக்கை அடக்கியமையும் வைரவராகி பிரமனின் தலையைக் கொய்து அவனது செருக்கை அடக்கியமையும் புராணங்களூடாகக் கிடைக்கும் செய்திகள் ஆகும்.

வைரவர் தோற்றம் மூவேறு தடவைகளில் நிகழ்ந்ததாகக் கொள்ளப்படுகிறது. பிரமன் அகந்தையால் சிவநிந்தை செய்தபோது அவனது தலையைக் கிள்ளிய வடிவம் ஒன்று சிவ பக்தர்களை துன்புறுத்திய கஜாசுரன் என்ற ஆனையைக் கொன்ற வடிவம் இன்னொன்று. இரணியனை வதம் செய்ததால் கர்வம் அடைந்த விஷ்ணுவின் செருக்கை அடக்கிய வடிவம் மற்றொன்று.

அந்நியர்களாகிய போர்த்துக்கேயர் நம் மண்ணை ஆக்கிரமித்தபோது சுதேச மத வழிபாட்டிற்குத் தடையேற்படுத்தினர். இந்நிலையில் சைவசமயம் அழிந்துவிடுமோ எனத் துணுக்குற்ற வேளை வைரவர் வழிபாடே சைவத்தின் விழுமியங்களைக் காத்தது.

சிவபெருமானும் வைரவப்பெருமானும் கையில் தரிக்கும் ஆயுதமாகச் சூலம் அமைந்திருக்கின்றமையால், மத சுதந்திரம் மறுக்கப்பட்ட மக்கள் சூலத்தை மரங்களின் கீழும் கிணற்றடியிலும், தோட்டத்திலும் வைத்து வழிபாடாற்றினர். போர்த்துக்கேயப் படைகளின் கண்களுக்கு

**தடைகள் அதாவது மறைப்பு நீங்கினால் ஆத்மானுபவம் தானே விளங்குகிறது.**

ஏய்ப்புக்காட்டி அவர்கள் விரும்பும் உருவரு மாறு சூலத்தை மடித்துப் பாசாங்கு செய்து தம் உயிர் காத்து சைவத்தைப் பேணியும் வாழ்ந்தனர்.

எவ்வளவு இடர் நேர்ந்தாலும் கொண்ட கொள்கையை வெவ்வேறு உருவினூடாக முன்னெடுக்கும் சிறப்பை ஈழத்தின் வைரவர் வழிபாடு எமக்கு உணர்த்துகின்றது.

வெயில் கொழுத்துகிறது. வெயி லில் பஞ்சை வைத்தால் அது வெதும்புமே யன்றி சாம்பலாகாது. சூரிய காந்தக் கண்ணாடியை வெயிலிலே வைத்து அதன் கீழே வருகிற வெயிலில் பஞ்சை வைத் தால் அது எரிந்துவிடும். அந்த ஆற்றல் நேர் வெயிலுக்கு இல்லை. பரந்து விரிந்து இருக்கின்ற வெயிலின் ஆற்றலை ஈர்த்து மிகுதிப்படுத்தித் தன் கீழே அனுப்பு வதனால் சூரிய காந்தக் கண்ணாடியின்கீழ் வருகின்ற வெயிலுக்குப் பஞ்சைக் கொழுத்து கின்ற ஆற்றல் ஏற்படுகிறது.

ஆலயத்தில் உள்ள வைரவ மூர்த்தி சூரிய காந்தக் கண்ணாடியைப் போன்றது. மற்ற இடங்களிலே இறை வனை வழிபட்டால் வினைகள் வெதும்பும். ஆலயத்தில் வைரவர் முன்நின்று வழிபட்டால் எமது தீய வினைகள் வெந்து சாம்பலாகும். ஆதலால் ஆலயங்களில் வைரவவழிபாடு மிகவும் இன்றியமை யாதது என நாம் உணரவேண்டும்.

---

## ஈரமுள்ள நெஞ்சமே கடவுளின் இல்லம்

உலகெங்கும் வியாபித்துக்கிடக்கும் மதங்கள் எத்தனையோ இருந்த போதிலும், இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதனையும் அவன் அறத்தின் வடிவிலேயே உள்ளான் என்பதையும் மிகமிக நுட்பமான அறிவு பெற்றவர்களே புரிந்துகொல்டிருக்கிறார்கள் எல்பதை நீதி நூல்களிலன்றி வேறெங்கும் காணமுடியாது. தர்மத்தையே பெருவாழ்வாகக் கொண்ட நீதிநூல்கள் மதங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது தர்மத்தையும் மானிடவாழ்வின் பொதுப்படையான தேவைகளையும் வலியுறுத்தி நிற்கின்றன. அதில் திருமந்திரம்கூறும் ஒரு தர்மத்தை நோக்குவோமா?

"கெடுவதும் ஆவதும் கேடில் புகழோன்
நடுவல்ல் செய்தின்பம் நாடவும் ஒட்டான்
இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்
படுவது செய்யின் பசுவது வாமே"

மனிதன் கெட்டழிந்து போவதும் நன்றெய்தி வாழ்வதும் அழியாத புகழுடைய இறைவனின் செயலாகும். அவன் நீதியற்ற செயல்களைச் செய்பவரை விரும்பமாட்டார். நல்லவர்க்கு ஒன்றைக் கொடுப்பது வறியவர்க்கு ஈவதுமாகிய அறத்தை நினைப்பீர்களாக. அதுவே அழியாத இன்பமாகிய வீடுபேறு காணவழியாகும்.

ஈரமுள்ள நெஞ்சமே கடவுள் வாழும் இல்லம் என்பதாம்.

---

**இறைநம்பிக்கை என்னும் சிப்பிக்குள் இருக்கும் முத்துத்தான் தொழுகை.**

உ

(தொடர்ச்சி...

# திருவுருவ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

திரு இ. சாந்தகுமார் அவர்கள்

இருக்கு வேதத்தின் திரு, பேச என்ற சொல்லைச் சான்றாகக் கொண்டு மனிதரைப் போன்று உருக்கொண்ட என்ற கருத்துக் கொள்ளப்படுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு இருக்குவேத மக்கள் கற்பனையினால் மாத்திரமன்றி உண்மையில் உருவங்களை அறிந்திருந் தனர் என அறிஞர் சிலர் கருதுவர். இருக்கு வேதத்தில் வரும் ஒரு குறிப்பில் உருத் திரனுக்கு வர்ணம் பூசிய உருவம் இருந்த தாகவும் வலிமை மிகுந்த ஆலயங்களுடன் ஒளிரும் பொன்னிற வர்ணம் தீட்டியதாகக் காணப்பட்டதெனவும் உருவ வழிபாட்டினை எடுத்துக்கூறுவர். இது போன்ற பிற இருக்கு வேதக்குறிப்புக்களின் துணையுடன் வடி, தனு, ரூப, சந்திருவு போன்ற பதங்களும் பிரயோகம் பெறுவதை எடுத்துக்காட்டி உருவவழிபாடு இருந்தமைக்கு இவற்றைச் சான்றாகக் கொள்வர்.

வேதத்தின் பிற்பகுதியாகிய இலக் கிலங்களில் தெய்வங்களின் உருவம் பற்றிய குறிப்புண்டு. பஞ்சலிம்ச பிராமணத் தில் பிற்பட்ட சேர்க்கையாகிய சத்லிம்ச பிராமணத்தில் தெய்வ உருவம் பற்றிய குறிப்புண்டு. பாரஸ், கிருஷ்ய, சூத்திரம் மாணவன் தெய்வ விக்கிரகங்களைக் கண்டால் தனது வாகனத்திலிருந்து இறங் கிச் செல்லவேண்டுமெனக் கூறும் வேத கிருகம் தேவாயதனம் தேவகுலம் முதலிய சொற்கள் காணப்படுவதில் இருந்து விக் கிரக வணக்கம் அக்காலத்தில் நிலவியது என்பதை ஊகிக்க முடிகிறது. ஹீனோ திசம்- மாக்ஸ்முல்லர் ஒரு தெய்வப் பண்பு ஏனைய தெய்வத்திற்கும் கூறுதல் மரபு. விக்கிரகம் பற்றிய நேரடியான குறிப்பு முதன்முதலில் பாணினியின் அஷ்டாத் யாயியில் கி.மு 5ஆம் நூற்றாண்டில் தெய் வங்களின் உருவம் காணப்பட்டமைக்குரிய நேரடிக் குறிப்பாகும். விக்கிரகங்கள் பிர கிருதி என்ற பெயரால் சுட்டப்படுவன. அர்ச்சா என்ற பெயரும் பாணினிக்குத் தெரிந்த ஒன்று.

அர்ச்சா என்பது தெய்வத்தின் விக் கிரகங்களையே குறித்தது. பதஞ்சலியின் பாஷ்யத்தில் இருந்து இக்கருத்து மேலும் தெளிவாகிறது. ஆபஸ்தம்ப இரு உற்ய சூத்திரத்தில் ஈசானனின் உருவம் குறிக்கப் படுகிறது. அர்த்த சாத்திரத்தில் தெய்வங் களின் உருவங்களும் அவற்றுக்குரிய இடம் பற்றிய குறிப்பில் சிவன் பற்றியும் கூறப்படுகின்றன. தெய்வங்கள் பற்றிய குறிப்புக்கள் இதிகாசத்திலும் காணப் படுகின்றன.

சிவவிக்கிரகவியல்பற்றி அறி வதற்கு புராணங்களும் பெருமளவிற் துணைபுரிவன. ஆகமங்கள் சுருங்கக்கூறிய கருத்திற்குப் புராணங்கள் விளக்கம் தரு வன. தென்னாட்டில் உள்ள கோயில்களி லேயே புராணம் கூறும் விளக்கங்களுக்கு ஏற்ப அமைந்து விளங்குகின்றன. மஸ்ஸிய புராணம், அக்கினி புராணம், பத்மபுராணம், விஷ்ணுபுராணம் ஆகியனவற்றில் விக்கிரக வியல் விக்கிரக அளவை பற்றிய தரமிக்க தகவல்கள் காணப்படுகின்றன.

விக்கிரகம் பற்றி அறிய வட இந்தியாவிலும் மத்திய இந்தியாவிலும்

காணப்படும் நாணயங்கள், சின்னங்கள் சான்று பகர்கின்றன. இந்திய வரலாற்றில் பொற்காலம் எனப்படும் குப்தர் காலத்தில் ராஜ்காட், நாலந்தா ஆகிய இடங்களில் வெளிப்படுத்தப்பட்ட களிமண் சின்னங்கள் விக்கிரகவியல் வரலாற்றுக்கு இன்றியமை யாதவை.

சங்ககாலத்தில் நடுகல் வழிபாடு சிறப்பாகக் காணப்பட்டது. முதலில் வெறும் கற்கள் போரில் இறந்த வீரனது அடையாளமாக நடப்பட்டன. பின்பு அவற் றில் அவனைக் கடவுளாக எழுதினார்கள். அதன்பின் வரலாற்றுக் காலத்தில் மனித உருவத்தில் படைப்புச் சிற்பங்கள் படைக் கப்பட்டன. அதன்பின் கோயிற் சிற்பத்தின் தொன்மையைக் கணிப்பதற்கு இச்செய்தி துணைபுரிகின்றது. சிற்ப வடிவிலான கல்லை "கடவுளெழுதிய கல்" எனச் சங்கச் செய்யுள்கள் குறிப்பிடும். இக் கருத்து சிவ விக்கிரகவியல் வளர்ச்சிக்கும் பக்தி நெறிக்கும் வித்திட்டன.

காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயிலில் பல்லவர் வரலாற்றுப் பெருமை யினை தெரிவிக்கும் சிற்பங்கள் வெளிப் பட்டுள்ளன. பல்லவர் அமைத்த குடை வரைக் கோயில்களில் உள்ள வாயிற் காவலர் உருவங்களும் திருச்சிமலைக் கோட்டையில் உள்ள சிற்பங்கள் உட்பட பிறவகைச் சிற்பங்களும் சிறந்த வேலைப் பாடு கொண்டவை. பல்லவர்காலச் சிற்பக் கலையின் மேன்மையினைப் பறைசாற்று கின்றன.

சோழர்காலம், பல்ல்வர் காலத் தினைக் காட்டிலும் சிறந்து விளங்கியது. பல்லவர் காலத்துச் சிற்பத்தினை விடுத்துக் கருங்கல்லினால் திருவுருவங்கள் அமைத்த சிறப்பினைத் தஞ்சைப் பெருங்கோயில், கங்கைகொண்ட சோழேச்சரம் இராச ராசேச்சரம் திரிபுவனவீரேசுவரம் ஆகிய கோயில்களில் சோழர் படைத்த சிற்பக் கலையின் பெருமையினைக் காணலாம். பதினாறு அடி உயரமுள்ள வாயிற்காவலர் உருவங்கள், கலைமகள், அலைமகள், மலைமகள் உருவங்கள் மிகப்பெரிய நந்தி யின் உருவம் விமானத்திற் காணப்படும் பலவகை உருவச்சிற்பங்கள் வியத்தகு வேலைப்பாடு கொண்ட தூண்கள் ஒரே வட்டக்கல்லில் நவக்கிரகங்களைக் குறிக் கும் கண்கவர் சிற்பங்கள். அரசன், அரசி உருவச்சிற்பங்கள் முதலியவை குறிப் பிடத்தக்கவையாகும்.

சிதம்பரம் மேலைக் கோபுர வாயினில் நடன வகைகள் பல சிற்பங் களாகக் காட்டப்பட்டுள்ளன. இதே போன்று தில்லைக் கோயில் சிற்பங்களைக் காண் கிறோம். விஜய நகர வேந்தர் ஆட்சியில் இருந்தபோது சிற்பக்கலை சிறந்த வான ளாவிய கோபுரங்கள் இக்காலத்தில்தான் எழுந்தன. அவற்றில் உள்ள சுதை உரு வங்கள் இக்காலத்தில்தான் அமைக் கப்பட்டன. திருவண்ணாமலையிலுள்ள சோழச்சிற்பங்களும் கோபுர வாயில்களில் காணப்படும் நடனக் கற்சிற்பங்களும் இக்காலத்தவை. விஜயநகரவேந்தர் ஆட்சியில் ஆந்திர நாட்டுச் சிற்பக்கலை யும் கன்னட நாட்டுச் சிற்பக்கலையும் தமிழ் நாட்டுச் சிற்பக்கலையுடன் கலப்புண்டன. பலவகை வேலைப்பாடமைந்த மிகப்பெரிய தூண்கள் யாளிகளைக் கொண்டவை.

திருக்குறுங்குடி கோவில் கோபுர வாயில் வெளிப்புறச் சுவரில் திருமாலின் பத்து அவதார வடிவங்களைச் சிற்பங் களாகக் காண்கின்றோம். தஞ்சை அதன் மனையில் சலவைக் கல்லாலான

**பிறவியும் வாழ்வும் ஆத்ம ஸ்வரூபத்தில்தான் தோன்றுகிறது.**

சரஜோஜி மன்னர் சிலை காணப்படு கின்றது. இச்சிற்பம் மகாராட்டிரர் காலத்துச் சிற்பக் கலைத்திறனை நமக்கு விளக்கிக் காட்டுகின்றது.

இந்த நூற்றாண்டில் அறிஞர் நாகப்பா என்பவர் சென்னையில் சிறந்த சிற்பக்கலை வல்லுநராயிருந்து வாழ்ந்து மறைந்தார் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. ஐயனார்,முனீசுவரன் கோவில் கள் மிக்க பழைமையானவை. அவற்றில் செங்கல், மண், சுண்ணாம்பு ஆகியவற்றா லான குதிரைகள் அழகிய பெரிய உருவங்களில் அமைந்துள்ளன.

வியத்தகு வேலைப்பாட்டுடன் கூடிய வார்ப்புக்கலையாகும். உலோகங் களை உருக்கி அந்தந்த மூர்த்தங்கள் செதுக்கப்பட்ட அச்சில் வார்த்துக் கட வுளின் திருவுருவங்கள் அடியார் திருவுரு வங்கள் கண்ணைக் கவரும் முறையில் அமைக்கப்பட்டன. தில்லையில் இத் தகைய உருவத்தைக் கூத்தப்பிரானுடைய கோலத்தைக் கண்ட அப்பர் அடிகள் கீழ்வரும் பாடலைப் பாடினார்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும்..."

என்ற பாடல்மூலம் இறைவன் உண்மைத் திருமேனிச் சிறப்பினைப் பாடுகின் றார். இதேபோன்று ஆழ்வார்களுடைய பாடல்களிலும் பாடப்பட்ட சிறப்பினைக் காணக்கூடியதாக உள்ளன.

"பச்சைமா மலை போல் மேனி பவளவாய்
கமலச் செங்கண்......"

என்ற அடிகள் மூலம் இறைவனுடைய அழகு வர்ணிக்கப்படுகின்றது. இத்தகைய உருவங்கள் வார்ப்புக்கலையின் மூலம் விக்கிரகக்கலை உன்னத இடத்தினை அடைந்து இன்று திருவுருவவழிபாடு ஓர் உயர்நிலை அடைந்து உள்ளது.

தொகுத்துநோக்குமிடத்துத் திரு வுருவவழிபாடு இன்று பெருநிலையினை அடைந்து உள்ளது எனலாம். இத்தகைய உருவத்தினைச் செய்வதற்கு இயற்கை யிற் காணப்படும் பல மூலப்பொருட் களையே கொண்டு உருவாக்கினார்கள். இத்தகைய திருவுருவத்தை உருவாக்கி மண், மரம், கல், சலவைக்கல், உலோகம், சுதை, சீமேந்து போன்ற பல பொருள் கொண்டு உருவாக்கி இறைவனுடைய அருள் நிலையை வெளிப்படுத்துகிறார்கள். சிற்பிகள் சைவர்களுடைய சமய வாழ்க் கையில் திருவுருவ வழிபாட்டு மரபு இல்லா திருப்பின் சாதாரண மக்கள் சமய அனுபவத்தைப் பெறுவதற்கு பெரிதும் இடர்ப்படுவர் என்று கூறத்தக்க வகையில் இத்திருவுருவ வழிபாடு முக்கியத்துவம் பெற்ற ஒரு மரபாக விளங்குகின்றது.

திருவுருவ வழிபாடு ஆன்மாக் களையும் இறைவனையும் இணைக்கும் ஒரு தொடர்பாலமாகவே உள்ளது. திரு வுருவ வழிபாட்டின்மூலம் பாமரமக்களும் தங்களுடைய இறை அனுபவத்திற்கேற்ப இறைவனுடைய திருக்கோலத்தினை தரிசிக்கத்தக்கவகையில் அமைத்துள்ளன. திருவுருவத்தில் மரத்தினாற் செதுக்கப் படுபவை இன்று அரிதாகவே காணப் படினும் தேர்ச்சிற்பங்கள் முக்கியம் பெறும்

என்று கூறப்படுகின்றது. மரத்தில் இறைவனை வீதிஉலா செல்கின்ற வாகனங்கள், தேர்ச்சில்லுகள் இறைவனுடைய திருவிளையாடல்கள் தேரினைச் சுற்றிச் சிற்பமாகச் செதுக்கப்பட்டு அமைக்கப்படுபவை கவனிக்கத்தக்கது. இன்று திருவாசிகூட மரத்தில் செய்யப்பட்டு வைக்கப்படுவதையும் காணலாம். இத்திருவுருவ வழிபாடு பாரததேசம் தவிர்ந்த தென்னாசிய நாடுகள் எல்லாம் பரவி இன்று மிகவும் பாரிய பெருவளர்ச்சியைக் கண்டுள்ளது. என்றோ ஒருநாள் சிற்பக் கலைஞன் புரிந்த சாதனை காலத்தை வென்று தலைமுறை தலைமுறையாக மனித சமுதாயத்திற்கு இன்பத்தைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. (முற்றும்)

## காலையில் கோலமிடுவது எதற்கு?

அதிகாலையில் முற்றம் கூட்டித் தெளித்தபின் வாசலில் அழகான கோலமிடுவது நம் நாட்டில் இன்றும் செய்துவருகின்றோம்.

இதில் தனிப்பட்ட சிறப்புக்கள் எதுவும் இல்லையானாலும் இதில் ஓர் பெரிய பௌதிக உண்மை அடங்கியிருக்கின்றது. மனிதன் பிற உயிரினங்களிடம் கருணை காட்டி வாழ்வதற்கு அனேகம் உதாரணங்கள் நம்மிடையே உண்டு. நாம் உணவாகப் பயன்படுத்தும் அரிசியின் பொடியே முற்காலத்தில் கோலம் வரைய உதவும் மாவு.

இன்றும் சிலராவது அரிசிமாவில் கோலம் வரைகின்றனர். நாம் உணவருந்தும் முன் எறும்பு முதலிய சிறுபிராணிகட்கு உணவளிப்பது என்ற மனித தர்மத்தின் பாகமே கோலம் வரைத்தல். ஆனால் கோலம் வரைந்த இடத்தில் எப்போதும் எறும்பு முதலியவை புகுந்து மாவை உண்ணுவது நாம் காண்பதில்லை.

## ஞாயிற்றுக்கிழமை சிவந்த பூக்களால் சூரியனைப் பூஜிக்க வேண்டும்

பிற விரத நாட்களைப் போலவே ஞாயிற்றுக்கிழமையும் அனுசரிக்க வேண்டும். ஆனாலும் சூரியனுக்கு சிவப்புப் பூக்களாலும் இரத்த சந்தனத்தாலும் பூஜை நடக்க வேண்டும் என்பது விதிமுறை. சூரியன் சம்பந்தமாக இந்த நாளை அனுசரிப்பதால் ஞாயிறு விரதத்தை இரவி வாரவிரதம் என்றழைப்பதுண்டு. இந்த விரதம் இருப்பவர்கள் மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கும் உப்பு, எண்ணை முதலியவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. சூரியன் மறையும் நேரத்துக்குப்பின் உணவருந்துவதை நிறுத்தி மறுநாள் உதயம்வரை உபவாசமிருக்க வேண்டும் என்பதே ஞாயிற்றுக்கிழமை விரதத்தின் சிறப்பு.

இந்த விரதம் சரியானபடி அனுசரித்துள்ளவர்கட்கு சரும நோய்கள் மற்றும் கண் சம்பந்தப்பட்ட நோய்களைத் தவிர்க்கலாம் என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.

**தத்துவ ஞானம் கற்பது, நமது அற்பச் சிந்தனைகளை நீக்கும்.**

# பன்னாலையம்பதி
# சிவனடியார் தொண்டர் மடம்

**சைவப்புலவர் க. நித்தியதசீதரன் அவர்கள்**

சைவச்சான்றோர்களே அன்பர்களே!

ஈழ மணித்திருநாட்டினைத் திரு மூலர் சிவபூமி எனப்போற்றி வணங்கினார். இந்நாட்டின் வடபால் வீணாகானபுரம் எனச் சிறப்பித்து பிதிர்க்கடன் செய்யும் புண்ணிய ஷேத்திரமாம் நகுலேஸ்வரம். எம்பெரு மானைச் சிகரமாய்க் கொண்டு கீரிமலை அமைந்துள்ளது. தெல்லி நகரின் மேற்குத் திசையுமாய், நகுலேஸ்வரத்தின் தென் கிழக்காய் பன்னாலையம்பதி விளங்குகின் றது. சைவச்சான்றோர் ஆர்வலர் வாழ்பதி யாகும்.

பன்னெடுங்காலமாய் சிவபூதவ ராஜர் வருத்தலம் கற்பக விநாயகர், சின்னப்பிள்ளையார் (கணபதீஸ்வரம்) பால சுப்பிரமணியர் (திருஷிச்சரம்) ஒற்றைக்கால் ஞானவைரவர், வல்லுவத்தை ஞான வைரவர், குருநாதர் கோயில், வீரபத்திரர் என்று கோயில்கள் கொண்ட குடியிருப் பாகும். இவற்றோடு எழுச்சிபெற்றதே சிவனடியார் தொண்டர் மடமாகும்.

இப் புண்ணியக்கிராமத்தில் வேதம் ஓதும் அந்தணர்கள், சைவப் பெரியார்கள், சித்தர்கள், கல்விமான்கள்,சைவ சித்தாந் திகள், நீதிபதிகள், வைத்திய கலாநிதிகள், அதிபர், ஆசிரியர்கள், கலைஞர்கள் மண் தொட்டு வளம்பெருக்கும் விவசாயச்சான் றோர்கள் கூடிய பதியே பன்னாலையாகும். மாவிட்டபுரக் கந்தன் ஆலய வேட்டைத் திருவிழாவில் கலந்துகொண்ட உடுவில் முத்துக்குமார கவிராஜர் முருகன் திரு வுலாக் காட்சியைக் கண்டு ஊரெல்லாம் வலம் வருகின்றார் கந்தன் எனப் பாடினார். அப்பாடலில் "முடிவிலா துறை சுன்னாகத் தான் வழி.... எனத் தொடரும் பாடலில் .....உடுவிலான் வரப் பன்னாலையான் மிக உருத்தனன் கடம்புற்ற மல்லாகத்தில்....." எனச் சிறப்பித்துள்ளார்.

இத்தகைய பெருமை சேர் பன் னாலை அன்பர்கள் பாரதநாடு சென்று வருதல் வழமையாகும். அந்த வகையில் நீதிபதி சேர் அ. கனகசபை அவர்கள் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகாநாட்டில் தலைமைதாங்கி விழாச்சிறப்பித்தமையும், வித்துவான் சிவானந்தையர் சிதம்பர தரிசனம் செய்து அதன் அருட்பிரகாரத்தை பதஞ்சலி வியாக்கிரபாத முனிகளின் சிறப்போடு புலியூர்ப் புராணம் பாடினார். இவ்வாறு தொடர்ந்த பத்தர்வழி முத்திருஷி என்பவர் சித்தம் களிகூர்ந்த நிலையில் முருக இயந் திரப் பெட்டியும் கொண்டு பன்னாலையம் பதி சேர்ந்தார். இப்பெரியார் காலத்தே முறைப்படி திருஷிச்சரம் எனப் போற்றிய பாலசுப்பிரமணியர் ஆலயம் பாரத நாட்டுக் கோயிற் கலைகளுக்கு அமைவாகக் கட்டப் பட்டது. இதனைக் கர்ணபரம்பரைக் கதை களோடு அந்தணர் பரம்பரைக் கதைகளும் கூறும் வகையில் அமையப் பெற்றுள்ளது.

அவ்வாலயத்தின் கருவறை மேற் குப்புற இரண்டாம் சுற்றுப் பிரகாரத்தின் எல்லையாகக் கொண்டு அமையப்

பெற்றதே சிவனடியார் தொண்டர் மடம். ஆரம்பகாலத்து நடுமுற்றம் கொண்ட நாற் சதுர மண்டபமாக அமைந்துள்ளது. இங்கு கிழக்கு நோக்கிய கருங்கல் சிவலிங்க மூர்த்தியும், ஐம்பொன் நடராஜர், சிவகாமி யம்பிகை மணிவாசகர் திருவுருவங்களும் காணப்பட்டன. இம் மடாலயம் முத்திருஷி காலத்தே எழுச்சி பெற்றிருக்கலாம் என்றும் எண்ணப்படுகின்றது.

ஆனால் இம்மடம் ஆவணப் படுத்திய நிலையில் 1940ஆம் ஆண்டு முதல் தாடியர் மடம் எனச் சுருக்கமாக அழைப்பர். ஏனென்றால் பண்ணாலை உயர் சைவவேளாளர் மரபின் குடிப்பிறப்பாளர், சைவாசாரசீலர் திரு சீ. இளையதம்பி நைஷ்டிகப் பிரமச்சாரியாக இருந்து தனது சொத்துக்களையும் இம் மடத்திற்கே ஆவ ணம் செய்து கொண்டார். நீண்ட சடாமுடி வெண்ணிறத்தாடி, தோற்றத்தில் குறுமுனி அகத்தியர் கோலமும் குடிகொண்ட நிலை யில் இளையதம்பி அவர்கள் மடத்தினைப் பரிபாலனம் செய்தார்.

இப்பெரியார் இம்மடத்தினை சிவனடியார் தொண்டர் மடம் என்று பெயர் சூடிக்கொண்டார். மடத்தின் பெரியவர் நந்த வனம், மருத்துவ மூலிகைச் செடி கொடி கள் உருவாக்கி இறைவழியாகும். அடியார் நோய்பிணி நீக்கியும் வந்தார். வயற் காணிகளுடன் மடத்தின் நிலச் சொத்தாக 48 பரப்புக்காணிகள் இன்று ஆவணங் களுடன் அமைகின்றது.

சைவாசார சீலர் இளையதம்பி ஐயா காலத்தில் இருந்து இம்மடாலயத் தில் பெருவிழாக்கள் கொண்டாடப்பட்டன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், திருவாதவூரடிகள் நால்வர் குருபூசையே பெருவிழா. அன்ன தானப் பணிகள் செய்து திருமுறைப் பாரா யணங்கள், அவர்கள் பாடிய சிதம்பரப் பதிகங்கள் ஓதுதல் முறைப்படி நடை பெற்றன. நவராத்திரி உற்சவமும் மானம் பூத் திருவிழாக்காலத்து பாலசுப்பிரமணியர் ஊர்வலம் எழுந்து சிவனடியர் தொண்டர் மடத்தில் வன்னிமரத்தின் கீழ் வன்னி வாழை வெட்டு நடைபெறுவது வழமை யான மகிழ்ச்சிகரமான உற்சவமாகும். சிவராத்திரி மார்கழி மாதம் திருவெம்பாவை உற்சவத்துடன் மணிவாசகர் விழாவும் நடைபெறும். சைவச்சான்றோர்கள் பங்கு பற்றியதுடன் அன்றுதொட்டு இன்றுவரை சிவனடியார் மடத்திற்கு நல்வழிகாட்டியாக விளங்கியவர் சிவத்தமிழ்ச் செல்வி தங் கம்மா அப்பாக்குட்டி அவர்கள். இவர்களின் அணுக்கமும் நெருக்கமுந்தான் இன்று புதுப்பொலிவுடன் விளங்குகிறது.

அன்றுதொட்டு பஜனைகள் தின மும் நிகழ்த்துவதும் தியான யோகப்பயிற்சி அறைகளும், நூல்நிலையமும், சிவ அனுட்டான பயிற்சிகளும் முறைப்படுத் தப்பட்டன. சைவச் சொற்பொழிவுகள், சைவ சித்தாந்த வகுப்புக்கள், புராண படனப் படிப்பு, பயிற்சி என சைவநெறிக் கான செயல் வடிவம் கொடுத்த நிலையில் சைவச் சான்றோர்களை உருவாக்கியது. பன்னாலையம் பதிக்கு சைவக்கேத்திர நிலையம் எனப்போற்றும் வகையில் சிவனடியார் தொண்டர் மடம் விளங்கியது.

சைவப்பெரியாரான இளையதம்பி ஐயா இறை இன்பத்தில் கலந்து கொண்ட பின்னர் அவர் உறவு வழியில் சைவச் சான்றோர் ஒன்றுகூடி நம்பிக்கைச் சபை உருவாகியது. அச்சபையின் பணிகள் ஊக்கத்தையும், ஆக்கத்தையும் கொடுத்து வளம்படுத்தின. அப்பெரியார்கள் வரிசை யில் திரு வி. சீனியர், திரு சி. இளைய குட்டி, திரு வி. சங்கரப்பிள்ளை, திரு

எஸ். சிவபாதசுந்தரம், திரு வை. பொன்னையா ஆகியோர் அங்கம் வகித்தனர். இவர்களில் திரு வி. சங்கரப்பிள்ளை ஆசிரியர் தவிர ஏனையோர் இறையின்பம் பெற்றனர்.

இச்சிவனடியார் தொண்டர் மடம் இறுதிக் காலத்தே திரு வை. பொன்னையா (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களே பொறுப்பேற்று சிறப்புற அனைத்து விழாக்களும் கொண்டாடப்பட்டன. ஆனால் 1992ஆம் ஆண்டு ஏற்பட்ட வலி வடக்கு இடப்பெயர்வினால் கைவிடப்பட்டு 1996ஆம் ஆண்டுவரை புலம் பெயர்ந்தோர்களே! இதனால் செயல் இழந்த ஊரினை மீளவும் பொன்னொளி வீசிடச் செய்யும் பணியில் (J/224) பிரிவில் பணியே தன் கடமை எனத் துடிப்புடைய திரு சிவகுமார் (கிராம உத்தியோகத்தர்) முயற்சியாலும் அந்தண பெரியோர், குடிமக்கள் அனைவராலும் அடவிகாடாய் விளங்கிய திருவூராம் பன்னாலையம்பதி மீளவும் சிவப்பொலிவு பெற்றது. சிவபூதவராஜர் முதலாக கும்பாபிஷேகங்களும் புனருத்தாரணப் பணிகளும் நடைபெறும் வகையில் நித்திய, நைமித்திய உற்சவங்களும் நடைபெற்று வந்தன. இக்காலகட்டத்தில் மடத்தின் புனருத்தாரணம் தொடராத நிலையில் அங்குள்ள ஆடல்வல்லாளன் சிவகாமி விக்கிரகங்கள் களவுபோய் விட்டன. இக்கால சூழ்நிலையில் இறைவன் அசரீதிபோல் கிராம உத்தியோகத்தருக்கு உணர்த்த அதன்வழி அந்தணர்கள் குடிமக்கள் எல்லோரும் அவ்விக்கிரகத்தைக் கண்டு ஆச்சரியம் அடைந்து நடராஜருக்குரிய புதிய அம்பிகையும் செய்யப்பட்டு புனருத்தாரணம் செய்ய வேண்டும் என எல்லோரும் முடிவு செய்து கொண்டனர்.

அப்பணியில் பிரம்மஸ்ரீ ம. மகேந்திரசர்மாவும் திரு வி. அம்பலவாணரும் (அம்புளி) மடத்துடன் தொடர்புடைய அன்பர்களும் பன்னாலை வாழ் மக்களும் தம்மை முழுமையாக அர்ப்பணித்து குறுகிய காலத்தில் இப்புனருத்தாரணத்தை நிறைவேற்றினர். நடுமுற்றம் இல்லாது பெரு மண்டபமாக்கி சிதம்பர நடராஜர் போல எழுந்தருளச் செய்தனர். இப்பணியில் இறுதிக்காலம் பொறுப்பாய் இருந்த வை. பொன்னையா அவர்களின் புத்திரர்கள் தந்தையின் வழி சிவப்பணியே தவப்பணியாகக் கொண்டு நிதியுதவி செய்தனர். இவர்களோடு ஊர் அன்பர்களின் நிதியுமே இம்மடம் 2008.01.28 திங்கட் கிழமை சிவப் பிரம்மஸ்ரீ சுகுமாரக்குருக்களின் தலைமையில் அந்தணக்குமாரர்கள் சகிதம் வேதமுழக்கொலியுடன் குடமுழுக்காகிய கும்பாபிஷேகம் பக்திபூர்வமாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து மாதாந்த திருவாதிரை உற்சவம், குரு பூசை வைபவம் யாவும் சிறப்புற நடைபெற்று வருதலைக் காணலாம்.

இச்சிவனடியார் தொண்டர் மடம் தொடரும் காலத்திலும் முன்னவர்கள் காட்டிய நன்னெறியை ஒழுகச் செய்து பன்னாலையம்பதிக்கு மட்டுமல்ல சைவ உலகிற்கே பணிபுரியும் மடாலய மாடம் விளங்கவேண்டும். சைவ அன்பர்கள், ஆர்வலர்கள் ஆதரித்து அரும்பணி செய்ய. நிதிகள் சுரந்திட அருள் சுரக்க சிவகாமியம்மை சமேதரராய் விளங்கும் நடராஜப் பெருமான் திருவடியைப் பிராத்திப்போம்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

**எவ்வாறு இறந்தான் என்பதல்ல கேள்வி எவ்வாறு வாழ்ந்தான் என்பதே கேள்வி.**

உ

# சைவர்கள் அவசியமாகத் தெரிந்துகொள்ள வேண்டியவை

சைவப்புலவர் கந்த சத்தியதாசன் அவர்கள்

**பிள்ளையார்:**

விநாயகர் தனக்குமேல் தலைவர் இல்லாதவர். எனவே எந்தக் காரியத்தை செய்யும் காலத்திலும், பூசை, கிரியை வழிபாடாக இருந்தாலும் பிள்ளையாரை வழிபட்டுத்தொடங்க வேண்டும். பிள்ளை யாருக்கு விசேடமாக 5முறை குட்டிக் கும்பிட வேண்டும். "குட்டனம் பஞ்சவாரகம்" எனக் காமிக ஆகமம் கூறும். வலது கையால் வலது பக்கத் தலையிலும் இடது கையால் இடது பக்கத் தலை யிலும் குட்டி வழிபடல் கைகளை மாறி காதுகளில் பிடித்துக்கொண்டு நன்கு தாழ்ந்து எழுதல் தோப்புக்கரணம் ஆகும். கரணம்- காது ஆகும். இது 3முறை செய்தால் போதும்.

பிள்ளையாரை அறுகம்புல், வன்னியிலை, மந்தாரை மலர்கொண்டு உமாசுதன், கணாதிபன், உயர்கவிமுகத் தோன் குமாரகுரவன், பாசாஸ்குகரன், ஏகதந்தன், ஈஸ்வர புத்திரன், ஆகு வாகனன், அருள்தரு விநாயகன், ஏரம்ப மூர்த்தி என்னும் நாமங்களால் அர்ச்சித்து வழிபடல் வேண்டும். துளசி ஆகாது. எழுதத் தொடங்கும் காலத்தில் உ இட்டு எழுதுவதும் மந்திரங்களை உச்சரிக்கும் காலத்தில் ஓம் எனும் பிரணவ மந்திரத் தோடு (ஓம் நமசிவாய) உச்சரிப்பதும் விநாயக வழிபாடே.

எல்லா வீடுகளிலும் வியாபார ஸ்தாபனங்களிலும் பாடசாலை, அலுவல கங்கள் என எல்லா இடங்களிலும் எமக்கு முன்னே இடப்பக்கமாக பிள்ளையாரை முதலில் வைத்து பின்னர் மகாலட்சுமி, சிவன்உமை, முருகன் வள்ளி தெய்வ யானை, இலக்குமி, நாராயணன் ஆகி யோரை வைத்து வழிபட வேண்டும்.

மங்கள காரியங்களில் நிறை குடத்திற்கு வலப்பக்கமாக பசுஞ்சாணி, மஞ்சள்மா, சந்தனம், அரிசிமா போன்ற பொருட்களால் பிள்ளையாரைப் பிடித்து அறுகம்புல் குத்தி பிள்ளையாரை வழிபடு வர்.

**திருநீறு:**

சைவனாகப் பிறந்த ஒவ்வொரு வரும் எந்தக்காரியத்தைச் செய்யும் வேளையிலும் குறைந்தது நெற்றியிலாவது திருநீறு தரித்தல் அவசியம். கோவிலில் கிரியைகள் செய்யுமுன் சிவாச்சாரியர் திருநீறு தருவதும், தான் அணிவதும் இதனாலாகும். விபூதி அணிந்தவருக்கு பலவகையான பலம் கிடைக்கும். அவரிட முள்ள கெட்டவைகள் எரிந்து சாம்ப லாகும்.

சைவர்கள் 7வயதில் கட்டாயமாக சமய தீட்சை பெறவேண்டும். சமயதீட்சை பெறாது ஆலயவழிபாடு செய்தல், விரதம் அனுட்டித்தல், நேர்த்திக் கடன்கள் செய் தல், திருமணம், மரணக்கிரியை, சிராத்தம் போன்ற கிரியைகளைச் செய்வதால் பயனில்லை. ஓட்டைக்குடத்தில் ஊற்றிய நீர்போலாகும். இது பலபேர் அறியாத

விடயமாகும். தீட்சை பெறாது நான் பல காரியம் செய்தேன் கோயிலில் உபநியாசங்கள் செய்தேன் பலன் கிடைக்கவில்லை என்று ஏங்கினாலும் சிவன் யாது செய்ய முடியும்.

சமயதீட்சை பெற்றவர் மந்திரங்களை உச்சரித்து நீரில் குழைத்து 3 குறியாக (திரிபுரண்டரம்) தலை, நெற்றி, மார்பு, கொப்பூழ், இரு முழங்கால், இரு புயம், இரு முழங்கை, இரு மணிக்கட்டு, இரு விலாப்புறம், முதுகு, கழுத்து எனப் 16 இடங்களில் அணியவேண்டும். இதனால் உடலுக்குப் பாதுகாப்பு உண்டு. விஞ்ஞானங்கூட திருநீறு அணிவதால் உடலில் உள்ள அழுக்கு நீர் (நிணநீர்) வெளியேறும் பல வியாதிகள் நீங்கும் என்று கூறுகின்றது. தலையிடி போன்ற நோய்களும் வாராது. கடைப்புருவம் வரை நெற்றி நிறைய முழுநீறு பூசுதல் வேண்டும். ஒருவிரலால் நடு அங்குலம் பூசினால் பயன் கிடைக்குமா? இரண்டு பனடோல் குடித்தால் தலையிடி மாறும் என மருத்துவர்களினால் கூற அதனைவிட்டு பாதிப் பனடோல் குடித்தால் மாறுமா யோசித்துப் பாருங்கள்.

திருநீறு விலைக்கு வாங்கக் கூடாது. ஒவ்வொரு குடும்பமும் தாந்தாமே பசுஞ்சாணியை எடுத்து வராட்டியாக்கி எரித்து சாம்பரை எடுத்து அணிதல் வேண்டும். திருநீற்றை ஒருவர் தன்னோடு எடுத்துச்சென்றால் அது பாதுகாப்பாக (இரட்சை) இருக்கும்.

திருநீற்றை ஒருவர் அணிந்து செல்லும்போது அத்திருநீற்றுக்குறி சிவனை எதிரில் வருபவருக்கு ஞாபகப் படுத்தும். இதனால் சிவனது நற்பலன் கிடைக்கும். இதனாலேயே சிவனடியாருக்குச் செய்யும் தொண்டுகள் சிவனுக்குச் செய்யும் தொண்டாகின்றது.

**சந்தனம்:**

இது ஒருவகை மரமாகும். இதன் கட்டையை சந்தனக்கல்லில் அரைத்து நெற்றியில் புருவமத்தியிலும் வேறு இடங்களிலும் அணியும்போது உடலுக்குக் குளிர்மையும் சுவாசம் சீராகவும் இடம் பெறும். மேலும் புருவமத்தியில் பல நரம்பு அந்தங்கள் காணப்படுவதால் அதனைக் குளிர்மையாக வைப்பதன்மூலம் மனம் குளிர்ச்சி பெறுகின்றது. மேலும் சிவனது நெற்றிக்கண் ஞானக்கண் ஆகும். அது அறிவின் அடையாளம் எமக்கும் அறிவு வெளிப்பட இவை வழிவகுக்கும்.

**குங்குமம்:**

மஞ்சள்பொடியில் அரைத்துச் செய்யப்படுவது குங்குமமாகும். சக்தி வழிபாட்டில் அர்ச்சனைக்காகவே பயன்படுத்தப்படுகின்றது. குங்குமத்தை அம்பாளுக்கு அருச்சித்து அந்தப் பிரசாதத்தையே பல பெண்கள் அணிந்து வருகின்றனர். இது அவர்களுக்கு பாதுகாப்பானதாகவும் இலட்சுமிகரத்தையும் அழகையும் ஏற்படுத்துகின்றது. சாவித்திரி அம்பாளை பூசித்த குங்குமத்தை அணிந்து சென்றதால் இயமலோகம் சென்றது மட்டுமல்ல இயமனிடமிருந்து இறந்த கணவனின் உயிரையும் மீட்டுவந்தாள்.

திருமணமான பெண்கள் எந்நேரமும் குங்குமத்திலகம் அணிந்திருக்க வேண்டும். இத்தோடு நெற்றியின் மேற்புறம் உச்சியிலும் அணிதல் திருமணமானதற்கு அடையாளமாகும். ஆண்களும் குங்குமத் திலகம் அணியலாம். சிறு பெண்களும் அம்பிகையின் பிரசாதத்தையே திலகமாக அணியலாம். (ஒட்டுப் பொட்டுக்கள் அழகு

மட்டுமே தரும்) குங்குமம் போன்றுவரும் சாயப்பவுடர்கள் ஆகாது. சிலவேளை ஒவ்வாமையையும் கொண்டுவரும்.

திருமணமான சுமங்கலிப் பெண்கள் தினமும் தாம் அணிந்திருக்கும் தாலிக்கும் குங்குமப் பொட்டிடுதல் வேண்டும். வீட்டிற்குத் திருமணமான பெண்கள் வரும் காலத்தில் குங்குமம் கொடுத்து விடுதல் வேண்டும். கோயில்களில் திருக்கல்யாணம் நடைபெறும்போதும் பல திருமண வீடுகளிலும் சுமங்கலிகளுக்கு அன்பளிப்பாக குங்குமம் கொடுப்பது நல்ல பழக்கமாகும்.

**தீர்த்தம்:**

தீர்த்தம் என்ற சொல் தீர்த்தோம் என்பதிலிருந்து வந்தது. ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தம் என்றார் மாணிக்கவாசகர் சிவனுக்கு அபிஷேகித்த நீர் குருவின் பாதங்களைக் கழுவியநீர் (பாதோதகம்) கோயில்களிலுள்ள புண்ணிய நீர் நிலைகளைத் தீர்த்தம் என அழைப்பர். தினமும் கோயில்களில் திருநீறு கொடுத்தபின் தீர்த்தம் வழங்கப்படும். சிவாச்சாரியார் கோவில் திருமஞ்சனக்கிணற்று நீரை கெங்கா, யமுனா, கோதாவரி, சரஸ்வதி, நர்மதா சிந்து, காவேரி, கன்னியாகுமாரி, துங்கபத்திரை எனும் புனித தீர்த்தங்களாக மந்திரத்தினாலும், பாவனையினாலும் மாற்றி அபிஷேகிப்பார். இத்தோடு பால், தயிர், இளநீர் போன்ற திரவியங்களை அபிஷேகிக்கும் போதும் அவற்றை எடுத்துத் தீர்த்தமாக வழங்கப்படும். விஷ்ணு ஆலயங்களில் இந்நீருக்குள் துளசி, ஏலம், போன்றன இட்டு வழங்கப்படும். வேறு சில ஆலயங்களில் பாலைக் காய்ச்சி தேன், கற்கண்டு என்பன கலந்து நிவேதனமாக வைத்துப் பிரசாதமாக வழங்கப்படும்.

இத் தீர்த்தநீரை இடது கையின் மேல் வலதுகையை வைத்து வாங்கி சுட்டுவிரல் பெருவிரலடியில் வைத்து பருகுதல் வேண்டும். பெண்கள் தீர்த்தம் வாங்கும்போது முந்தானையைக் கையில் பிடித்துக்கொள்ள வேண்டும். பருகிய மிகுதித் தீர்த்தத்தைக் கண்ணில் ஒற்றி தலையில் துடைத்தல் வேண்டும். புனித தீர்த்தத்தை கைக்குட்டையில் துடைக்கக் கூடாது. பின் உதட்டைக் கைகளால் 3 தரம் துடைத்தல் வேண்டும்.

புனித நீர்நிலைகளில் புண்ணிய காலங்களில் கோயில் தீர்த்தத் திருவிழாவில் நீராடும்போது சிவனின் பக்தி வெள்ளத்தில் மூழ்குகின்றேன் என்றும் நீரானது எனது உடல் அழுக்குகளைக் கழுவுவது போல் நான் செய்த பாவத்தையும் கழுவ வேண்டும் என எண்ணிப் பிரார்த்தித்து தீர்த்தமாட வேண்டும். அல்லாதவர்களுக்கு பாவம் கழுவப்படமாட்டாது.

கெங்கா, யமுனா, சரஸ்வதி... போன்ற புண்ணிய தீர்த்தங்களை வீட்டில் வைத்திருத்தலே மேலான புனிதமாகும். சங்காபிஷேகத்தன்று சங்கிலிருந்து பெற்றுப் பருகும் தீர்த்தம் எல்லாப் புனித தீர்த்தங்களையும் பருகிய பலனைத் தர வல்லது. சங்கில் சூரிய சந்திரர்கள், மத்தியில் வருணன், பின்பகுதியில் பிரஜாபதி, நுனியில் கங்கா, சரஸ்வதி நதியும் அடிப்பாகத்தில் பிரமனும் நடுப்பகுதியில் சரஸ்வதியும் சகல புண்ணிய தீர்த்தங்களிலும் வீற்றிருக்கின்றன.

**நிறைகுடம்:**

மங்கல, அமங்கல காலங்களில் எல்லாம் முக்கியமாக அமைவது நிறைகுடம். இங்கு நிறைகுடத்திற்கு

அண்மையில் இருமருங்கும் குத்துவிளக் கேற்றப்படும். தலைவாழை இலையின் தலைப்பக்கம் வடக்கு அல்லது கிழக்குப் பக்கமாக இருக்க அதன்மேல் நெல் அல்லது பச்சையரிசி நிறையப் பரவி அதன் மேல் குடம்நிறையத் தண்ணீர் நிரப்பி அதற்குள் 5,7,9 என்ற எண்ணிக்கையில் மாவிலைகள் அமையக்கூடிய ஒரு கிளையை வைத்து மேலே முடியோடு கூடிய தேங்காய் வைக்கப்படும். மேலே பூக்கள் வைக்கப்படும். குடம், தேங்காய் என்பவற்றில் விபூதி, சந்தனம், குங்குமம் அணியப்படும். கோயிலில் அபிஷேகத் திற்கு வைக்கப்படுவது கும்பம். மங்கல மாக வாயிலில் வரவேற்க வைக்கப்படுவது நிறைகுடம். நிறைகுடத்திற்கு வலதுபுறம் சாணிபோன்ற பொருட்களால் பிள்ளையார் பிடித்து அறுகம்புல் குற்றி வைக்க வேண்டும். முன்புறம் பழம், பாக்கு, வெற் றிலை, விபூதி, சந்தனம், குங்குமம் ஊது பத்தி என்பன வைக்கவேண்டும்.

நாம் இல்லம், கோயில், மடம், ஆதீனம் போன்ற புனித இடத்திற்குள் புகுங்காலத்தில் கால்கழுவி விடுட்டுச் செல்வதுபோல் திருக்கோவிலில் சுவாமி வீதிவலம் வந்து உள்ளே செல்லும்போது பாததீர்த்தம் ஊற்றப்பட்டு பாதம் கழுவப் படும். இது திருமஞ்சக்கிணற்று நீரில் வருணனை ஆவாகனம் பண்ணி மந்திரித்த கும்பம் ஆகும். ஆனால் சுவாமி வீதிவலம் வரும்போது வீதிகளில் வரவேற்க வைத்த நிறைகுடத்தை எடுத்து ஊற்றக்கூடாது. இவற்றை குத்துவிளக்கும் அணையாது இல்லத்திற்குள் எடுத்துச் சென்று சுவாமி யறையில் வைத்தால் தெய்வ சாந்தித் தியம் விளங்கும்.

நிறைகுடத்திற்கோ, கும்பத்திற்கோ முடி உடைந்த தேங்காய், ஒடித்த மாவிலை உடைந்த கூர் மங்கிய மாவிலை கள், துளிர் மாவிலைகள் அடிக்காம்பை வெட்டிய மாவிலைகள் வைத்தல் கூடாது. 3 மாவிலைகள் வைத்தாலும் தீமையைத் தரும். கும்பத்திற்கோ, நிறைகுடத்திற்கோ நிறைவாக நீர் இருக்கவேண்டும். குறை வாக நீர் வைப்பவர் பாவத்திற்கு ஆளாவார். வரலக்ஷ்மி விரதத்திற்கு மட்டும் செம்பினில் பச்சையரிசி நிரப்பப்படும். இரண் டிற்கும் செப்பு, பித்தளை, வெண்கலம், வெள்ளிக் குடங்களே சிறந்தது. துருப்பிடிக் காத இரும்புக் குடங்கள் (Silver) ஏற்றதல்ல.

(தொடரும்....

## அழகிய சந்நிதி முருகா அருள்வாய் நீயே

அன்ன தானக் கந்தா
அழகிய சந்நிதி முருகா
என்றும் அன்பர் உள்ளம்
இருந்திடும் குகனே கந்தா
முன்னை வினைதான் வந்து
மூண்டதோ இன்று நாங்கள்
என்ன பாவம் செய்தோம்
இரங்கி அருள்வாய் நீயே

*கவிஞர் வ. யோகானந்தசிவம் அவர்கள்*

கொழும்பு தமிழ்ச் சங்

ஒருபோதும் நம்பிக்கையை இழந்துவிடாதே நம்பிக்கை ஒரு தெய்வீக குணம்.

உ

# என்னிலும் ஈசன் எனக்கு இனியான்

திரு சிவ சண்முகவடிவேல் அவர்கள்

திருச்சிற்றம்பலம்

என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யானொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே

என்பது திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய பாமாலைப் பனுவல் ஒன்று. அது ஐந்தாம் திருமுறையில் அமைந்தது. திரு இன்னம்பர் மேவிய இறைவன்மேல் இயம்பியது.

அதன்பொருள்: என்னை விட எனக்கு இனிமையானவர் யாரும் இல்லை. என்னிலும் இனியவன் ஒருவன் உளன். அவன் யாரோ எனில் என்னுள்ளே உயிர்ப்பாகப் புறம் போந்தும் புகுந்தும் என்னுள்ளே நிற்கும் இன்னம்பர் ஈசன்

வாய்மை நிறம்பாத வாகீசருடைய வாய்மைக்கு அகச்சான்று அனேகம் பெரியபுராணத்திலுண்டு. ஓரிரண்டு எடுத்துக்காட்டுக்கள் இவை.

தம்மிலும் தமக்கு இனிமையர் காளத்தி அப்பர் அல்லா விடின் கண்ணப்ப நாயனார் கண்ணிடந்து அப்ப வல்லரோ?

வேட்கோவர் மாது சொன்ன சூளால் இளமை துறந்து திருநீலகண்டர் ஆணையைச் செயற்படுத்த வல்லாரோ? சிறுத்தொண்ட நாயனார் பிள்ளைக் கறியமுது படைத்து அமுது ஊட்ட வல்லாரோ?

இவையும் இவை போன்ற ஏனைய செயற்கருஞ் செயல்களைச் சிந்திக்கின்றபோது தம்மிலும் தம்முள்ளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக்கு உள்ளே நிற்கும் உத்தமன் மீது வைத்த அன்பு என்பது தெற்றெனப் புலனாகும்.

திருநாவுக்கரசு நாயனாரை எதிர்நோக்கிய இடர்ப்பாடுகளை எல்லாம் சூரிய ஒளி கண்ட புல்நுனிப் பனிபோலப் மாற்றுவித்தது.- என்னி லும்மினி யானொரு வனுளன் என்னும் ஐயந்திரிபற்ற தெளிவு.

வெவ்வழல் வெந்தறச் செய்ததா? நஞ்சு துஞ்சுவித்ததா? பட்டத்து யானை முட்டச் சென்றதா? கனதிமிக்க கல் கடலில் அமிழ்த்தியதா? தன்னிலும் மிக்க திருவருள் இன்பத்தைத் தானுணரப் பெற்றமையால் அல்லல் தீர்க்கும் அருமருந்தாயிற்று.

"என்னி லும்மினி யானை" அறியாது அலமந்து அல்லற் கடலில் அழுந்துவார்களைப் பார்த்து ஆதங்கப்படுகின்றார் ஆளுடைய அரசர்.

எல்லா உலகிற்கும் பரமபிதாவாகிய சிவபெருமானைத் தாங்கிக் குளிர்ந்த மனத்தை உடையவராகி அச்சிவானந்தத் தேனை உண்ணாது உலைகின்றார்கள் ஊமர்கள். ஆனைக்காவில் அம்மானை அடையமாட்டார்கள். இந்தத் தசைப்பொதியான உடலை உபயோகமற்றுச் சுமந்து திரிவார்கள்.

பத்திப் பெருக்கில் தித்திக்க வரும் தீந்தமிழ் பாரீர்

கோனைக் காவிக் குளிர்ந்த மனத்தராய்த்
தேனைக் காவியுண் ணார்சில தெண்ணர்கள்
ஆனைக் காவிலம் மானை யணைகிலார்
ஊனைக் காவி யுழிதர்வ ருமரே (5-306)

என்னிலும் இனிமை, தேன் இனிமை எப்படி இருக்கும் என்பதைத் திருநாவுக்கரசு நாயனார் திருவிடைமருதூர் திருப்பாடலில் பின்வருமாறு பாடிப்பருகச் சுவை ஊட்டுகின்றார்.

இடை மருதூரில் எழுந்தருளியிருக்கும் ஈசன் தன்னை அடைந்த அன்பர்களுக்குக் கனி, கட்டிக் கரும்பு, குளிர்மலரணிந்த கூந்தலையுடைய அழகிய பெண்கள் மகிழ்ந்து மணிமுடி சூடி ஆளும் அரசு ஆகிய அனைத்திலும் இனிமை உடையவன், என்று எடுத்து ஏத்துகின்றார்.

கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே (5-144)

கரும்பினும் இனியான் தன்னை, தன்னிலும் இனியான் தன்னை, சில தெண்ணர்கள் காவி உண்ணாத் தேனை, கனியினும் இனியானை, கட்டிக் கரும்பினும் இனியானை, அழகிய பெண்ணினும் இனியானை, தனியரசினும் இனியானை தன்னடைந்தார்க்கு இனியனைத் தன்னுள்ளே கண்டபின்பு இன்பத்தை உணர்ந்த பின்பு செய்யத்தக்கது இதுவாகும் என்பதைத் திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் தெளிவு படுத்துகின்றது.

உடம்பைக் கோயிலாக்கிக் கொள்ளவேண்டும். வலிய மனத்தை அடிமையாக்கல் வேண்டும். உண்மை ஒளிரவேண்டும். ஆன்மா இலிங்கமாகக் கொள்ளுதல் வேண்டும். அன்பையே நெய்யும் பாலும் நீருமாக திருமுழுக்காட்ட வேண்டும். இவ்வாறாக அகப்பூசையை ஈசனார்க்கு வாசனையோடு போற்றத் திருநாவுக்கரசு நாயனார் அமைத்துக் காட்டும் திறன் இது.

காயமே கோயில் ஆகக்
　　கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக
　　மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா
　　நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப்
　　போற்றவிக் காட்டி னோமே.

இவ்வாறு தன்னுடைய நெஞ்சை வயலாகப் பாவனை பண்ணி உழுது பண்படுத்த வேண்டும். இறை அன்பு என்னும் நென் முளையை விதைத்தல் வேண்டும். பொய்ம்மை என்னுங் களைகளைக் களைய வேண்டும். பொறுமை என்னும் நீர் இறைக்க வேண்டும். தன்னை அறிந்து தகைமை என்னும் வேலி இடுதல் வேண்டும். சிவநெறியில் ஒழுகி

வருவாராயின் சிவகதி விளையும். புறவயலில் நென்மணி விளையும். அகத்தில் சிவகதி விளையும்.

“மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி இட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற்
சிவகதி விளையு மன்றே.

## படுக்கையை விட்டு எழும்போது ஜெபம் சொல்லி எழுவது எதற்கு?

நித்திரை தேவியின் அருள் வேண்டும் என விரும்பாத உயிரினங்கள் உள்ளதாக நாம் கேள்விப்பட்டதில்லை. அன்றாட உலக வாழ்க்கையின் இன்னல்களிலிருந்து விடுபட்டு ஒருநபர் ஆத்மாவுக்குள் ஒதுங்குவதே நித்திரை என்று ஆசாரியர்கள் விளக்கம் கூறியுள்ளனர்.

தூக்கத்தை இழந்தவர்களைப் பொதுவாக துர்ப்பாக்கியசாலிகள் என்று அழைப்பதுண்டு. அதிர்ஷ்டசாலிகள் நித்திரையின் ஆழத்தில் மூழ்கி எல்லாம் மறந்து தூங்குகின்றனர். உணவும் தூக்கமும் ஒன்றோடொன்று இணைந்ததென்பது நமது உறுதியான நம்பிக்கை.

தூக்கத்தைக் குறித்து மட்டுமல்ல நமக்கு தூங்கி எழுவதற்கும் சில விதிமுறைகளுண்டு என்பதை உணரலாம். தூக்கத்தின் பிடியைவிட்டு, உதயத்துக்கு முன் ஒன்றரை நாழிகை விடியலில் பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து தினசரி அலுவல்களில் ஈடுபடவேண்டும் என்று ஆசாரியர்கள் கூறியுள்ளனர். இந்த வேளையில் தூங்கினால் உடல்நிலை குன்றும் என்றும், சோர்வும் தரித்திரமும் உருவாகும் என்று நம்பிக்கை நிலவுகின்றது. அதனால் பிரம்ம முகூர்த்தத்தில் விழித்து வலதுபக்கம் திரும்பி எழவேண்டும். விழித்த உடன் படுக்கையிலிருந்து குதித்தெழுந்து ஓடுவது தவறு. விழித்த உடன் இரு கைகளையும் மலரவிரித்து அதைப்பார்த்து இலட்சுமி, சரஸ்வதி, கௌரி என்ற தேவிமாரை தரிசித்து மந்திரம் சொல்ல வேண்டும்.

கராக்ரேவாசதே லட்சுமி,
கமரத்யே சரஸ்வதி,
கரமூலே ஸ்திதா கௌரி
பிரபாதே கரதர்சனம்

தூக்கம் நீடித்திருக்கும் போது மனிதனின் இரத்த ஓட்டத்துக்காக இருதயம் மிகக்குறைவான சக்தியை பயன்படுத்துகின்றது. திடீரென குதித்தெழுந்து செல்லும்போது இருதயம் மிகக் கடினமாகச் செயல்படவேண்டிய நிலை உருவாகின்றது. இது இதயத் துடிப்பை நிலைதடுமாறச் செய்கின்றது. அதனால் படுக்கையைவிட்டு எழும்பியிருந்து சிறிது நேரம் பதிந்த குரலில் மந்திரங்கள் சொல்லிக்கொண்டிருக்க வேண்டும் என்று நம் முன்னோர்கள் கற்பித்துள்ளனர். இது நம் இரத்த ஓட்டத்தை நிலைநிறுத்துவதற்காகவே என்று விஞ்ஞானம் கூறுகின்றது. அதுமட்டுமல்ல, இருதய நோயாளிகளில் இருபத்திமூன்று சதவீதமும் படுக்கையிலிருந்து எழும்பும்போது நிகழ்ந்த விபத்தினால் நோயுற்றனர் என்பது புள்ளி விபரம்.

உ

# இறப்பை எண்ணி....

## திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

இறக்கும்போது நான் என்னவாகப்போகின்றேன்? அப்படியே இயக்கமற்றுப்போய் விறைத்து சடமாகி சவமாகிப்போவேன். அப்படிப் போவது என் உடலா? நானா? உடல் என்றால் நான் யார்? இது புரியாத புதிர். இதுபற்றிப் பலரும் பலவாறு கூறியுள்ளனர். பட்டினத்தடிகளும் சிந்தித்திருக்கின்றார்.

மேவிய புன்மயிர்த் தொகையோ அம்மயிர்
பாவிய தோலின் பரப்போ தோலிடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணோ புண்ணிடை
ஊறும் உதிரப் புனலோ கூறுசெய்(து)
இடையிடை நிற்கும் எலும்போ எலும்பிடை
முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்(து)
உள்ளிடை ஒழுகும் வழும்போ மெள்ளநின்(று)
ஊரும் புழுவின் ஒழுங்கோ நீரிடை
வைத்த மலத்தின் குவையோ வைத்துக்
கட்டிய நரம்பின் கயிறோ உடம்பிற்குள்
பிரியா(து) ஒறுக்கும் பிணியோ தெரியாது
இன்னது யானென்(று) அறியேன் என்னை
எங்கும் தேடினேன் யாதிலும் காணேன்

என அவர் உடலினுள்ளே ஒவ்வோர் இடமாகத் தேடியும் தன்னைக் காணமுடியாது தவித்தார். அவரது பாடல் ஏற்கனவே முன்னைய கட்டுரைகளிலே பார்த்த "கால் கொடுத்து எலும்புமுட்டி", "ஊன்மிசை உதிரக்குப்பை" என ஆரம்பிக்கும் தேவாரங்களைப் போன்று நாம் சிங்காரித்து சீராட்டும் இந்த உடலின்மேல் ஓர் அருவருப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருப்பதும் கவனிக்கற்பாலது.

மேற்குறித்த திருவிடை மருதூர் மும்மணிக்கோவையின் பாடலிலேயே அவர் தன்னைக் கண்டதையும் பின்வருமாறு கூறுகிறார்.

தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலம் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையும் கண்டேன் காண்டலும்
என்னையும் கண்டேன் பிறரையுங் கண்டேன்

ஞான நாட்டம் கிட்டியதால் அவர் எல்லாவற்றையும் கண்டார். இறைவனையும் கண்டார். தன்னையும் கண்டார். எனவே "இந்த ஊனுடம்பு நானல்ல" என்பதை இப்பாடலில் தெளிவாக்குகிறார். மரணத்தின் பின் அந்த உடலின் நிலையையும் அவர் பாடியுள்ளார்.

செய்த தவறை மறைப்பது இரண்டுமுறை தவறுசெய்வதற்கு ஒப்பாகும்.

எரியெனக் கென்னும் புதுவோவெனக்கெனு மிந்தமண்ணுஞ்
சரியெனக் கென்னும் பருந்தோ வெனக்கெனுந் தான்புசிக்க
நரியெனக் கென்னும்புன் னாயெனக் கென்னுமிந் நாறுடலை
பிரிய முடன்வளர்த் தேனித னாலென்ன பேறெனக்கே.

என்ற அவரது பாடலொன்றினை உதாரணத்திற்கு எடுத்துப்பார்க்கலாம்.

புராணத்தின்பின் இந்த உடல் நிலைத்திராது அதன் நிலை இப்பாடலிலே விளக்கப்பட்டுள்ளது. தீயும் புழுவும் மண்ணும் பருந்தும் நரியும் நாயும் இந்த உடலைத் தமதாக்கிக்கொள்ள முனைவது பற்றிக்கூறும்போது அதே உடல் மரணத்தின் முன், மண், பொன், பொருள், மனிதர், விலங்குகள், பறவைகள் என்று விரும்பியவற்றையெல்லாம் தன்னுடையதாக்கிக்கொள்ள எவ்வளவு பாடுபட்டது? அதற்காக என்னென்ன காரியங்களைச் செய்தது? என்பவற்றையும் சேர்த்துச் சிந்திக்கத் தூண்டுகிறது. அதை பட்டினத்தடிகளும் சிந்தித்திருக்கிறார்.

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்த
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன் னினம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே

என்பது அவரது பாடல். இந்தப் பாடல்களையும் இதே தத்துவத்தைக் கூறும் எத்தனையோ பாடல்களையும் நூல்களையும் படித்தும் அம்பலவர் அடி சார்ந்து உய்ய நாம் முயல்வதில்லை.

அத்தகைய நாம் மரணம்வரும்போது இறைவனைச் சிந்திப்போமென்பது நிச்சயமற்ற ஒன்று. நாவுக்கரசர் இதுபோன்ற ஐயமேற்பட்டதனால்

"கூற்றங்கண்டு உம்மை மறக்கினும்
என்னைக் குறிக் கொண்மினே"

என வேண்டியது பற்றி முன்னைய கட்டுரையொன்றிலே பார்த்தோம். பட்டினத்தடிகளும் இறப்பு அணுகும் நேரம் இறைவனை வழிபட அவன்தான் வழிசெய்ய வேண்டுமென வேண்டிநிற்கின்றார். அந்த இறுதிநேரத்தில் நாம் பிள்ளையைப் பார்க்கவும் பேரப்பிள்ளையைப் பார்க்கவும் அவர்களின் கையால் பால்பருகி அவர்களின் மடியில் உயிர் விடவும் ஏன் மரணத்தின் பின் மகன்தான் கொள்ளிவைத்து இந்த அருமந்த உடலை எரியூட்ட வேண்டுமென்றுங்கூட ஆசைப்படுகின்றோம். ஆனால் பட்டினத்தடிகள் வேறுவகையில் ஆசைப்படுகிறார்.

'நமசிவாய' என்னும் திருவைந்தெழுத்து மந்திரத்தின் மகிமை மிகப்பெரியது. அந்த மந்திரத்தை ஓதி உய்ந்தவர்கள் பலர் அதன் பெருமை பற்றி திருமுறைகள் விதந்து கூறுகின்றன. இறுதி நேரத்தில் திருவைந்தெழுத்தை ஓதினால் பிறவிவேரறும். அதனை இறக்கும் நேரத்தில் ஓதவேண்டுமென்பது பட்டினத்தடிகளின் விருப்பம். அது உடல் இயக்கமற்றுப் போகின்றவேளை கைகளையோ கால்களையோ நாவையோ அசைக்க முடியாதிருக்கும் அப்போது அந்த மந்திரத்தை ஓதவேண்டும். ஓதும்போது கைகள் இறைவனைத் தொழவேண்டும்.

அதுமட்டுமல்ல, பஞ்சாட்சர மந்திரம் போன்றதே திருநீறு. அது உடற்பிணியையும் பிறவிப்பிணியையும் தீர்க்கும் மருந்து. "நீறில்லா நெற்றி பாழ்" என்பார்கள். நீறணிந்தால் நெற்றிமட்டுமல்ல அனைத்துமே பூரணத்துவத்துடன் பொலியும். இறக்கும்போது திருநீறு அணிந்து இறைவனை வணங்கி ஐந்தெழுத்தை ஓத வேண்டும் என வேண்டுகின்றார் அவர்.

விண்வெளிக்கோ சமுத்திரத்தின் அடிக்கோ, மலையுச்சிக்கோ பயணிப்பவர்கள் பாதுகாப்புக்காக பல பொருட்களைக் கொண்டுசெல்வார்கள். அதுபோல் வீடுபேறடைய வேண்டிய சாதனங்களையெல்லாம் கொண்டுசெல்ல அவர் விரும்புகிறார்.

நாம் இப்படி ஏதாவது ஆசைப்பட்டால் என்னசெய்வோம்? உறவினர் ஒருவரிடம் "நான் சாகும்போது இவற்றையெல்லாம் செய்துவிடு" என்று கூறுவோம். மரணம் சொல்லிக்கொண்டா வரும்? அந்த வேளையில் அந்த உறவினர் அருகிலிருப்பாரோ? எங்கிருப்பாரோ? பட்டினத்தடிகள் இப்படி உறவினர் எவரிடமும் தன் ஆசையை நிறைவேற்றுமாறு கேட்கவில்லை. இறைவனிடமே கேட்கிறார். அவன் நிச்சயமாக அவருடைய ஆசையை நிறைவேற்றுவானல்லவா?

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே

என்பதுதான் பட்டினத்தடிகளின் வேண்டுதல்.

நாம் மெய்யென்று பாராட்டிக் கொண்டிருக்கும் இந்த மெய், பொய்யாகின்ற அந்த நேரத்தை சொற் சித்திரமாக்கி எம்மனங்களிலே பதியவைக்கின்றார். மரணத்தறுவாயில் நெஞ்சினுள் சளி கட்டி இழுப்பேற்படும். கண்கள் செருகி விடும். இந்தப்பாடல் ஏற்கனவே பார்த்த ஞானசம்பந்தரின் தேவாரமாகிய "புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி" என ஆரம்பிக்கும் தேவாரத்தை நினைவிற்குக் கொண்டு வருகிறது. அவரும் இறுதிநேர அவஸ்தையை இத்தேவாரத்தில் விவரிக்கின்றார். அந்த விவரணமும் எம் மனங்களிலே ஒரு தாக்கத்தினை ஏற்படுத்துகிறது. 'எமக்கும் ஒருநாள் இறுதிநேரம் வரப்போகின்றது' என்ற எண்ணம் தோன்றுகிறது. 'அந்தநேரம் என்ன செய்யவேண்டும்?' என்பதை நாமும் தீர்மானித்துக் கொள்ளலாம். மகனோ மற்றோர் உறவினரோ வந்து மூலமந்திரத்தை காதிலே கூறி தேவாரம் பாடவேண்டுமென ஆசைப்படுவதைவிட ஞானசம்பந்தரும் பட்டினத்தாரும் ஆசைப்பட்டதுபோல் நாமும் விரும்புவது நல்லதல்லவா?

---

பகைவர்களை நேசிக்குமளவுக்கு நாம் மகான்களாக இல்லாமலிருக்கலாம். ஆனால் குறைந்தபட்சம் நம் உடல், நம் மகிழ்ச்சி இவற்றுக்காகவாகிலும் அவர்களை மன்னித்து மறந்துவிடுவோம்.

---

இரு நற்குணங்களான கனிவும் பணிவுமே இறைவனுக்கு அருகாமையில் எம்மை நிலைநிறுத்தும்.

---

**உடலுக்கு உழைப்பு போன்று உள்ளத்துக்கு துன்பங்கள் பலத்தைத் தரும்.**

உ

(தொடர்ச்சி...

## 2007ஆம் ஆண்டு உற்சவம் தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| பூ. பிரகாஷ் | இளவாலை | 5000. 00 |
| திரு ஜெயதேவா | பருத்தித்துறை | 4000. 00 |
| மயூரன் | இடைக்காடு | 1000. 00 |
| பரமலிங்கம் சிவகுமார் | இணுவில் | 1000. 00 |
| ந. இராஜசிங்கம் | காரைநகர் | 10000. 00 |
| A.C. துரைசிங்கம் | ஆவரங்கால் | 1000. 00 |
| திருமதி கௌரி சுரேசன் | ஆவரங்கால் | 2000. 00 |
| கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) | நீர்வேலி | 1000. 00 |
| பிருந்தா சிவராஜன் | கனடா | 20000. 00 |
| கு. குணசசிகரன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| பரஞ்சோதி சசிதரன் | துன்னாலைமத்தி | 15000. 00 |
| வ. ஆறுமுகம் அதிபர் | ஆவரங்கால் | 2000. 00 |
| சபா றேடர்ஸ் | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| Dr T. புவிராசன் | அச்சுவேலி | 1000. 00 |
| பெஷன் ஹவுஸ் கே.கே.எஸ் வீதி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| வி. கனகசபாபதி ஆசிரியர் | கோண்டாவில் மேற்கு | 1000. 00 |
| வே. தங்கவேலாயுதம் வீரகத்திப்பிள்ளையார் | கோவிலடி உடுப்பிட்டி | 1000. 00 |
| திருமதி தேவநந்தி சந்திரபிரகாசம் | பருத்தித்துறை | 5000. 00 |
| மகாலிங்கம் தயாபரன் | கொழும்பு | 2500. 00 |
| மகாலிங்கம் செபதீபன் | கொழும்பு | 2500. 00 |
| மகாலிங்கம் பிரபாகரன் | நவிண்டில் | 2500. 00 |
| புஷ்பராணி ஒப்பிலாமணி கட்டைவேலி | கரவெட்டி | 2500. 00 |
| சி. மாணிக்கம் 1ம் வட்டாரம் | புங்குடுதீவு | 1000. 00 |
| நா. பஞ்சலிங்கம் 2A செட்டித்தெரு | நல்லூர் | 1000. 00 |
| ப. கஜேந்திரன் | கொக்குவில் மேற்கு | 3000. 00 |
| P.T. பாலச்சந்திரன் | வல்வை (அவுஸ்திரேலியா) | 10000. 00 |
| T.B. யாதவன் | வல்வை (அவுஸ்திரேலியா) | 5000. 00 |
| நாகலிங்கம் நாகம்மா நினைவு மாலா சபாரெட்ணம் | கொழும்பு | 15000. 00 |
| கணேசன் ஜோதி நவிண்டில் | கரணவாய் வடக்கு | 5000. 00 |
| ஸ்ரீதேவி அரிசிஆலை | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| N. சுதாகரன் ஐயனார் கோவிலடி | கொடிகாமம் | 10000. 00 |
| திரு துரைராசா | உரும்பராய் | 2000. 00 |
| தம்பையா வல்லியானந்தம் | துன்னாலை வடக்கு | 1000. 00 |

| | | | |
|---|---|---|---|
| அம்பிகாபதி கந்தையா | பிரம்படிலேன் | கொக்குவில் | 20000. 00 |
| கந்தசாமி ஓவசியர் குடும்பம் | V.M. றோட் | பருத்தித்துறை | 1000. 00 |
| கமலினி ஸ்ரீபாதன் | | பருத்தித்துறை | 5000. 00 |
| P. செல்வநாதன் | | கொழும்பு | 2000. 00 |
| திரு கார்த்திகேசு ஆசிரியர் | | முறிகண்டி | 5000. 00 |
| திருமதி செல்வமாணிக்கம் முதியோர் இல்லம் | | இணுவில் | 2500. 00 |
| R. சிவலிங்கம் | | கரவெட்டி | 500. 00 |
| திருமதி செல்வரெத்தினம் | | லண்டன் | 5000. 00 |
| Dr. குகதாசன் | | கோண்டாவில் | 5000. 00 |
| தவமணி சின்ராசா | நுணாவில் கிழக்கு | சாவகச்சேரி | 500. 00 |
| வெ. அருட்குமரன் | | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| தி. வேலுப்பிள்ளை | | வல்வெட்டித்துறை | 6000. 00 |
| ஐடியல் அக்கடமி | | யாழ்ப்பாணம் | 10000. 00 |

## 2008ஆம் ஆண்டு உற்சவம் தொடக்கம்

## நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| அமரர் சி. சிவலோகம் ஆசிரியர் நினைவு | | இமையாணன் | 1000. 00 |
| திருமதி ரங்கநாயகி செல்வராசா | | இமையாணன் உடுப்பிட்டி | 1000. 00 |
| செல்வி ஜனனி இராமகிருஸ்ணா | | வியாழவத்தை நெல்லியடி | 1000. 00 |
| சண்முகராசா தனேஸ்குமார் | | கொட்டாஞ்சேனை கொழும்பு | 5000. 00 |
| வி. விஜித்தன் | | தொண்டைமானாறு (அவுஸ்திரேலியா) | 9000. 00 |
| திருமதி பாக்கியம் ஆசிரியை | | திருநெல்வேலி | 5000. 00 |
| T. சீவரெட்ணம் | சரவணா ஸ்ரோர்ஸ் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| S. சிவபாலசிங்கம் மூலம் S. புவனேஸ்வரராசா | | வல்வெட்டித்துறை | 7000. 00 |
| து. திலக்ஷன் | | கரவெட்டி | 1000. 00 |
| ந. சூரியகுமாரன் | பலாலிவீதி | திருநெல்வேலி | 1000. 00 |
| பார்த்தீபன் செல்வரெட்ணம் J.P | | அச்சுவேலி (லண்டன்) | 10000. 00 |
| பேராசிரியர் வி. சிவசாமி மூலம் அ. சண்முகராஜா (லண்டன்) | | | 20000. 00 |
| ம. துரைசிங்கம் அதிபர்மூலம் குமாரசாமி இரவிச்சந்திரன் | | | 4950. 00 |
| துரைசிங்கம் அதிபர்மூலம் வேலுப்பிள்ளை தனபாலசிங்கம் | | சுவிஸ்லாந்து | 9800. 00 |
| கு. கங்கைவேணியன் | வேணி ஸ்ரோர்ஸ் | யாழ்ப்பாணம் | 6மூடை அரிசி, 200Kg பருப்பு, 100Kg சோயா, 1புட்டி உள்ளி |
| A. சுந்தரலிங்கம் | அஞ்சல்திணைக்களம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| S. சிவயோகலிங்கம் | நிலாவெளி | திருகோணமலை | 10000. 00 |
| வைரமாளிகை | கன்னாதிட்டி | யாழ்ப்பாணம் | 5மூடை அரிசி |
| ந. சத்தியரூபன் | சிறி நதியா நகைமாடம் | யாழ்ப்பாணம் | 5மூடை சம்பா |
| வேணிகளஞ்சியம்மூலம் கணேஷ் | | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |

| | | | |
|---|---|---|---|
| R.T. சம்பந்தர் | | மலேசியா | 10000. 00 |
| சிவகுரு பத்மநாதன் | கந்தர்மடம் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| சிவா பிறதர்ஸ் | | திருநெல்வேலி | 1மூடை அரிசி |
| தி. தவபாக்கியராசா | | அச்சுவேலி | 2மூடை அரிசி |
| திருமதி சின்னையா | | கரணவாய் | 2000. 00 |
| திருமதி சக்திவேல் | நெடியகாடு | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| M. சதாசிவமூர்த்தி | | கனடா | 20000. 00 |
| திரு தம்பித்துரை | | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் | பத்தமேனி | அச்சுவேலி | 2000. 00 |
| செ. செல்வரெத்தினம் | தெஹிவளை | கொழும்பு | 10000. 00 |
| க. விசயரத்தினம் | தெஹிவளை | கொழும்பு | 1000. 00 |
| திரு கார்த்திகேசு மூலம் வீ. பத்மசீலன் | | (கனடா) அச்சுவேலி | 10000. 00 |
| சிவசுப்பிரமணியம் சறோஜினிதேவி | | மல்லாகம் | 5000. 00 |
| சிவசுப்பிரமணியம் புவனேஸ்வரி | | அச்சுவேலி | 5000. 00 |
| பா. சிவகுமார் K.K.S வீதி | | கோண்டாவில் | 1000. 00 |
| சி. சிவராசலிங்கம் தியேட்டர் லேன் | | இணுவில் | 1000. 00 |
| ஆ. இராசரத்தினம் | | கொழும்பு | 1000. 00 |
| R. ரவீந்திரன் | கீரிமலைவீதி | காங்கேசந்துறை | 10000. 00 |
| நடேசமூர்த்தி J.P | | அச்சுவேலி | 3000. 00 |
| அ.ச.நா. இராசையா | பழம்றோட் | கந்தர்மடம் | 2000. 00 |
| ஆ. ஜெகநாதன் அதிபர் | | பருத்தித்துறை | 1000. 00 |
| திரு முரளிதரன் | | மானிப்பாய் | 500. 00 |
| பாலசுந்தரம் பாலேந்திரன் | | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| M. தங்கவேல் (பலாலி) | போடிங்றோட் | பருத்தித்துறை | 2500. 00 |
| திரு நக்கீரன் | | கனடா | 1000. 00 |
| திரு ஸ்ரீகாந்தன் குடும்பம் | | கொழும்புத்துறை | 2000. 00 |
| ஆறுமுகம் தெய்வேந்திரம் | தோப்பு | அச்சுவேலி | 5000. 00 |
| சி. கிருபாகரன் குடும்பம் | | அச்சுவேலி தெற்கு | 2000. 00 |
| S. மிகுந்தலா | கட்டைவேலி | கரவெட்டி | 1000. 00 |
| S. முருகஅருள் (கனடா) | | கட்டைவேலி | 1000. 00 |
| Dr. P. சிவபாலன் | சந்நிதி வைத்தியசாலை | கொழும்பு | 5000. 00 |
| சுகந்தினி சிவப்பிரகாசம் | | கொழும்பு- 06 | 2500. 00 |
| செ. சிவனேசன் | | அச்சுவேலி | 4000. 00 |
| சிவதொண்டன் மூலம் செல்வி V. யோகபூசணி யோகானந்தன் நினைவாக | | | 10000. 00 |
| வேணி ஸ்ரோர்ஸ்மூலம் சிவலிங்கராசா கொழும்பு பொருட்கள் வகையில் | | | 15000. 00 |

(தொடரும்...

அக்கிரமக்காரன் முகத்தில் விழித்தால் அக்கணமே பாவம்.

# தகப்பன் சாமி

## வாரியார் சுவாமிகள்

*சிவத்தின் சாமி:*

சிவம்- நன்மை, மங்கலம். உயிர்களுக்கு நன்மையே புரிகின்றவன் முருகன். ஆதலில் சிவத்தின் சாமி.

"சாமி" என்ற சொல்லுக்கு உடையவன் என்பது பொருள். ஸ்வம்- சொத்து. உலகங்களையும் உயிர்களையும் உடமையாக உடையவன் முருகன். வடமொழி நிகண்டில் முருகவேள் பெயர்த்தொகுதி "சுவாமி" என்று பேசுகிறது. எனவே, "சுவாமி" என்ற சொல் முருகவேளுக்கு உரியது. ஏனைய தேவர்களைச் சுவாமியென்று அழைப்பது உபசார வழக்கு என்க.

*"தேவசேனாதிபதிச் சூர சுவாமி கஜமுகானுஜ'*

ஆதலினால், அண்ட கோடிகள் அனைத்துந் தனிப்பெருந் தலைவர் முருகவேள் ஒருவரே எனவுணர்க. உடையவர் தமது உடமைகட்கு நன்மையே புரிவது இயல்புதானே.

*மயில்மிசை நடிக்குஞ்சாமி:*

அறுபத்து நான்கு கலைகளில் நனி சிறந்தது நடனக்கலை. அந்த நடனக்கலைக்குத் தலைவர் நடராஜமூர்த்தி. எண்பத்துநான்கு நூறாயிர யோனி பேதங்களுள் இயற்கையாகவே ஒருவர் கற்றுக்கொடுக்காமலேயே ஆடவல்லது மயில் ஒன்றேயாம். அதனை வாகனமாகக் கொண்டு, மயிலும் ஆட, அதன் மிசை தாமும் ஆடி அருள்புரிகின்றார் குன்றுதோறாடிய குமரக்கடவுள்.

*எமதுளே சிறக்கும் சாமி:*

அடியவர் உள்ளக் கோயிலில் இறைவன் விளங்கித் தோன்றுகின்றான். அல்லாதார் உள்ளத்தில் பாலில் நெய்போல் மறைந்திருப்பான். அடியார் உள்ளத்தில் தயிரில் நெய்போல் விளங்கித் தோன்றுவான். ஏனைய அடியவர்களையும் உடன்படுத்தி எமது என்று பன்மையில் கூறியருளப்பட்டது.

*சொருபமி தாளிகாண செழிக்குஞ்சாமி:*

இறைவன் ஒளிவடிவாகத் திகழ்கின்றனன். "சுடரொளியதாய் நின்ற நிட்கள சொருபமுதல் ஒரு வாழ்வே" என்று பிறிதொரு திருப்புகழில் கூறுகின்றார்.

"பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாக" என்பது கந்தபுராணத் திருவாக்கு.

*பிறவியை ஒழிக்குஞ் சாமி:*

"பெம்மான் முருகன் பிறவா னிறவான்" என்ற கந்தரநுபூதித் திருவாக்கின்படி முருகவேள் பிறப்பில்லாதவர். பிறப்பில்லாத ஒருவரே ஆன்மாக்களின் பிறவியை ஒழிக்க வல்லவராவார். ஏனைய தேவர்கள் பிறப்பிறப்புடையவர்கள்.

*"செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள*
*செங்கீரை யாடியருளே"*

*-குமரகுருபரர்-*

*பவமதை தெறிக்குஞ் சாமி:*

பிறவிக்குக் காரணம் ஆன்மாக்கள் செய்த பாவமேயாகும். அப் பாவ வினைகளைப் பொடிப்படுத்திப் பிறவாமையை வழங்குங் கருணைக் கடவுள் கந்தப்பெருமான் என்க.

*முனிவர்களிடமேவும் தவத்தின் சாமி:*

முனிவர்- நினைப்பவர். நினைக்கவேண்டியதை நினைப்பவர்கள். அவர்கள் இடையறாது தவநெறியில் நிற்பார்கள். அத்தவத்துக்கு அருள் புரிபவர் தயாநிதியாகிய எந்தை கந்தவேள்.

*புரிபிழை பொறுக்கும் சாமி:*

ஆன்மாக்கள் அறியாமையால் புரியுங் குற்றங்களைக் கடவுளாகிய கந்தநாயகன் எல்லையில்லாத கருணையினால் பொறுத்தருளுவார்.

பயனில்லாத சொற்களைக் கூறுவதும், பொய் புகலுதலும், புறங்கூறுதலும், கடுஞ்சொற்களைக் கழறுதலும் வாக்கினால் வரும் பிழைகள்.

பொறாமை, காமம், கோபம், பகை முதலியவைகள் மனத்தினால் வரும் பிழைகள்.

பிறர் மனைவியரை விரும்பிப் பார்த்தல்; பெரியோர்களை அவமதித்துக் காணல்; கடவுளது திருவுருவங்களை அலட்சியமாகப் பார்த்தல் முதலியவைகள் கண்களினால் வரும் பிழைகள்.

தெய்வ நிந்தனை, வேத நிந்தனை, அடியவர் நிந்தனை முதலியவைகளைக் கேட்டல் செவியினால் வரும் பிழைகள்.

இத்தகைய பிழைகள் அறியாமையினால் நிகழ்ந்துழி அவைகளை ஆண்டவன் பொறுத்தருளுவான். அறிந்தபின் மீண்டும் மீண்டும் இப்பாவங்களைச் செய்தல் கூடாது.

*சொல்லால் வரும்குற்றஞ் சிந்தனை யால்வருந் தோடஞ்செய்த*
*பொல்லாத தீவினைப் பார்வையில் பாவங்கள் புண்ணியநூல்*
*அல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குகள் ஆயவும்மற்று*
*எல்லாப் பிழையும் பொறுத்தரு ளாய்கச்சி ஏகம்பனே*

*-பட்டினத்தார்-*

*குடிநிலை தரிக்குஞ் சாமி:*

இல்லறமாகிய நல்லறத்தில் நின்று விருந்தோம்பிப் பொய், கொலை, களவு முதலிய குற்றங்களைக் கடிந்து, அன்பு, அறன் என்ற இரு கண்களையுடையவராகி நிற்கும் குடிகளை நன்கு தாங்கி வள்ளி மணவாளன் அருள்புரிகின்றான்.

*அசுரர்கள் பொடியாகச் சிதைக்குஞ் சாமி:*

தீமைகட்கு உறைவிடமாகிய அரக்கர்கள் பொடியாகுமாறு மெய்ஞ்ஞான வீரமூர்த்தியாகிய விமலன் அழித்தருளினான்.

*எமை பணி விதிக்கும் சாமி:*

இறைவர், அடியார்கள், ஒவ்வொருவருக்கும் அவரவர்கட்குத் தக்க பணிவிடைகளை நியமித்தருளுவார்.

*தகப்பன் சாமி:*

தகப்பனாருக்கு பிரணவ மந்திரத்தின் உட்பொருளை உபதேசித்த ஞான குருபரன் ஆதலின் முருகவேள் தகப்பன் சாமி எனப் புகழ் பெற்றார்.

ஆசிரியரிடம் அறநூல்களை முறைப்படி படியாமலும், தாய் தந்தையருக்கு கீழ்ப்படியாமலும், அடங்காப் பிடாரிகளாகத் திரியும் மூடப் பிள்ளைகளைத் "தகப்பன் சாமியாகிவிட்டான்" எனச் சிலர் அறியாமையால் கூறுகின்றனர்.

*"தழைத்த சாத்திர மறைபொரு ளறிவுள*
*குருக்கள் போல்சிவ நெறிதனை யுடைவொடு*
*தகப்ப னார்க்கொரு செவிதனில் உரைசெய்த*
*முருகவித் தகவேளே"*

*-திருப்புகழ்-*

புத்ரகுரு, சுவாமிநாதன், குழந்தைக்குரு, குமரகுருபரன், தகப்பன் சாமி என்று அறுமுகப் பெருமானை அடியவர் புகழ்வர்.

---

ஆச்சிரமத்தினால் முதியோர் வாரத்தையொட்டியும், தீபாவளிப் பண்டிகை நாளையும் கருத்திற்கொண்டும் சந்நிதி ஆலயத்தைச் சூழவுள்ள 70 முதியோர்கட்கு துவாய், வேட்டி, சேலை, போர்வை முதலியன வழங்கப்பட்டன.

---

# கந்தசஷ்டிகால விஷேடநிகழ்வு

# (29.10.2008 - 03.11.2008)

கந்தசஷ்டிகால விஷேட நிகழ்வாக தினசரி மாலை 6.30 மணியளவில் ஆச்சிரம மண்டபத்தில் "**கந்தபுராணமும் ஆறுபடை வீடும்**" எனனும் பொருளில் **செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல்** அவர்கள் தொடர் சொற்பொழிவாற்ற உள்ளார்.

**இன்சொல்லின் விலை அற்பம், ஆனால் அதன் மதிப்போ அதிகம்.**

உ

(தொடர்ச்சி...

# ஔவையார் அருளிச்செய்த ஆத்திசூடி

## மூலமும் உரையும்

*40. கைவினை கரவேல்.*

ப-ரை. கைவினை- (உனக்குத் தெரிந்த) கைத் தொழிலை, கரவேல்- நீ (சமயத்திலே) ஒளியாதே.

*41. கொள்ளை விரும்பேல்.*

ப-ரை. கொள்ளை- (பிறருடைய பொருளைக்) கொள்ளையிடுவதற்கு, விரும்பேல்- நீ ஆசைப்படாதே.

*42. கோதாட்டு ஒழி.*

ப-ரை. கோது- குற்றம் பொருந்திய, ஆட்டு- விளையாட்டை, ஒழி- நீ நீக்கு.

*43. சக்கர நெறி நில்*

ப-ரை. சக்கரநெறி- (அரசனுடைய ஆஞ்ஞையாகிய) சக்கரம் செல்லும் வழியிலே, நில்- (நீ அடங்கி) நில் (அரசனுடைய கட்டளைக்கு அமைந்து நட என்பது கருத்து.)

*44. சான்றோர் இனத்து இரு.*

ப-ரை. சான்றோர்- அறிவினாலே நிறைந்தவர்களுடைய, இனத்து- கூட்டத்திலே, இரு- (நீ எந்நாளும் சேர்ந்து) இரு.

*45. சித்திரம் பேசேல்*

ப-ரை. சித்திரம்- மெய்போலத் தோன்றும் பொய் மொழிகளை, பேசேல்- நீ பேசாதே.

*46. சீர்மை மறவேல்.*

ப-ரை. சீர்மை- புகழுக்கு ஏதுவாகிய குணத்தை, மறவேல்- நீ மறந்துவிடாதே.

*47. சுளிக்கச் சொல்லேல்.*

ப-ரை. சுளிக்க- (கேட்பவர்) கோபிக்கும்படியாக, சொல்லேல்- (நீ ஒன்றையும்) பேசாதே.

*48. சூது விரும்பேல்.*

ப-ரை. சூது- சூதாடலை, விரும்பேல்- (நீ ஒருபோதும்) விரும்பாதே.

*49. செய்வன திருந்தச் செய்.*

ப-ரை. செய்வன- செய்யுங் காரியங்களை, திருந்த- செவ்வையாக, செய்- நீ செய்.

*50. சேரிடம் அறிந்து சேர்.*

ப-ரை. சேர்இடம்- அடையத்தகும் (நன்மையாகிய) இடத்தை, அறிந்து- தெரிந்து, சேர்- நீ அடை.


(தொடரும்...

உ

(தொடர்ச்சி...

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



ஏற்கனவே தூரத்திலிருந்து பார்க்கின்றபொழுது தனது கடை எரிந்திருப்பதைக்கண்டு லோகநாதன் மிகுந்த வேதனையுடன் தனது கடையை அண்மித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அங்கே அவர் கண்ட அந்தக்காட்சி அவரைத் திடுக்கிட வைத்தது. ஆம் அங்கே ஒருவர் இறந்துகிடப்பது மட்டுமல்ல அவர் நீல நிறச்சேட்டையும் அணிந்திருப்பதுதான் லோகநாதன் நிலைகுலைந்து போனதற்கான காரணமாகும்.

லோகநாதனுடைய கடையின் பங்காளியான மகாலிங்கமும் அன்றைய தினம் காலையில் நீலநிறச் சேட்டைத் தானே அணிந்திருந்தார்கள். காலையில் தன்னையும் மகாலிங்கத்தையும் அதிரடிப் படைப் பொலிசார் கடைக்குள் இருந்து நடுறோட்டிற்கு இழுத்துவந்து தாக்கத் தொடங்கியபொழுது மகாலிங்கம் தன்னை விடவும் கடுமையான தாக்குதலுக்குட்பட்டு மிகுந்த வேதனைப்பட்டுக் கொண்டிருந்ததை லோகநாதன் அவதானித்திருந்தார்கள். அதன் பின்பு ஏற்பட்ட அசம்பாவிதங்களின்போது தன்னைப் போலவே மகாலிங்கமும் பாதுகாப்புத்தேடி அந்தப்பகுதிக்குள் எங்கேயாவது மறைந்திருப்பார் அல்லது அந்தப் பகுதியை விட்டு வேறு எங்கேயாவது சென்றிருப்பார் என்றே லோகநாதன் அவர்கள் சிந்தித்திருந்தார்கள்....

ஆனால் இப்பொழுது இங்கே நீலநிறச் சேட் அணிந்திருக்கின்ற ஒருவர் தனது கடைக்கு முன்பாக இறந்து கிடப்பதைக் கண்ணுற்ற நிலையில் லோகநாதன் துடித்துப்போனார்கள். அவலங்களும் அழிவுகளும் நிறைந்திருந்த அந்தச் சூழ்நிலையில் ஏற்கனவே பதட்டத்துடன் காணப்பட்ட லோகநாதன் மிகுந்த பயத்துடனும் பதட்டத்துடனும் மெதுமெதுவாக அந்த உடலுக்குக்கிட்டே சென்றார்கள். உடலுக்குக்கிட்டே சென்றுவிட்ட நிலையிலும் அதனை யார் என்று அடையாளம் காணமுடியாத லோகநாதன் வேறுவழியின்றி குப்புறக்கிடந்த அந்த உடலின் முகத்தை மெதுவாகத் திருப்பிப்

காரியத்தில் உறுதியாயிருப்பதுதான் வெற்றியின் இரகசியம்.

பார்த்தார்கள். ஆம் அவர் எதிர்பார்த்தது போல அது மகாலிங்கம் அல்ல என்பதைக் கண்ணுற்றபொழுதுதான் அவருடைய பதட்டம் தணிந்து மனதில் ஆறுதலும் திருப்தியும் ஏற்பட்டது.

இப்பொழுது லோகநாதனுடைய பதட்டம் ஓரளவு குறைந்துவிட்டாலும் தான் நம்பிக்கையுடன் கட்டி எழுப்பிக்கொண்டிருந்த வியாபார ஸ்தாபனம், அதற்குள் இருந்த உடமைகள் தொடர்பாக அவருக்கு ஏற்பட்டிருந்த அந்தக் கவலை இப்பொழுதும் அவரது அடிமனதில் அலைமோதிக்கொண்டுதான் இருந்தது.

அங்கே முழுமையாகவும் அரை குறையாகவும் எரிந்துகொண்டிருக்கின்ற வியாபார ஸ்தாபனங்களில் தமது வியாபார ஸ்தாபனமும் ஒன்றாக இருப்பதை ஏற்கனவே தூரத்திலிருந்து லோகநாதன் அவதானித்திருந்தார்கள். ஆனால் அங்கே கடையின் முன்பாக இறந்த உடலைக் காண நேர்ந்ததால் ஏற்பட்ட பதட்டத்தால் கடைக்குள்ளே அப்பொழுது அவரால் செல்லமுடியவில்லை.

ஆனால் இப்பொழுது அவரது சிந்தனை முழுவதும் தனது கடை பற்றியதாகவே இருந்தது. புகைந்து கொண்டிருக்கின்ற தனது கடை வாசல் வழியாக மெதுவாக கடைக்கு உள்ளே புகுந்தார்கள். என்ன ஆச்சரியம் வெளியே உள்ள கடை முகப்பு எரிந்துவிட்ட நிலையிலும் கடைக்கு உள்ளே ஒரு சிறிய பகுதிமட்டும் எரிந்தநிலையிலும், மிகுதியாக உள்ள கட்டிடப் பகுதிகளும், அந்தப் பகுதிக்குள் இருந்த அனைத்து வியாபாரப் பொருட்களும் அப்படியே பாதுகாப்பாக இருக்கின்ற அதிசயத்தை அவதானித்தார்கள். ஆம் அவரது உள்ளத்தில் அளவில்லாத மகிழ்ச்சியும் நின்மதிப் பெருமூச்சும் ஏற்பட்டது. கடைமுகப்பு எரிந்து முகப்பின் உள்ளேயும் கடைத்தொகுதியின் ஒரு பகுதி எரிந்த நிலையில் அந்தத் தீயின் பெரும்பகுதி அணைந்து சிறிய அளவில் மட்டும் புகை வந்து கொண்டிருப்பதை லோகநாதன் அவதானித்தார்கள். உடனடியாகவே தண்ணீரைக்கொண்டு வந்து புகைந்து கொண்டிருந்த அந்தப் பகுதியில் ஊற்றித் தொடர்ந்து நெருப்புப் பரவாமல் இருப்பதற்குரிய எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள்.

அங்கே கடைக்கு உள்ளே புகைந்துகொண்டிருந்த அந்தப் பகுதிக்கு அண்மையிலேயே பொங்கல் விற்பனைக்காக வாங்கி வைத்திருந்த வெடிபொருட்களும் வைக்கப்பட்டிருந்தன. உண்மையில் கடைமுகப்பில் ஏற்பட்ட தீயின் வேகம் சிறிது அதிகரித்திருந்தால் அல்லது அந்தத் தீ தொடர்ந்து எரிந்து சென்றிருந்தால் கடைக்குள் இருந்த வெடிபொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களிலும் தீ பரவி கடையும் முழுமையாகவே நாசமாகி இருக்கும்.

ஆம் சாமியார் கூறியபடி லோகநாதன் "ஓம்" என்று சுண்ணாம்பினால் கடைக்குள் நிலத்தில் எழுதிய அந்தப் பகுதியும் அதற்குப் பின்னால் உள்ள பகுதிகளும் எந்தவிதப் பாதிப்புக்களுமின்றிப் பாதுகாப்பாக இருப்பதை அவதானித்த லோகநாதன் நடந்தேறியிருப்பது அற்புதமான செயல் என்பதை நன்கு உணர்ந்து கொண்டார்கள்.

பொங்கற் செயற்பாட்டை தாம் காலையில் ஆரம்பித்த நேரம் முதல் அங்கே இடம்பெற்ற ஒவ்வொரு சம்பவங்களையும் மீட்டுப்பார்த்த லோகநாதனுக்கு அவை ஒவ்வொன்றுமே வாழ்க்கையில் என்றும் மறக்கமுடியாத நிகழ்வுகளாக

அமைந்துவிட்டதை உணர்ந்து கொண்டார்கள். அதுமட்டுமல்ல இந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றும் அர்த்தம் நிறைந்தவையாகவும் தனது வாழ்க்கைப் பாதைக்கு பாடம் புகட்டுபவை போலவும் இடம் பெற்றுள்ளதையும் சிந்திக்கத்தலைப்பட்டார்கள்.

இவ்வாறு தைப்பொங்கல்த் தினமான அன்று காலையிலிருந்து பல்வேறு சம்பவங்களுக்கு உட்பட்டு பல்வேறு உணர்வுகளுக்கு முகம் கொடுத்த லோகநாதன் அவர்கள் தனது உடலும் உள்ளமும் சோர்வடைந்து விட்டதை நன்கு உணர்ந்துகொண்டார்கள். இப்பொழுது அமைதியையும் ஓய்வையும் அவரது உள்ளம் நாட ஆரம்பித்தது. ஆம் கனகாம்பிகைக் குளத்திலுள்ள தனது தாயாரிடமும் அங்கே தனது மைத்துனர் பரமலிங்கத்தினுடைய வீட்டில் தங்கியுள்ள சாமியாரிடமும் செல்லவேண்டுமென்று அவரது மனம் ஏவியதால் லோகநாதன் அவ்விடத்தில் இருந்து புறப்பட ஆயத்தமானார்கள்.

அதேநேரம் கரடிப்போக்குச் சந்தியில் இவ்வாறு பெரிய அனர்த்தங்களும் உயிர் இழப்புக்களும் ஏற்பட்ட இந்த விடயம் கனகாம்பிகைக் குளம் உட்பட கிளிநொச்சி முழுவதிலும் காட்டுத்தீபோலப் பரவி பதட்டமான சூழ்நிலையைத் தோற்றுவித்தது. லோகநாதனுடைய தாயார் தனது மகனுக்கு என்ன நடந்ததோ ஏது நடந்ததோ எனத்தெரியாது மிகுந்த கலக்கத்துடனும், கவலையுடனும் தனது வீட்டில் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த நிலையில் முக்காலத்தையும் உணர்ந்தவரான அந்தச் சாமியார் கனகாம்பிகைக் குளத்தில் தான் தங்கியிருந்த பரமநாதனுடைய வீட்டிலிருந்து லோகநாதனுடைய தாயாருடைய வீட்டிற்குச் சென்றார்கள். லோகநாதனுடைய தாயாரை நோக்கி "அம்மா நீங்கள் கவலைப்பட வேண்டாம் உங்கள் மகன் ஒருவாறு தப்பிப்பிழைத்து இப்பொழுது அங்கேயிருந்து வந்துகொண்டிருப்பான் இன்னும் சிறிது நேரத்தில் இங்கே வந்து சேர்ந்துவிடுவான்" என லோகநாதனுடைய தாயாரை ஆறுதற்படுத்திவிட்டு மீண்டும் பரமலிங்கத்தினுடைய வீட்டை சாமியார் வந்தடைந்தார்கள்.

சாமியார் குறிப்பிட்டதுபோல கரடிப் போக்குச் சந்தியில் ஏற்பட்ட அசம்பாவிதங்களில் தப்பிப்பிழைத்த லோகநாதன் அவர்கள் அங்கிருந்து நேரே சாமியார் தங்கியிருந்த வீட்டை வந்தடைந்தார்கள். லோகநாதனை எதிர்பார்த்து சாமியார் பரமலிங்கத்தினுடைய வீட்டில் சாமி அறையில் லோகநாதனுக்காக மேற்கொண்டிருந்த செயற்பாடுகளும் அது மட்டுமல்ல லோகநாதனை சாமி அறைக்குள் அழைத்து சாமியார் அவருக்குச் செய்த செயற்பாடுகளும் லோகநாதனுக்கு மிகுந்த ஆச்சரியத்தையும் அதேநேரம் அளவிடமுடியாத பக்தி உணர்வினையும் ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. லோகநாதனுடைய கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்ப அவரது உடல் அவரை அறியாமலே புல்லரிக்கத் தொடங்கியது. ஆம் லோகநாதன் மட்டுமல்ல நாம் அனைவருமே ஆச்சரியப்படக் கூடியதான அந்தச் செயற்பாடு என்ன என்பதையும் அந்தச் சாமியார் யார் என்ற விடயங்களையும் இறுதி அத்தியாயமான அடுத்த அத்தியாயத்தில் அடியார்களுக்கு வெளிப்படுத்துகின்றோம். (தொடரும்...

சத்தியத்தை வளைக்கலாம் முறிக்க முடியாது.

# மதுரை கள்ளழகர் கோயில்

## அழகர் ஆற்றில் இறங்கும் பெருவிழா

திரு வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்

எல்லோருக்கும் ஐப்பசியில் தீபாவளி வரும். ஆனால், மதுரை வாசிகளுக்குச் சித்திரையிலும் ஒரு தீபாவளி. அழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவத்தை அந்த அளவுக்கு மிக விமரிசையாக கொண்டாடி வருகிறார்கள் இவர்கள். திருவிழா நடைபெறும் பத்துநாட்களும் ஊரே திமிலோகப்படும். மதுரை மற்றும் சுற்றிலுமுள்ள ஊர்களில் இருந்து குடும்பத்துடன் புறப்பட்டுவந்து சேருவார்கள் மக்கள். சுமார் பத்து இலட்சம் பேருக்கு மேல் ஒரே இடத்தில் கூடும் திருவிழா இது.

கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவத்தைச் சொல்வதற்கு முன்னர் அவர் குடிகொண்டிருக்கும் அழகர் மலையின் சிறப்பை அவதானிக்க வேண்டும். மதுரைக்கு வடக்கே சுமார் 20கி.மீ தொலைவில் அழகர் மலை கம்பீரமாகக் காணப்படுகிறது. அழகர் மலையில் உள்ள இந்தக் கோயிலை விஸ்வகர்மா (தேவலோகச் சிற்பி) கட்டியதாக ஸ்தல புராணம் கூறுகிறது. தூரத்துப் பார்வைக்கு அழகர்மலை ஒன்றுபோலத் தெரிந்தாலும் அதைச்சுற்றி ஏழுமலைகள் சூழ்ந்திருப்பதாக ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள். சிலப்பதி காரத்தின் "காடுகாண் காதை" யிலும் அழகர்மலைபற்றிக் குறிப்பிடப்படுகிறது.

எங்கும் இல்லாத சிறப்பாக கள்ளழகராக அவதாரம் எடுத்து எழுந்தருளிய சுந்தரராஜப்பெருமாள் சங்கு, சக்கரம், வில், வாள், கதை என பஞ்சாயுதங்களுடன் காட்சிதருகிறார். உற்சவர் "அபரஞ்சி" எனப்படுகின்ற அரியவகை தங்கத்தினாலானவர். அதனால் பெருமாளையும் தேவலோகப் பெருமாளாகவே பூஜிக்கிறார்கள். கர்ப்பக்கிரகத்தில் மூலவர் சுந்தரராஜப் பெருமாள் ஸ்ரீதேவி- பூமாதேவியுடன் காட்சி தருகிறார். மூலவருக்கு மேலே உள்ள விமானத்துக்கு மதுரையை ஆண்ட சுந்தரபாண்டியன் தங்கத்தகடு பொருத்தியுள்ளான். பின்னாளில் அது களவாடப்பட்டதால் இப்போது செப்புத் தகட்டுக்கு தங்கமுலாம் பூசி வேய்ந்துள்ளார்கள்.

இரண்டாம் பிரகாரத்தில் வலம்புரி விநாயகர், சோலைமலை நாச்சியார், ஸ்ரீநிவாசன், ஸ்ரீதேவி- பூமாதேவி, யோக நரசிம்மர் ஆகியோர் உள்ளனர். மூன்றாம் பிரகாரத்தில் கருட மண்டபமும் கருடன் சந்நிதியும் உள்ளன. நான்காம் பிரகாரத்தில் ஆழ்வார்கள் சந்நிதிகளும் ஆண்டாள் சந்நிதியும் உண்டு. இந்தப் பிரகாரத்தில் உள்ள பள்ளியறை மண்டபத்தில் திருமலை நாயக்கரால் செய்து தரப்பட்ட, முழுக்க முழுக்க யானைத் தந்தத்தினாலான கட்டில் ஒன்று காணப்படுகிறது.

ஐந்தாம் பிரகாரத்தில் அநுமன், கிருஷ்ணர், இராமர் சந்நிதிகளும், ஆறாவது பிரகாரத்தில் நந்தவனமும், ஏழாம் பிரகாரத்தில் சப்தகன்னியரும், நாராயண

வாவி தீர்த்தமும் இருக்கிறது. ஆடிப்பிரம் மோற்சவத்தின்போது இங்குதான் தீர்த்தத் திருவிழா நடைபெறுகிறது.

அழகர் கோயிலில் மூன்று முக் கிய கோபுரங்கள் உண்டு. ராஜகோபுரம், தொண்டமான் கோபுரம், பரமபதவாசல் கோபுரம் என்பனவே அவை. கோயிலைச் சுற்றிலும் உள்ள பகுதியை "அல்லிக் கோட்டை" என்கிறார்கள். அல்லிக் கோட்டையின் சுற்றுச் சுவர்களும், இடிபாடு களும் இன்றும் காணப்படுகின்றன. கோட்டைச்சுவர் அருகாக 3கி.மீ தூரம் படிப்படியாக மலைமீது ஏறிச்சென்றால் (இடையே முருகனின் ஆறாவது படை வீடான பழமுதிர்ச்சோலையை தரிசிக்க லாம்) அழகர் கோயிலின் முக்கிய அம்சமான தீர்த்தத்தொட்டி வருகிறது. இந்தத் தீர்த்தத்தினை, "கங்கைத் தீர்த்தத் தைக் காட்டிலும் புனிதமான நூபுரகங்கை" என ஆழ்வார்கள் பாடியுள்ளனர். "அப ரஞ்சி" தங்கத்தினாலான மூலவரின் அபி ஷேகத்துக்கு இந்தத் தீர்த்தத்தையே பயன்படுத்துகிறார்கள். அதனால் வற்றாத ஜீவ ஊற்றாக நூபுரகங்கை கொட்டிக் கொண்டே உள்ளது.

சித்ரா பௌர்ணமிக்கு நான்குநாள் முதல் ஆரம்பமாகும் சித்திரைத் திருவிழா வின்போது முதல் இரண்டு நாட்கள் மட்டுமே கோயிலில் இருப்பார் அழகர். மூன்றாம் நாள் தங்கப் பல்லக்கில் மதுரை நோக்கிப் புறப்படுவார். வழியில் பல சிற்றூர் களையும் கடந்து, இரவில் தங்கி, ஐநூறுக்கும் அதிகமான மண்டகப்படிகள்-தண்ணீர்ப்பந்தல்களில் பக்தர்களுக்கு ஆசி வழங்கி, ஐந்தாம் நாள் பௌர்ணமியன்று அழகர் வைகைக் கரைக்கு வந்து சேரு வார். அன்றுதான் அழகர் ஆற்றில் இறங்கும் அழகுமிகு பெருவிழா வேளை யாகும். ஏறக்குறைய பத்து இலட்சம் பேர் ஒரே இடத்தில் ஒரே வேளையில் மதுரை யில் கூடும் பெருவிழா இது.

கள்ளழகர் மக்கள் வெள்ளத்தில் ஆரவார கோஷத்துடன் வைகை ஆற்றில் வர, மதுரை வீரராகவப் பெருமாள் ஆற்றி லேயே எதிர்கொண்டு, இருவரும் மாலை மாற்றி மரியாதை செய்வதுடன் அந்தவிழா நிறைவுபெறும். இந்த விழா மதுரையில் நடைபெறும் மூன்று நாட்களும் மக்கள் கூட்டத்தால் மதுரை மூச்சுத்திணறிப் போகும். திருவிழாவுக்காக மதுரை வந்திறங்கும் வெளியூர் மக்களுக்கு "சாப் பாடு" ஒரு பிரச்சினையாக இருப்பதில்லை. அங்கங்கே மண்டகப்படிக்காரர்கள் வழங் கும் பொங்கல், புளியோதரை மற்றும் தீன் பண்டங்களை வைத்தே அத்தனை இலட் சம்பேரின் பசிக்கு வழிசெய்து விடுகிறார் கள். இதனால், "பேருந்து செலவுக்கு பணமிருந்தால் போதும். வயிற்றுப் பிரச் சினையை கள்ளழகரே கவனித்துக் கொள்வார்" என்று வெளியூர் வாசிகள் பேசிக்கொள்வர்.

மீண்டும், கள்ளழகர் பல ஊர்களி லும் தங்கி அருளாசி வழங்கி, எட்டாம் நாள் காலையில் பூப்பல்லக்கில் மலை நோக்கிக் கிளம்புகிறார். வழிநெடுக பூசை களை ஏற்றுக்கொண்டு 9ஆம் நாள் அதிகாலையில் அழகர் கோயிலைச் சென் றடைவார். 10ஆம் நாள் பயண களைப்பு நீங்க உற்சவ சாந்தி அபிஷேகம் நடை பெறுவதுடன் சித்திரைத் திருவிழாவின் 10-நாள் கொண்டாட்டங்கள் நிறைவுபெற மதுரை மீண்டும் பழைய நிலைக்கு வருகிறது.

பண்பு என்பது நல்லன என்று கூறப்பட்டவற்றைத் தெரிந்துகொள்வதே.

பி.கு:

"வைகை" என்பது ஆற்றின் பெயர் மட்டுமல்ல. வைகுந்தத்தின் "வை", கைலாயத்தின் "கை" இணையும் நட்புவெள்ளம். கள்ளழகர் ஆற்றில் இறங்கும்போது அவருடன் வரும் வைஷ்ணவ அடியார்கள் திருமண்ணுடனும், மீனாட்சியம்மையின் சைவ அடியார்கள் திருநீற்றுடனும் கலக்க, வைகுந்தம்- கைலாசம் கலந்து ஓடும் பக்தி வெள்ளமாக வைகை காட்சி தரும்.

## இரங்கிட வில்லை ஏனோ

உன்னை நாம்மறக் கவில்லை
உற்றதோர் துணைநீ என்று
எண்ணியே தொழுது நின்றோம்
இரங்கிட வில்லை ஏனோ
அன்ன தானக் கந்தன்
ஆன சந்நிதி யானே
இன்னமும் எமக்கு வாழ்வு
ஏனையா விடிய வில்லை

*கவிஞர் வ. யோகானந்தசிவம் அவர்கள்.*

## மறைந்தும் மறையாதவர்

பண்டிதர் க. முத்துவேலு அவர்கள் 1990ஆம் ஆண்டளவில் சந்நிதியான் ஆச்சிரமத்தோடு இணைந்துகொண்டவர். ஆச்சிரமத்தினால் 1993ஆம் ஆண்டு பேரவையை ஆரம்பித்தகாலம்தொட்டு இன்றுவரை பேரவையின் நிர்வாக சபையில் பல படிநிலைகளில் இருந்து கடந்த ஆறு ஆண்டுகளாக உபசெயலாளராகச் செயலாற்றி பேரவையின் வளர்ச்சிக்கு பெரும்பணியாற்றிய பெருந்தகை.

1998ஆம் ஆண்டு பேரவையினால் வெளியீடு செய்யப்பட்டுவரும் ஞானச்சுடர் மலருக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கியவரும் மலரின் சிறப்புக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கியவரும், ஞானச்சுடர் மலர்க் குழுவின் தலைவராகவும் விளங்கி செயலாற்றிய பெருமைக்குரியவர்.

12.10.2008 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்த அமரர் பண்டிதர் க. முத்துவேலு அவர்களது இழப்பானது பேரவையின் ஞானச்சுடர் வெளியீட்டிற்கு ஒரு பேரிழப்பாகவே கருதுகின்றோம். அவரது ஆத்மா சந்நிதிவேற்பெருமானின் பாதாரவிந்தங்களில் கலந்து என்றும் எம்முடன் மறைந்தும் மறையாததாய் விளங்கிக் கொண்டிருப்பார் என்பதில் ஐயமில்லை.

*-சைவ கலை பண்பாட்டுப் பேரவை-*

உ

# கார்த்திகைமாத வாராந்த நிகழ்வுகள்

07-11-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம்:- "இன்னிசை"

வழங்குபவர்:- செல்வி ஷாமினி மனோகரக்குருக்கள்

பக்கவாத்திய சகிதம்

14-11-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"சமயநிகழ்வு"

திருமதி ஆ. நாகேந்திரன் ஆசிரியை

செல்வி த. ஜெயச்சந்திரிகா

யா/ கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம் கரவெட்டி

21-11-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:- "பெரியபுராணம்" (தொடர்)

வழங்குபவர்:- அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

28-11-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 131ஆவது மாத வெளியீடு

## கார்த்திகை- 2008

வெளியீட்டுரை:-திரு க. ஸ்ரீஸ்கந்தராசா G.S அவர்கள்

(சிறுப்பிட்டி)

மதிப்பீட்டுரை:- பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா அவர்கள்

(கோப்பாய் சிவம்)

பதிவு இல. Q.D/60/NEWS/2008

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் 2008

## ஜனவரி

01.01.2008 மார்கழி 16 செவ்வாய்
மங்களப்புத்தாண்டு ஆரம்பம்
15.01.2008தை 1 செவ்வாய்
தைப்பொங்கள்
18.01.2008தை 4 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
22.01.2008தை 8 செவ்வாய்
தைப்பூசம் விசேட உற்சவம் பகல்

## பெப்ரவரி

14.02.2008மாசி 2 வியாழன்
கார்த்திகை உற்சவம்
21.02.2008 மாசி 9 வியாழன்
மாசி மகம்

## மார்ச்

06.03.2008மாசி 23 வியாழன்
மகாசிவராத்திரி விரதம்
விசேட உற்சவம் மாலை 7 மணி
12.03.2008மாசி 29 புதன்
கார்த்திகை உற்சவம்
18.03.2008பங்குனி 5 செவ்வாய்
வருடாந்த சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
21.03.2008பங்குனி 8 வெள்ளி
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமாள் கும்பாபிஷேக தினம்

## ஏப்ரல்

07.04.2008பங்குனி 25 திங்கள்
ஆலய கும்பாபிஷேக தினம்
சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
09.04.2008பங்குனி 27 புதன்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
13.04.2008சித்திரை 1 ஞாயிறு
தமிழ் இந்துப் புத்தாண்டு (சர்வதாரி)
மாலை 6.30 விசேட உற்சவம்
22.04.2008 சித்திரை 8 ஞாயிறு
சித்திரா பூரணை

## மே

06.05.2008 சித்திரை 24 செவ்வாய்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
19.05.2008 வைகாசி 6 திங்கள்
வைகாசி விசாகம், விசேஷட உற்சவம்

## ஜூன்

02.06.2008 வைகாசி 20 திங்கள்
கார்த்திகை உற்சவம்
30.06.2008 ஆனி 16 திங்கள்
கார்த்திகை உற்சவம்

## ஜூலை

03.07.2008 ஆனி 19 வியாழன்
கதிர்காமம் கொடி, பயணப்பூஜை
07.07.2008 ஆனி 23 திங்கள்
தீர்த்தமெடுப்பு
09.07.2008 ஆனி 25 புதன்
ஆனி உத்தரம் விசேட உற்சவம்
13.07.2008 ஆனி 29 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூஜை
14.07.2008 ஆனி 30 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
27.07.2008 ஆடி 12 ஞாயிறு
கார்த்திகை உற்சவம்

## ஆகஸ்ட்

01.08.2008 ஆடி 17 வெள்ளி
ஆடி அமாவாசை
23.08.2008 ஆவணி 7 சனி
கார்த்திகை உற்சவம்
30.08.2008 ஆடி 28 திங்கள்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
இரவு 2.15 கொடியேற்றம்

## செப்டெம்பர்

03.09.2008 ஆவணி 18 புதன்
காலைத்திருவிழா ஆரம்பம்
08.09.2008 ஆவணி 23 திங்கள்
பூங்காவனம்
09.09.2008 ஆவணி 24 செவ்வாய்
கைலாய வாகனம்
13.09.2008 ஆவணி 28 சனி
சப்பறம்
14.09.2008 ஆவணி 29 ஞாயிறு
தேர்
15.09.2008 ஆவணி 30 திங்கள்
காலை - தீர்த்தம்
மாலை - மௌனத் திருவிழா
22.09.2008 புரட்டாதி 6 திங்கள்
பிராயச்சித்த அபிஷேகம்
30.09.2008 புரட்டாதி 19 செவ்வாய்
நவராத்திரி விரதாரம்பம்

## அக்டோபர்

08.10.2008 புரட்டாதி 22 புதன்
சரஸ்வதி பூஜை
09.10.2008 புரட்டாதி 23 வியாழன்
விஜயதசமி
17.10.2008 ஐப்பசி 1 வெள்ளி
கார்த்திகை உற்சவம்
27.10.2008 ஐப்பசி 11 திங்கள்
தீபாவளி தினம்
29.10.2008 ஐப்பசி 13 புதன்
கந்தஷஷ்டி விரதாரம்பம்

## நவம்பர்

04.11.2008 ஐப்பசி 19 செவ்வாய்
சூரசங்ஹாரம்
05.11.2008 ஐப்பசி 20 புதன்
பாரணை, தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்
13.11.2008 ஐப்பசி 28 வியாழன்
கார்த்திகை உற்சவம்

## டிசம்பர்

11.12.2008 கார்த்திகை 26 வியாழன்
திருக்கார்த்திகை உற்சவம்
குமாராலய தீபம்
14.12.2008 கார்த்திகை 29 ஞாயிறு
ஆண்டியப்பர் பூஜை

சுபமங்களம்
நன்றி